மங்கை

அணா எட்டு

மார்ச் 1948

பெண்களின் மாதப் பத்திரிகை

வண்டாருந் தேனிறைந்து
வண்ணமுடன் பூத்த மலர்

கலியாண விசேஷங்களுக்கும்,
திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த
எங்கள்



"போட்டோ மார்க்"

சேலைகள்

கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை
4. ஸ்ரீ பால முருகன் அண் கோ. 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ் 119 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுக்கல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ. ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு
7. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
8. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், 150, ராஜாமில்ரோடு, பொள்ளாச்சி.

(N. B.) *40, 60, 80, நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,*
பிரிண்டட் வாயல் சேலை தினுசுகளுக்கும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல்
32, லக்ஷ்மிபுரம் 3-வது தெரு, மதுரை

சக்தி வாய்ந்த நூல்கள்

காந்தி மகான் கதை: கொத்தமங்கலம் சுப்பு

மகாத்மா காந்தியடிகள்-நம்மை அடிமை வாழ்விலிருந்து விடு வித்த சரித்திரத்தை நாட்டுப் பாடல் வடிவத்தில் பாடியிருக் கிருர். அழகான அட்டைப் படம்—உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

சக்தி பிறக்குது: சுரபி

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள். அருமையான பதிப்பு.

விலை அணா: ஆறு — தபால் செலவு தனி

லெனின் பிறந்தார்: ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்ருல் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிருர். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப் பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்ரும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு:

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும்: மு. அருணுசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. மூன்றேமுக்கால் — தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை—14.

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 7

பிரார்த்தனை ... தலையங்கம் 5
அவர்கள் இணைந்தார்கள் ... மீராபென் 7
அன்புருவே வாராயோ ... வித்வான் வை. செல்லம்மாள் 9
சிருஷ்டி ... ஸ்ரீமதி ராமன் 11
தாத்தாவின் கடிதங்கள் ... ஸ்ரீ 14
சகோதரிகளின் சந்தேகங்கள் ... அன்னபூரணி 15
வழி காட்டும் ஒளி ... பல்குநன் 17
நமது கடமைகள் ... ஜெயஸ்ரீ 19
எதிர்பாராதது! ... "கல்பனா" 37
பொங்கலுக்குப் பின் ... திருப்புகழ் மணி 46
சுந்தரியின் கதை ... 'பெண்மணி' 47
குறவஞ்சி ... வித்வான் ஏ. கே. பாலாம்பிகை 55
காணி நிலம் (தொடர் நாவல்) ... ய. லக்ஷ்மி நாராயணன் 60
ராஜகுமாரன் கருணாகரன் ... காமு 65
காணாமற்போன காசுமாலை ... ராதா சகி 67
பெண் உலகம் ... ருக்மிணி 70
இராவணன் தவறு ... ரஞ்சனா 73
அழகுக் குறிப்புகள் ... குமாரி சியாம் 77

✲

1948 மார்ச்

சக்தி

197647

சக்தி காரியாலயத்தின்

புதிய வெளியீடு

சுதந்திரம்

வாரப் பத்திரிகை

புது வருஷப் பரிசாக தமிழ்
மக்களுக்கு அளிக்கிறோம்

★

அறிஞர், வ. ரா.

ஆசிரியராக இருக்க இசைந்துள்ளார்

விலை அணு ஒன்று

விபரங்களுக்கு:

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14.

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2	சென்னை, மார்ச் 1948	பகுதி 7

பிரார்த்தனை

●

அஹிம்சை, அன்பு, சேவை என்ற மூன்று பொக்கிஷங்கள் மகாத்மாவின் அஸ்தியிலும் பொதிந்து கிடந்தன. அந்த அஸ்தியைத் திருவேணி சங்கமத்தில் மாத்திரம் கரைக்காமல் இந்தியா பூராவிலும்—ஏன் உலகம் பூராவாகவும்—உள்ள தீர்த்தங்களில் கரைக்கப்பட்டுள்ளது என்பது எல்லா சகோதரிகளும் அறிந்த விஷயம். ஆறு, குளம், சமுத்திரம் முதலாக எல்லா ஜீவராசிகளும் அப் புனிதமான நீரைப் பருகி பயனடைவதோடல்லாமல் அஹிம்சையைக் கடைபிடிப்பதோடு அன்புடன் கூடிய சேவையும் புரிய அப் புனித நீர் பலம் கொடுக்கும் என்பதற்கையமில்லை.

இன்று காலை தோட்டத்தைச் சுற்றி வரும் போது இலையைத் தின்று கொண்டிருக்கும் ஒரு சிறு புழுவை ஒரு வெட்டுக் கிளி குறி பார்த்து விழுங்கி விட்டது. நான் கண் சிமிட்டாமல் கவனித்துக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ ஒரு ஓணான் தாவி வந்து அந்த வெட்டுக் கிளியைப் தீர்த்துவிட்டது. 'பாவமே' என்று நான் சொல்லி முடிப்பதற்குள் என் பையன் வளர்க்கும் பூனை குதித்தோடி வந்து ஓணானை கௌவிக் கொண்டு ஓடும் போது நான் வளர்க்கும் நாய் அந்தப் பூனை மேல் பாய்ந்தது. பூனைக்கு கெடுதி யொன்றும் ஏற்படக் கூடாதே என்று எண்ணி என் பையன் நாயை விரட்டினான். நாயின் மேல் பிரியமுள்ள நான் என் பையன் முதுகின் மேல் பளீரென்று ஒரு அறை வைத்தேன். அவன் 'விம்மி'க் கொண்டே ஓடிவிட்டான். ஸ்தம்பித்து நின்று கொண்டு ஒரு க்ஷணம் அந்த பூச்சி தின்ற இலையை உற்று நோக்கினேன். பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த உடல் எருவாக மாறி அந்த இலைக்குத்தானே ஆகாரமாகப் போகிறது. ஆறறிவு படைத்த நாமே இப்படி சினத்துடன் நடந்து கொண்டோமே என்பது புலனாயிற்று. எளியோரை வலியோர் ஹிம்சிக்கும் இக் கொடிய விஷ வட்டத்தை வேரோடு களைந்தெறியத்தானே மகாத்மா காந்தி தோன்றினார். நம் மனத்துள்ளே

இருக்கும் கோயிலைத் திறந்து விட்டார். நம்முள்ளே ஒன்றிக் கொண்டிருக்கும் ஈசனை யாமறிய வைத்தார்.

மோரிலுள்ள வெண்ணெயைப் போலும், சங்கிலியைப் போலும் அஹிம்சையையும் அன்பையும் சேவையெனும் சங்கிலியால் இணைத்திருக்கிறார். ஒரு கையை பின்னால் மறைய வைத்துக்கொண்டு மற்றொரு கையால் சலாம் செய்வது இதர நாட்டாரின் வழக்கம். பின்னிருக்கும் கையில் என்ன மாதிரி துப்பாக்கி ஒளிந்துகொண் டிருக்குமோ அது பகவானுக்குத்தான் தெரியும்.

ஆனல் அன்பே உருவான அண்ணல் முருகக் கடவுளின் வேலைப் போன்று இரு கரங்களையும் சிரத்தின் மேல் தூக்கி 'உன்னை ஹிம்சிக்க என்னிடம் ஒரு ஆயுதமும் இல்லையப்பா! இதோ உனக்கு இரு கைகளையும் காட்டிவிட்டேன்' என்று 'ராமா வென்னும் அன்பு மொழிகளுடனே சாய்ந்தார் மகாத்மா. அவருடைய ஹிருதயத்திலிருந்து பாய்ந்தது குருதி வெள்ளம். அன்பும் பண்பும் அற்று பேதமாய்த் திரிந்தவருள்ளத்தே ஒற்றுமையும் கருணையும் ஊற்றெடுக்கும் வண்ணம் பிரார்த்தனையின் வலிமையால் செய்துவிட்டார். காந்தியம் செழித்தோங்கச் செய்ய பெண்களால்தான் முடியும். குழந்தைகளுக்கு அஹிம்சை, அன்பு சேவை யென்னும் தத்துவங்களைக் கரைத்துப் புகட்ட வேண்டும். உலக மக்களின் சமுதாயம் செழித்தோங்க அன்பு, சேவை, அஹிம்சை இம் மூன்று தத்துவங்களையும் உலகோர் அறியப்பிரசாரம் செய்ய வேண்டும். பிரார்த்தனைகூட்டங்கள்நடத்தி உலகத்தோர் இன்புற்றிருக்கச் செய்வதால் நாம் மகாத்மாவின் ஆத்மாவுக்கு சாந்தி தேடியவர்களாவோம். அமரன் காந்தி வாழ்க. காந்தியம் செழித்தோங்குக!

இந்தியப் பெண்மணிகளே, இந்த நாட்டின் எதிர்காலம் உங்கள் மடியில் இருக்கிறது. ஏனெனில் வரப்போகும் தலைமுறையை நீங்கள் அல்லவா ஊட்டி வளர்க்கப்போகிறீர்கள்? இந்தியக் குழந்தைகளை நேர்மையான தெய்வபக்தியுள்ள, தைரியசாலிகளான ஆண்களாகவும் பெண்களாகவும் நீங்கள் வளர்க்கவேண்டும். உங்களால் வளர்க்க முடியும்.

காந்தியடிகள்

கடவுளை மறக்க முடியாது. காந்தியடிகளையும் மறக்க முடியாது. கடவுளில்லாவிட்டால் மனித சமுதாயமே இல்லை. காந்தியடிகளின் வழி செல்லாவிட்டால் மனித சமுதாயம் உருப்படாது என்று கூறுகிருர் ஸ்ரீமதி மீராபென்.

அவர்கள் இணைந்தார்கள்!

(மீராபென்)

எனக்கு வழிகாட்டிகள் இருவர்தான். ஒருவர் கடவுள். மற்றவர் 'பாபு' (காந்தியடிகள்.) இப்பொழுது கடவுளும் காந்தியும் ஒன்ருக இணைந்து விட்டார்கள்.

காந்தியடிகளின் மரணச் செய்தியை நான் கேள்விப்பட்டதும் என் இதயபீடத்தில் 'பாபு'வின் ஆத்மா இணைந்துவிட்டதாக உணர்ந்தேன். அப்பொழுதே அலாதி அமர உணர்வு பெற்றவளாக நான் மாறிவிட்டதையும் அறிந்தேன்.

'பாபு'வின் பூத உடல் நம்மிடையே நடமாடாவிட்டாலும் அவருடை பரிசுத்த ஆத்மா நம் அண்டையில் இருக்கிறது. சில சமயங்களில் 'பாபு' என்னிடம் சொல்வதுண்டு, 'இந்தப் பூத உடல் அழிந்தாலும் உயிர் விலகி விடாது. நான் உன் அண்மையில் தான் இருப்பேன். உடல் இருப்பதே இடைஞ்சல்தானே,' என்று சொல்லுவார். நான் நம்பிக்கையுடன் கேட்பேன். இப்பொழுது அனுபவ பூர்வமாகவே அவ் வார்த்தைகளின் தெய்வீக உண்மையை அறிகிறேன்.

தீர்க்க தரிசன வாக்கு

'பாபு'வுக்கு என்ன நடக்கும் என்று முன்கூட்டியே தெரியுமா? நான் ரிஷிகேசத்துக்குப் புறப்படுவதற்கு முன்ஞல்—டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் மாலை அவரிடம், 'மார்ச் மாதத்தில் மாட்டுக் கொட்டகைகள் கட்டி முடித்து விடுவார்கள். நீங்கள் திறப்பு விழாவுக்கு விஜயம் செய்து அந்த கஷ்ட ஜீவன்களை ஆசீர்வதிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா? என்று கேட்டேன்.

'நீ என்னுடைய வரவை எதிர்பார்க்க வேண்டாம்' என்று பாபு சட்டென்று சொல்லி விட்டு தனக்குத்தானே முணு முணுக்குந் தொனியில் 'பிணத்தைப் பற்றி சிந்திப்பதில் என்ன பயன்?' என்று சொல்லிக் கொண்டார்.

இந்தப் பதில் கொடுமையாயிருந்ததால் நான் எவரிடமும் சொல்லவேயில்லை. கடவுளை வேண்டியபடி என் மனதிலேயே மறைத்துக் கொண்டேன்.

உண்ணுவிரதம் வெற்றிகரமாக முடிந்தது. முன்னர் எங்களிடையே நடந்த சம்பாஷணைப்படி விபரீதம் ஒன்றும் நடக்காததைப் பற்றி மகிழ்ந்தேன். ஆனல் தீர்க்கதரிசியின் வாக்கு பொய்ப்பதில்லை. தீர்க்க தரிசனம் நிறைவேறி விட்டது.

அந்த துக்ககரமான மாலையில் நான் தியானத்தில் சலனமற்று ஆழ்ந்திருந்தேன். உலகத்தில் ஏதோ ஒரு விபரீதமான அதிர்ச்சி நடைபெறப் போவதாகத் தோன்றியது எனக்கு. மனித ஜாதி பரிசுத்த மடைவதற்காக மீண்டும் ஒரு அவதார புருஷனின் ரத்தக் கறை படிந்துவிட்டது.

இந்தப் பாபகரமான செயலைக் கண்டு உலகம் தாளமுடியாத சஞ்சலத்திலும், துக்கத்திலும் ஆழ்ந்திருக்கிறது.

இப் பாவச் செயல் அவன் ஒருவனுடையது மட்டும் அல்ல. யுக சந்தியில் உலகம் இம்மாதிரி பாபிகளின் மூலம்தான், கடவுளின் அடியார்கள் முடிவை நெருங்க முடிகிறது.

நம் கடமை

'பாபு' வுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை அவர் செய்த காரியங்களைத் தொடர்ந்து செய்வதுதான். நமக்காக, ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் வாழ்ந்தார். உயிர் நீத்தார். அவர் தன்னலமின்றி நமக்காக உழைத்தார். ஒரு அவதார புருஷனுக் மரணமடைந்தார். பகைமையுணர்ச்சி, பேராசை, ஹிம்சை, பொய்மை ஆகிய உணர்ச்சிகளிலிருந்து நம்மை விடுவிக்க அவர் பாடுபட்டார். நாம் நமது பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேட வேண்டுமாயின் 'பாபு' வின் புனித லட்சியமான ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக உழைப்போமாக. பிளாக் மார்க்கட், ஒழுங்கீனம், கெடுதலுக்காதரவு தருவது, போட்டா போட்டி, பொறாமை கொள்வது ஆகிய அக்கிரம அநியாய உணர்ச்சிகளையெல்லாம் தைரியமாகவும், திறமையாகவும் எதிர்த்து அழிக்க வேண்டும். 'பாபு' அன்பும், மிருதுத் தன்மையுங் கொண்டவர்தான். ஆனல் தீமையை எதிர்ப்பதில் மிகவும் பிடிவாதமும் பலமும் உள்ளவர். 'பாபு' தீமையை லட்சியமின்றி எதிர்த்துப் போராடுவது சுலபமாயிருந்ததற்குக் காரணம் அவர் தன்னுள்ளிருந்த தீமையை வென்றதால்தான். கடவுள் நம்முடைய லட்சியத்தில் நாம் வெற்றியடையும் வகைக்கு அருள்புரிந்து நன்னெறியில் நடத்திச் செல்ல வழி காட்டுவாராக.

எவள் சுயநலத்தையே பிரதானமாகக் கருதாமல் தன்னைக்காட்டிலும் எளியவர்களாகவும், அதிர்ஷ்டஹீனர்களாகவும் இருப்பவர்களைப் பற்றி அதிகமாகக் கருதுகிருளோ அவளே கருணையுள்ள சகோதரி ஆவாள்.

காந்தியடிகள்

அன்புருவே வாராயோ

வித்வான் வை. செல்லம்மாள்

அன்புருக் கோலந் தாங்கி
மன்னுயிர்க் கின்னுயிராகி
இன்னலுக் கின்னலாகி
இன்புறு சிந்தையாகி
காந்தஞ் சேர் இரும்பெனவே
கவர்ந்த எம துளமுருக
தீதுசேர் உலகை நீத்து
தெய்வமே! எந்தாய்!! போதியோ

மாக்களாய்க் கிடந்த எம்மை
மக்களின் உருவமாக்க
மையலில் உழன்ற எம்மை
மாந்தரின் வடிவமாக்க
மாதவம் செய்த எம்மான்
மாபெரும் புனிதத் தந்தாய்!
மாநிலம் மயங்கி நிற்க
மகாத்மா! எந்தாய்!! போதியோ

அடிமைத் தளையை நீக்கி
அன்பெனும் தளையைப் பூண்டாய்
சிறந்தவ ராக்க எம்மை
சிறைசென் றவதி யுற்றாய்
அன்னை உருவந் தாங்கி
ஆண்ட எமதுளக் கோவே
ஆரியப் புதல்வா! எந்தாய்!!
அடியார் கதறப் போதியோ

அறம்வளர் உன்னு கமதில்
அரக்கன் விட்ட கணையால்
அன்னை தனின் மடியினில்
அரிதுயில் கொள்ளுதியோ
இன்னலுறும் புதல்வன் தனை
இனியிநக்க வொட்டே னென்று
அன்னை பாரத தேவி
நின்னை அணைந்து நின்றளோ ?

நின்னைப் பிரிந்தெம துள்ளம்
நிலையின்றி உநந்த தம்மா
தாயிழந்த சே யெனவே
தரிக்கும் வழி காணோம் யாம்
வான் நோக்கும் பைங்கூழென
நினை நோக்கும் எமைக் கண்டு
யாமுறும் துயரைக் கண்டு
இரங்கி மனம் வாராயோ !

இந்தக் கட்டுரையாளர் கண்ணை மூடினதும் உலகத்தை சிருஷ்டி செய்யும் கனவைக் காணுகிறுர்! கனவு காணுவதில் கூடவா பஞ்சம் வைக்க வேண்டும் என்று அவர் மிகப் பெரிய கனவைச் சிருஷ்டித்து விட்டார்!

சிருஷ்டி

ஸ்ரீமதி ராமன்

நாளை வரும் 'கிராண்ட் ட்ரங்' மெயிலில் வரும் அண்ணு மன்னி மூன்று குழந்தைகள் முதலியவர்களை என்னமாடாப்பா இந்த ரேஷன் காலத்தில் ஒரு மாதத்திற்கு மேல் வைத்து சம்ரக்ஷணை செய்கிறது என்று ஏக்கம் பிடித்து சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து ஒரு பழைய 'மங்கை'யைப் படித்துக்கொண்டிருந்தேன். கண்கள்தான் பக்கங்களைப் பார்த்துக்கொண்டிருந்தன. மனது என்னமோ புகைவண்டியின் வேகத்தைவிட அதிகமாகச் சிந்தனை உலகில் அலைந்துகொண்டிருந்தது. என் தங்கை ருக்கு என்னிடம் ஓடிவந்து "அக்கா நான் டிரான்ஸ்லேஷன் எழுதியிருக்கிறேன். படிக்கிறேன். கேட்கிருயா" என்ருள். மங்கையை மூடிவிட்டு ருக்கு படிக்கும் 'டிரான்ஸ்லேஷனை' கேட்கலானேன். மிகவும் புத்திசாலித்தனமாக அவள் எழுதுவாள். "சரி ருக்கு படி. கேட்கிறேன்" என்று கூறி சாய்மானத்தில் இன்னும் நன்ருக சாய்ந்துகொண்டு பாதிக் கண்ணை மூடிக்கொண்டு என் தங்கை படிப்பதைக் கேட்கலானேன்.

"ஆரம்பத்தில் கடவுள் ஆகாயத்தையும் பூலோகத்தையும் படைத்தார். மற்றும் உலகம் ரூபமற்றதாகவும் அகண்டும் இருந்தது. கடவுளின் பரிசுத்த ஆவி நீர் மட்டத்தின் மேல் சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

"கடவுள் சொன்னுர்' 'வெளிச்சம் உண்டாகட்டும்' என்று. உடனே வெளிச்சம் தோன்றிற்று. கடவுள் வெளிச்சத்தைக் கண்டார். அது நன்ருயிருப்பதை அறிந்தார். கடவுள் வெளிச்சத்தை இருட்டிலிருந்து பிரித்தார். வெளிச்சத்திற்குப் பகலென்றும் இருட்டிற்கு இரவென்றும் பெயரிட்டார். சாயங்காலமும் காலையுமாகச் சேர்ந்து முதல் நாளாயிற்று.

ஜலாதாரத்தின் நடுவில் நீர் நிலைகளை வேறுபடுத்த ஓர் ஆகாயம் தோன்றட்டுமென கடவுள் ஆக்ஞாபித்தார். அவ்வாறே மேலிருக்கும் மேகங்களையும் கீழிருக்கும் சமுத்திரங்களையும் பிரிக்க ஓர் ஆகாயதளை சிருஷ்டித்தார். அதற்கு சுவர்க்கமென்று பெயரிட்டார். காலையும் மாலையும் சேர்ந்து இரண்டாவது நாளாயிற்று. சுவர்க்கத்தின் கீழுள்ள சகலமான நீர் நிலைகளும் ஒருங்கே சேர்ந்து உலர்ந்த நிலம் தோன்றட்டுமென்ருர் கடவுள். அப்படியே நடந்தேறியது. உலர்ந்த நிலத்திற்குப் பூமியென்றும், ஒருங்கே திரண்ட நீருக்குக் கடலென்றும் பெயரிட்டார்."

ருக்கு மேலே படித்துக்கொண்டே போனுள். ஆனல் என் செவியில் ஒன்றும் ஏறவில்லை. அவள் கிறிஸ்துவின் வேத சாஸ்திரத்தில் உலகத்தின் ஆதிக்கத்தைப் பற்றி சொல்லியுள்ள வாக்கியங்களை மொழி பெயர்த்திருந்தாள்.

அஃது என் மனதை தத்துவாராய்ச்சியில் புகவிட்டது. இத

னல் அண்ணு வருகையும் மறந்து போய்விட்டது. அப்படியே ருக்குவும் என்னை சுற்றியிருந்தவைகளும்.

கடவுளின் ஆதி சிருஷ்டி என் மனக் கண் முன் தோன்றிற்று. இல்லை. கிறிஸ்து வேதத்தில் விவரிக்கப் பட்டுள்ள காக்ஷி. அஃது எம்மாத்திரம் உண்மை யென்பதைக் குறித்து விவாதம் என் மனதில் எழவில்லை. ஆனல் சிருஷ்டியின் விநோதத்தால் மயக்கப்பட்டு பல அறிஞர்கள் கூறியுள்ள வசனங்கள் என் காதில் ஒலித்தன. என்னை யறியாமல் என் கண்கள் மூடிக் கொண்டன.

படார்! அப்பா! என்ன சத்தம். என் காது செவிடாகி விடும்போலிருந்தது. ஒன்றும் பிரமாதமில்லை. ககனமார்க்கத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் பல்லாயிரம் பிம்பங்களில் இரண்டு மோதிக்கொண்டன. அவ்வளவுதான். ஆனல் அவைகளின் அபாரமான பளுவும் வேகமும் சேர்ந்து அவற்றைத் தவிடு பொடி அல்ல, அணுக்களாகச் செய்துவிட்டன. இவ்வணுக்கள் மோதலால் ஏற்பட்ட சக்தியைக் கொண்டே அதிவேகமாகச் சுழன்றன. யான் அணுவிலும் அணுவாக ரூபந்தரித்து அவற்றைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

சுழலும் வேகத்தில் அணுக்கள் ஒன்ருேடொன்று சேர்ந்தன. ஆனல் ரசாயன சம்பந்தத்திற்கானதைவிட அதிக உஷ்ணமாயிருந்ததால் அவை உடனே பிரிந்தன. பிரிந்தவை மற்றும் வேறு அணுக்களோடு சேர்ந்தன. இச்சேர்க்கைக்கு அந்த உஷ்ணம் (டெம்பரேச்சர்) தகுதியாயிருந்தபடியால் அவை பிரியாமல் ஒன்று கூடியேயிருந்தன. இவ்வாறு அணுக்களெல்லாம் பேரணுக்கள் ஆயின.

பல எண்ணற்கரிய அணுக்கள் ஒருங்கே சேர்ந்து சுழல ஆரம்பித்தன. ஈக்கள் ஒரு தேன் கூட்டைச் சுற்றி மொய்ப்பது போல் எனக்குத் தோன்றிற்று. பலசாலி எளியவனைத்துன்புறுத்தி அவனைத் தன்னடிமையாக்கிக் கொள்வதைப் போல் அதிகப் பளுவுள்ள அணுக்கள் லேசான அணுக்களை ஆகர்ஷித்தன. இவ்வாறு பல அணுக்கள் ஒன்று சேர்ந்து நீராவியாக மாறின. இன்னும் பல ரசாயன சம்பந்தங்களால் அநேக விதமான திட திரவ வாயு பதார்த்தங்கள் ஏற்பட்டன. ஆனல் இவை யெல்லாம் வேறு வேருன அணுக்களாகவே யிருந்தன. இச்சமயத்தில் ககன சஞ்சாரத்தில் பெரியதோர் கிரகம் ஒருபுறமும் கூண்டு போன்ற அணுக்களின் கூட்டம் ஒரு புறமும் நீண்டு ஆகர்ஷிக்கப் பட்டன.எனினும் அதிவேகமாக சுழன்று கொண்டே இருந்ததால் நீண்ட பாகம் விடுபட்டு வேருக சுழல ஆரம்பித்தது.

நான் ஔரங்கஜேபுக்கு பிறகு மொகலாய ஆதிக்கம் குறைந்ததற்குக் காரணமாக, மொகலாய ராஜ்யம் தெற்கே அதிக தூரம் நீண்டதுவும் ஒன்று என்று இந்து தேச சரித்திரத்தில் வாசித்திருந்ததை நினைத்துக் கொண்டேன்.

உடனே ஓர் அற்புதத்தைக் கண்டேன். வேருகச் சென்ற பாகம் தன்னைத்தானே சுழற்றுவதோடு, மற்றும் பெரிய பாகத்தையும் சுற்றிச் சுழன்று வருவது தெரிந்தது. சூடு இன்னும் அமிதமாகத்தான் இருந்தது. உஷ்ணமானியில் 26000 டிக்ரி காட்டி

யது. இப்படிப் பல்லாயிரம் ஆண்டுகள் சென்றன.

அப்பாடா! இப்பொழுது கொஞ்சம் தேவலே. உஷ்ண மானி 1000 டிக்ரிதான் காட்டிற்று. ஒரே மழையாய்ப் பெய்து கொண்டிருந்தது. மழை எதன் மேல் பெய்கிறதென்று மெதுவாக இறங்கிப் பார்த்தேன். அடாடா! வேறு வேருயிருந்த அணுக்களெல்லாம் ஒன்று சேர்ந்து இறுகிக் கொண்டிருந்தன. ஆனல் அப்பா! என்ன சூடு! மழை கீழே விழ வேண்டியதுதான் தாமதம். உடனே ஆவியாய் மாறிவிட்டது. அவ்வளவு சூடு!

சுமார்—எண்ணிக்கை கவனமில்லே – ஆண்டுகள் சென்றன. உஷ்ணம் தணிந்து விட்டதால் அங்கங்கே நீர் நிலேகள் தோன்றின. அவைகளில் நடுவில் நிஜமாகத்தான், நிலம் தோன்றிற்று. ஆனல் ஒரு ஜந்துவையும் காணேம். எங்கே பார்த்தாலும்.........

"எனக்கா தூங்கிப் போயிட்டையே. டிரான்ஸ்லேஷன் சரியாயிருக்கா?" என்று உச்சஸ்தாயியில் ஓர் குரல் என் காதில் ஏறிற்று. கண்களே விழித்தேன். ருக்கு சிரித்துக் கொண்டிருந்தாள்.

"சரியா யிருக்கிறது" என்று என்னே யறியாமல் பதிலளித்தேன். எனக்கே என் குரல் அதிக வேற்றுமையாகத் தென்பட்டது. ருக்கு ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு போய் விட்டாள். நானும் பால்காரன் வந்துவிட்டதால் மாலே காப்பி போடுவதற்காகச் சமையலறைக்குச் சென்றேன்.



பெண்களும் சம்பாத்தியமும்

பொருள்தேடுவதற்காக கணவன் எதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பதைப்போல மனேவியும் எதாவது ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும் என்று நான் கருதவில்லே. பெண்களின் திறன் அனேத்தும் குழந்தைகளேப் பாதுகாப்பதற்கும் குடும்பத்தை நிர்வகித்து நடத்துவதற்கும் சரியாகப் போய்விடும். நன்கு அமைக்கப்பட்ட சமுதாயத்தில் வருவாய் தேடிக் குடும்பத்தைப் போஷிக்கவேண்டிய பொறுப்பு பெண்களேச் சார்ந்திருத்தல் கூடாது.

—காந்தியடிகள்

தாத்தாவின் கடிதங்கள்

ஸ்ரீ

[குருவம்மா என்ற சிறுமிக்கு அவள் தாத்தா வெகு அழகாக கடிதங்கள் எழுதி யிருக்கிறார். என்னிடம் சிலவற்றை அனுப்பி யிருக்கிருள். மங்கை வாசகர்களும் படிக்க வேண்டுமென்பது சிறுமியின் ஆசை. தாத்தாவின் உத்தரவின் பேரில்தான் பிரசுரித்திருக்கிறேன். ஆசிரியர்.]

சௌபாக்கியவதி குருவம்மாவுக்கு தாத்தா அனேக ஆசீர்வாதம். போன கடிதத்தில் 'கண்டு பிரிந்த சுகம்' என்றால் என்னவென்று கேட்டு எழுதி யிருந்தாய். அதைப் பற்றி இக் கடிதத்தில் எழுதி யிருக்கிறேன்.

'கண்டு பிரிந்த சுகம்' என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா? கோபியர்கள் கண்ணனைக் கண்டார்கள். பிறகு கண்ணன் கம்ஸனைக் கொல்ல ஓடிப் போய்விட்டான். கண்ணனைப் பிரிந்தார்கள். நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்தே மனத்துள் வைத்தார்கள். கண்ணனும் கோபியரை நினைத்து நினைத்து அவர்கள் உள்ளத்தில் அமர்ந்தார். மனதுக்கு மனம் சாக்ஷி. உலகுக்கு உலகு பொய்யாம்—இது தான் கண்டு பிரிந்த சுகம்—துக்க மென்றும் சொல்லலாம். ஆண்டவன் பக்தியிலீடுபட்ட மனங்கள் ஒன்ருய் விடும். தொண்டர்கள் எல்லாம் தொண்டர்க்கு தெய்வம். ஆகவே நீ, உன் அம்மா, உன் அப்பா, உன் சுற்றத்தார் எல்லாரும் எனக்கு தெய்வம். என் முருகன், நான் உங்களுக்கு கண்ணன். கந்தனும் கண்ணனும் ஒன்ருனதால் ஒன்ருய் நிற்கும் நமக்கு மறுப்பும் இல்லை. ஞாபகமும் இல்லை. இது உனக்குப் புரிந்ததோ? இல்லா விடில் அப்பாவைக்கேள்.

நான் ஸ்னனம் செய்யப் போனேன். வெந்நீர் சூடாக இருந்தது. குளிர்ந்த ஜலம் விட்டார்கள். சமமான உஷ்ணம் ஏற்படாமல் ஓரிடத்தில் ஜலம் உஷ்ணம் ஜாஸ்தியாகவும், ஓரிடத்தில் குறைவாகவும் இருந்தது—ஒரே அண்டாவுக்குள். நான் எல்லா நீரையும் சமமாக செய்து ஸ்னனம் செய்ய நினைத்து ஜலத்தை அளைந்து சுற்றி விட்டேன். வலமாக—பிறகு இடமாக, எல்லாம் ஒரே உஷ்ணமாய் விட்டது.

அண்டாவில் எப்படியோ அப்படியே அண்டத்தில். கிருஷ்ணன் பக்தியின் உஷ்ணத்தை சமமாக்க என்ன பண்ணினன்? ராஸ லீலை ஆடினன். கோபியரைச் சுற்றி நிற்க வைத்து வலமாகவும் இடமாகவும் சுழல வைத்தான். உலகம் ஒன்ருய் விட்டது. கோலாட்டம் கும்மி இதெல்லாம் போட வேண்டும். உலகம் ஒன்றுபட. இது புரியா விட்டால் அம்மாவைக் கேள்.

ஆகையினல் நான் தான் நீ. நீ தான் நான். நீயும் நானும் ஒன்ருனல் மண்ணும் விண்ணும் ஒன்ருகும். பக்தனும்பகவானும் ஒன்ருகும். மூக்கும் மணமும் ஒன்ருகும். வாக்கும் செவியும் ஒன்ருகும். அறிவும் அன்பும் ஒன்ருகும். குருவம்மாவும், அவள் அம்மா அப்பாவும் தாத்தாவும் எல்லா பக்தர்களும் ஒன்ருகும். அந்த ஒன்று தான் உன் அருமைக் கண்ணன்.

இப்படிக்கு
உன் அருமைத் தாத்தா.

✻

சகோதரிகளின் சந்தேகங்கள்

அன்னபூரணி

[உங்கள் கஷ்டங்களை அத்தை அன்னபூரணியிடம் தெரிவியுங்கள். அவர் உங்களுக்குகந்த யோசனைகளை இந்தப் பகுதியில் எழுதுவார். பிரத்யேகமாக பதில் வேண்டினால் விலாசமிட்ட தபால் கவர் அடக்கம் செய்யப்படவேண்டும்.]

நாற்பது வயதுக் கணவன்

ஸ்ரீமதி 'கா', பங்களூர்.

"என் கணவனுக்கு சென்ற ஆண்டு நாற்பது நிரம்பியது. எங்களுக்கு விவாகமாகி இருபது ஆண்டுகளாகின்றன. பல விரதங்கள், சிகிச்சைகள் செய்தும் குழந்தைகள் உண்டாகவில்லை. ஆனால் எங்களைப் போன்ற அந்நியோந்நியமான தம்பதிகள் அநேகர் இரார் என்றே சொல்லலாம். அதாவது சில மாதங்கள் வரையில். இப்பொழுதும் அவர்மீது ஒன்றும் குறை கூறுவதற்கில்லை. என் சிநேகிதர் ஒருவர் டில்லியில் குத்துண்டு மாண்டு போனார். அவருடைய தாயில்லாப் பெண் இப்பொழுது இங்கே தன் சித்தி வீட்டிற்கு வந்திருக்கிறாள். என் கணவர் அந்தப் பெண்ணை உயிருக்கு உயிராக மதிக்கிறார். அவளைப் பிரதிதினமும் ஆறுமைல் சைகிளில் போய் பார்த்து வருகிறார். அந்தப் பெண்ணுக்கு வயது 18. ஒரு நாள் நான் அவரைக் கண்டித்தேன். "யாராவது என்ன சொல்வார்கள்" என்றேன். அதற்கவர் சிரித்துக் கொண்டே "அடி பைத்தியமே. புருஷக் குழந்தைகளை தத்து எடுத்துக் கொள்ளவில்லையா? இப்பொழுது தான் ஆணும் பெண்ணும் சரி நிகராக ஆய்விட்டதே. நாம் இந்தப் பெண்ணை தத்து எடுத்துக் கொண்டு விடலாமே. அந்தக் குழந்தை மீது எனக்கு அளவு கடந்த பாசம் ஏற்பட்டிருக்கிறது. அவளை ஒரு நாள் பார்க்கா விட்டால் என் உயிரே போய்விடும் போலிருக்கிறது" என்று தழுதழுத்த குரலில் சொன்னார். ஆனால் என்னால் பொறுக்க முடியவில்லை. இதற்கு என்ன செய்யட்டும். அவர் குரலில் இருந்த உணர்ச்சியையும் தாபத்தையும் நினைத்தால் அவர் அந்தப் பெண்ணிடமிருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டால் உயிரையே தியாகம் செய்து விடுவார் என்றுகூட நம்புகிறேன்."

பதில்: ஸ்திரீகளுக்கு இயற்கையான பொறாமை உணர்ச்சியால் உன் மனம் பேதப்பட்டிருக்கிறதென்று நான் திண்ணமாகச் செல்லுவேன்.

சாதாரணமாக பெண்களுக்கு ஆண் குழந்தைகள் மீதும் ஆண்களுக்கு பெண் குழந்தைகள் மீதும் விவரிக்க முடியாத அளவுக்குப் பிரேமை உண்டாகிறது. இதற்கும் ஸ்திரீ புருஷ பேத உணர்ச்சி காரணமாக ஏற்படும் அன்புக்கும் சம்பந்தமில்லை இரண்டும் ஒரே இயற்கை உணர்விலிருந்து உற்பத்தியாவது ஒன்றைத் தவிர மற்றபடி பெற்றோருக்குக் குழந்தைகளிடம் இயற்கையாக ஏற்பட்டுள்ள

வாத்ஸல்யம்தான் பிரதான்ய மாக இருக்கும்.

ஒரு மனோதத்துவ ஆராய்ச்சியாளர், "மனிதன் நாற்பதாவது வயதுக்குப் பிறகு, தான் மரித்த பிறகு தன்னை நினைவில் வைத்துக் கொண்டிருக்க சந்ததிகளைப் பெரிதும் விரும்புகிறான்; நாற்பதாவது வயதுக்குப் பிறகு அறிந்தோ அறியாமலோ தான் கல்லறையை அணுகிக் கொண்டிருக்கிறான் என்ற உணர்ச்சி மனித உள்ளத்தில் உண்டாகிறது. அதனால் சாதாரணமாக 40 வயதிற்குப் பிறகு மதப் பற்றும் தெய்வ பக்தியும் (பயம்) கூட அதிகமாகிறது. என்று கூடச் சொல்லலாம்'' என்கிறார்.

குடும்பத்தினர் மீது வெறுப்பு ஏற்பட்டு வீட்டை விட்டுப் பரதேசம் போய் லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறான் ஒருவன். பிறகு அவனுக்கு ஒரு பைத்தியம் உண்டாகிறது. எந்த உறவினரைக் கண்ணால் கூடக் காணக் கூடாதென்று ஓடி விட்டானோ அவர்களில் ஒருவரைத் தனக்கு வாரிசாக நியமித்து உயில் எழுதுகிறான். கதா நாயகனுக்கோ, கதா நாயகிக்கோ இத்தகைய திடீர் அதிர்ஷ்டம் ஏற்படுவது நாவல்களில் மாத்திரமன்று. நாவலாசிரியர்கள் தமது பாத்திரங்களை வாழ்க்கையிலிருந்து தானே பிரித்தெடுத்துக்கொள்ளுகிறார்கள். கற்பனை காரணமாக ஓரளவுக்கு மிகைபடக்கூறலாம். ஆனால் பாத்திரங்கள் பெரும்பாலும் உண்மை உலகிற்குப் பொருந்தாதவர்களாக இரார்.

நம் நாட்டிலும் சாதாரணமாக நாற்பது வயதிற்குப் பிறகு தான் "தத்து" எடுத்துக் கொள்கிறார்கள். அதாவது அபிமான புத்திரியையோ புத்திரனையோ தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள்,

இதே இயற்கை உணர்ச்சி தான் உங்கள் கணவன் உள்ளத்திலும் வேலைசெய்கிறது. அவருக்கு ஒரு பெண்ணின் மீது புத்திர வாத்ஸல்யத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு பூர்வ ஜன்ம வாசனையும் பூர்வாங்கமாக இருக்கலாம் என்று ஹிந்து மதத்தைச் சார்ந்த நீங்கள் எண்ணிக் கொள்ளலாம். சென்ற ஜன்மத்தில் அந்தப் பெண் அவருக்குத் தாயாகவோ தந்தை யாகவோ இருந்து இந்த ஜன்மத்தில் அவருக்குப் புத்திரியாக அவதரித்திருக்கலாம.

நீங்கள் என் யோசனையைக் கேட்டீர்கள். உங்கள் நிலையிலுள்ள இன்னும் பல மாதர் விபரீத எண்ணங்களை வைத்துக் கொண்டு தம்முடையவும், தமது அன்புக்குப் பாத்திராகிய கணவனுடையவும் மற்றொரு அப்பாவியாகிய பெண்ணினுடையவும் சந்தோஷத்திற்கு (ஏன்? வாழ்க்கைக்கே) பெருத்த தீங்கை உண்டாக்கிக்கொண்டு விடுவார்கள். எல்லோருக்கும் உதவட்டும் என்றே உங்களுக்கு எழுத வேண்டிய பதிலை ஒரு கட்டுரை அளவுக்கு நீட்டிவிட்டேன்.

நீங்கள் உங்கள் கணவர் தமது புத்திர வாத்ஸல்யத்தைக் கட்டுப் படுத்த முயல்வதால் தீமை விளையுமே தவிர நன்மை புண்டாகாது. உங்களுக்குச் சந்ததிகள் இல்லாத வரையில் அந்த அநாதைப் பெண்ணை நீங்கள் ஏன் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு விடக் கூடாது? அப்படிச் செய்தால் உங்கள் வாழ்க்கையிலும் இன்பம் பொங்கும் என்று திடமாக நினைக்கிறேன்.

வழிகாட்டும் ஒளி

●

(பல்குநன்)

தலைவனை இழந்து நாடு தவிக்கிறது. ஆனாலும் தடுமாற வில்லை. தவிப்பால் நிலை குலைய மாட்டோம்.

மகனை இழந்த தாய் அலமலந்து நிற்கிறாள். ஆனாலும் நம்பிக்கையும் திடமுங் குன்றவில்லை. எங்கே நம் வழி காட்டி என்று ஏங்குகிறது உலகம். ஆனால் மனித குல மாணிக்கம் மறையவில்லை. இறந்தும் இருக்கிறார். இருளில் சிக்கிய நம்மை அழைத்துச் செல்லும் ஒளி மறையவில்லை.

நேற்றைக்குத் தலைமை வகித்த காந்திய ஒளி நாளைக்கும், எதிர் காலத்திலும் நிச்சயமாக வழி காட்டும்.

எத்தனையோ மகாத்மாக்கள் வந்தார்கள், போனார்கள். எத்தனையோ அறிஞர்கள் வாழ்ந்தார்கள், மறைந்தார்கள். எத்தனையோ வீரர்கள், தீரர்கள், அரசியல் வாதிகள், தியாகிகள், யோகிகள் இருந்தார்கள்; உண்மைதான். ஆனால் ஒருவரே மகாத்மாவாகவும், வீரராகவும், அறிஞராகவும், அரசியல் வாதியாகவும் இருந்தார் என்றால் காந்தியைத் தவிர வேறு யாரும் இல்லை. இருக்கவும் முடியாது. இன்னும் ஓராயிரம் ஆண்டுகளானாலும் முடியாது. உலகம் அறிந்த உண்மை இது. இந்தியாவின் நஷ்டம் உலகின் நஷ்டம். எக்காலத்திலும் ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டம்.

உடன் பிறந்த நாட்டானின் தற்புகழ்ச்சியல்ல இது. உலகமே மெச்சிப் பாராட்டும் புகழ்ச்சி இது.

நாம் அவரைப் பெற்றோம். விடுதலைப் பயனும் பெற்றோம். உலகத்தை அவர் பெற்றார். உண்மைப் பெருமை யுற்றார். நம் விடுதலைக் குழைத்தார். வெற்றி பெற்றார். உலக விடுதலைக்கும் வழி காட்டினார். உண்மை இது. எள்ளி நகையாடிய உலகம் 'ஏந்தலே' என்று கொண்டாடியது. இல்லை. வணங்கி வழிபட்டது. வாழ்க அவர் நாமம் என்று வேண்டுகிறது.

தமிழ் நாட்டின் தீர்க்கதரிசி பாரதி அன்றே சொன்னார் 'மனிதருள் தலைப்படு மனிதன் மகாத்மா காந்தி' என்று. உலகம் இவ் வுண்மையறிய இவ்வளவு காலமாயிற்று. ஏன்? நாமே இன்னும் அறிந்துகொள்ள வில்லையே!

நம்மிலே ஒருவன்தான் துள்ளி வந்தான். நாகரீக உலகில் வாழ்பவன்தான். மனிதன்தான், ஆனாலும் வகுப்பு வெறியன். புத்தி கெட்டான். உத்தமர்களைப் பெற்ற நாம் அன்னையின் வயிற்றிலே ஒரு புல்லுருவி. அவர் உடலைச் சிதைத்துவிட்டால் பலனுண்டு என்றெண்ணிய பாவி. சிதைதது விட்டான் என்றாலும் அவர் சாகவில்லை.

அவர் அமரத்துவம் பெற்றார்.

அவருடைய செயல்கள் சிரஞ்சிவித்துவம் பெற்றன.

அவருடைய வாக்கு நம் வழி காட்டியாயிற்று.

'உலகம் என் வீடு. உலகுக்கு நான் முதல் தொண்டன்' என்று எண்ணி உழைத்தார் அவர்.

இந்திய விடுதலை உலக விடுதலைக்கு வழி காட்டும் என்று சங்கநாதம் முழக்கினர்.

உண்மைதான். ஒவ்வொரு இந்தியனும் எவ்வளவு பெருமைப் பட வேண்டிய விஷயம் இது.

'எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும்,' என்று அன்றே தீர்க்கதரிசி பாரதியார் சொன்னாரல்லவா? அவர் சொன்னதை, காந்தியடிகள் செயலில் காட்டினார். வாழும் வகை வகுத்திருக்கிறார். நம்மை வாழ்விக்கவும் விரும்பினார். ஆனால் நம்மைவிட அவரையே அவர் வழிபட்ட இறைவன்வேண்டினார்போலும்! அழைத்துச் சென்றுவிட்டார்.

கண்ணீர் பெருக்க வேண்டாம். கலங்க வேண்டாம். கண் கலங்கித் தவிக்க வேண்டாம். உண்மையிலே கருத்து நிலை தடுமாறும் தருணமில்லை இது. கடமையில் கருத்தைச் செலுத்த வேண்டிய காலமிது. காந்தியடிகள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். துன்பத்தை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளென்று, மலைக்காதீர். மனந் தடுமாறுதீர் ;என்பது அவர் வாக்கு.

சிறைச்சாலையை தவச்சாலையாக்கினார். தடியடியை சுதந்திரத் திருப்பூசை என்றார். ஏகாதிபத்திய பீரங்கிகளைக் கண்டு ஏளனப் புன்னகை புரிந்தார். பகைவனை எதிர்க்கும் ஆயுதம் புன்னகை! புன்னகை! ஆமாம். அவர் தம் மோகனப் புன்னகை இதோ நாம் எதிரில் தாண்டவமாடுகிறது. வாழ்விலும் தாழ்விலும், வெற்றியிலும் தோல்வியிலும், கொடுமையிலும் மிடிமையிலும் அவர் தம் புன்னகைதான் நம்மைத் தைரியமுறச் செய்தது. அடிமை விலங்கைத் தகர்த்ததும் அவர் புன்னகை.ஆதிபத்தியவாதிகளை ஆட்டி வைத்ததும் அவர் புன்னகை. கொடுமையை வென்ற குழந்தைச் சிரிப்பு மறையவில்லை.

காந்தி இருக்கிறார், கவலை இல்லை என்றிருந்தோம். ஆனால் இன்று நாம் அநாதையானோம். வெறியன் செய்கையால் உலகம் நமக்காக இரங்குகிறது. அவருக்காக வருந்துகிறது. தவிக்கிறது. நாமோ திகைத்து வகையறியாது விழிக்கிறோம், என்றாலும் கலங்கிவிடக் கூடாது.

அவர் அன்றே சொன்னார்: 'நான் நூறாண்டுக்கு மேல் வாழ விரும்புகிறேன். இடையில் இறந்தால் பிரார்த்தனையின்போது இறக்க வேண்டும்' என்றார். அவர் வழிபட்ட தெய்வம் பிந்திய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு விட்டதுபோலும்.

'என்னை எவனாவது கொல்ல விரும்பினால் ஒரு கொடியவனிடமிருந்து விடுதலையடைய வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் செய்வான். கொடுமைக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. ஆகவே என்னைக் கொல்ல முடியாது.'

உண்மை. 'காந்தி' உடல் மறைந்தாலும் உயிர் மறையவில்லை. சுதந்திர மக்களின் உயிர்களில் அவ்வுயிர் கலந்துவிட்டது.

நம் லட்சியம் வெற்றியடையும் என்று அவர் நம்பிக்கை வழி நடப்போமாக.

அவர் எந்த லட்சியத்துக்காக வாழ்ந்தாரோ, அந்த லட்சியம் பூரணமாக நாம் உழைப்போமாக. நம்மை அவர் தம் ஆத்ம ஒளி வழி காட்டி நடத்திச் செல்லுமாக.

*

நமது கடமைகள்

ஜெயபூரீ

கடவுள் சேவை

மனமொழி மெய்களுக்கு அப்பாற்பட்டவரும், அறிவு, ஆற்றல், வல்லமை, ஐசுவரியம், வீரியம், தேஜசு என்கிற ஆறு குணங்களுடையவராகிய கடவுளிடத்திலிருந்துதான் மனிதனின் கடமைகள் தோன்றுகின்றன. அக் கடமைகளைச் சரியாக உணர்ந்து, மக்கள் முன்னேற்றமடைய உதவும்படி நமது முன்னோர்கள் நீதி நெறிகளை விளக்கிக் காட்டும் "அற நூல்"கள் வாயிலாகவும், இன்னம் இதர முறைகளாலும் வழிகாட்டியுள்ளனர். எனவே மனித வர்க்கம் முன்னேற வேண்டுமாயின் சன்மார்க்க வழிகளை நன்கு ஆராய்ந்தறிந்து பின்பற்றுவதேயாம்.

முதன் முதலாக நம்மையும், கோடிக் கணக்கான சராசரங்களையுடைய நாம் வாழும் உலகை சிருஷ்டி செய்த கடவுளைப் பற்றி சற்று சிந்திப்போம்.

நாஸ்திகம் நிரம்பிய இக் காலத்திலும் "கடவுள்" உண்டென்பதை மறுக்க முடியாது. ஆனால் எந்தக் காலத்திலும் நாஸ்திகம், ஆஸ்திகம் இரண்டும் உலகில் இயங்கிக் கொண்டிருந்ததைக் காண்கிறோம். அவ்விரண்டின் போட்டியில் மந்த நடையைக் கொண்ட ஆமையை யொத்த ஆஸ்திகமே, துரித நடையைக் கொண்ட முயலை யொத்த நாஸ்திகத்தை வென்றுவிடுகிறது.

சாத்விகத்தில் நம்பிக்கை கொண்ட யாரும் கடவுளில்லை என்பதை ஒப்புக் கொள்ளார். நாம் உயிர் வாழுகிறோம்; ஆகவே கடவுளிருக்கிறார். அவர் நமது மனச் சாட்சியிலேயே வாசஞ் செய்கின்றார். எனவே நம்மைச் சூழ்ந்துள்ள இப் பரந்த உலகின்கண் வாழும் மனித வர்க்கத்தின் ஒவ்வொரு உருவிலும் அவரை"க் காண்கிறோம். கஷ்ட காலங்களிலும் சரி, சந்தோஷ காலங்களிலும் சரி, நம்மையும் அறியாமல் நமது மனச்சாட்சி "அவரை"ப் போற்றி துதிக்கத் தூண்டுகிறது.

சிற்சில சமயங்களில் மனிதன் தன் சுயநல வேட்கையைத் தீர்த்துக்கொள்ள சமுதாயத்தில் கடுமையான முறைகளை கடவுளின் பெயரால் செய்து அதனுடைய புனிதமான பெயருக்கே மாசு ஏற்படுத்த முயலுகிறான். அதன் பயனாக முரண்பாடான கொள்கைகள் ஏற்படுத்தப் படுகின்றன. துர் எண்ணங்கள் நிறைந்த விஷமி தன் வேட்கையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தனக்குச் சாதகமாக அக் கொள்

சுதந்திர நாட்டில் வாழும் ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் எத்தனையோ கடமைகள் உண்டு. அவைகளில் முக்கியமானவற்றை இங்கே கட்டுரையாளர் விவரித்துள்ளார். இந்தப் பகுதியில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் வெளிவரும்.

கைகளை உபயோகப் படுத்திக் கொண்டு! விஷமப் பிரசாரத்தினுலும், செய்கையினுலும், சமுதாயத்தின் அமைதியைக் குலைத்தும், மனித வர்க்கம் தான்தோன்றியான அபிப்பிராயங்களுடன் நடக்க முற்படவும், ஒற்றுமை குன்றி மக்களின் வாழ்க்கை நிலை சீர் குலைந்து அவதிப்படவும் செய்து விடுகிருர்கள். சுயநலக்காரர்களின் கொடுமையில் அவதியுறுவது பாமர மக்களே. கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் அவர்கள் செய்யும் அக்கிரமங்கள் கணக்கற்றவை.

உதாரணமாக, சூரியனை அடிக்கடி மேகங்கள் மறைத்து அவனது ஒளியைக் குறைக்கின்றன. மேகங்கள் மறைப்பதனுலேயே சூரியன் ஒளியிழந்தானென்றே, அவனது கிரணங்கள் சக்தியை யிழந்தனவென்றே கூறமுடியுமா? சுயேச்சையின் திமிரினுல் சுதந்திரம் பெற்ற மக்கள் அதை சரியான முறையில் பயன் படுத்தாமல் அராஜீகத்தை யுண்டு பண்ணினுல், அதற்காக சுதந்திரம் நல்லதல்லவென்று கூறமுடியுமா? எனவே பொய், புனைசுருட்டு முதலிய தீய வழிகளால் கடவுளின் தன்மைக்கே மாசு ஏற்படுத்தி மதிமயக்கத்தில் மூட இருளில் புகாதிருக்க, மனிதனுக்குக் கடவுளிடத்தில் குன்ருத ஒளியாகிய "நம்பிக்கை" தான் அவசியம் வேண்டும். கொடுங்கோன்மை மறையும் பொழுது தீயசெய்கைகளும் மறைந்துவிடும். மேகங்கள் மறைந்ததும் சூரிய ஒளி தென்படுவது போல, மக்களுக்கு கடவுளின் பூரண பிம்பம் தோன்றும். அவனது அருளொளி என்றும் போலவே முழு பிரகாசத்துடன் விளங்கும்.

அடிமைத் தளைகளிலும், வறுமைத் தளைகளிலும் துன்புறும் மக்கள் எவ்விதம் படிப்படியாகப் போராடும் தைரியத்தையடைந்து இறுதியில் வெற்றியைக் காண்பார்களோ, அது போலவே சமுதாயத்தின் ஊழல்கள் அழிந்த பின், கடவுள் மக்களால் முன்னை விட பன்மடங்கு பரிசுத்த மனதுடனும், ஆர்வத்துடனும் போற்றப்படுவர். அவரது அருள் ஜோதி என்றும் அழியாது.

மனிதவர்க்கமென்பதை பிளவு படுத்துவது சாமான்யமல்ல. முடியாதென்றே கூறத்தகும். "எல்லோரும் ஓர் மதம், ஓர் சாதி," என்று ஒன்றுபட்டு வாழவே கடவுளியற்றிய மனித வர்க்கத்தின் சட்டம் கூறுகிறது. கடமையை அறிந்தவன் அச் சட்டத்தை மீறத் துணியமாட்டான். வெறும் "உரிமை"யை மட்டும் கொண்டாடி சமூகத்தில் முன்னேறுவது அசாத்தியம். அறவழியிலிருந்து கடமையைச் செய்த பிறகுதான் "உரிமையும்" முன்னேற்றமடையவும் சாத்தியமாகும். நம்மை அவ்விதம் ஊக்குவிப்பது கடவுளின் சக்தியே. மெய்யுணர்விற்கு எட்டாத அச் சக்தியின் தன்மைகளை இன்னம் சில விஷயங்களில் காண்போம்.

மனிதன் ஒருவனுக சிருஷ்டிக்கப்படவில்லை. அவனைப் போன்ற தோற்றங்களும், குணங்களும் கொண்ட கணக்கற்றவர்களையும் அவனுடன் சிருஷ்டி செய்திருக்கின்ருர். அவர்களுக்குத் துணையாகப் பல பொருள்களையும் படைத்தார். விலங்கு முதலான ஜீவராசிகளின் அறிவுக்கும் மேலாக "பகுத்தறிவை" மனித வர்க்கத்திற்கு அளித்து அந்த வர்க்கத்தை உலக சிருஷ்டிகளுள் மேலானதாகக் கருதும்படிச்

செய்திருக்கிறார். மனிதனிடத்தில் விருப்பு, வெறுப்பு, கோபம், தாபம், உண்மைகளை ஆராய்வதில் எத்தனையோவித உணர்ச்சிகளைக் காண்கின்றோம். ஆர்வம், புகழ்ச்சி போன்ற இவைகளை யெல்லாம் சற்று யோசித்தாலா வது அச் சக்தியின் பெருமையை யுணரலாமல்லவா?

கடவுளின் எண்ணமில்லாமல் நாமும், இவ்வுலகமும் ஏன் படைக்கப்பட்டதென கேள்வி யெழாதா? உலகில் மக்கள் ஒரு வருடனொருவர் ஒன்று பட்டு வாழ்ந்து தத்தம் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்கிற நியதியில்லையேல், பின் ஏன் சுதந் திரம், சமத்துவம், சகோதரத்து வம்,என்றெல்லாம் பேசுகிறோம்? ஏன் உலகின் பொருள்களை நன் முறையில் பயன் படுத்திக் கொள்ள முற்படுகிறோம்? அறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக் கும்பாடு படுகிறோம்? ஏன் நமது முன்னோர்கள் சென்ற நேர் பாதையில் செல்ல முற்படு கிறோம்? கடவுளில்லையேல், நாம் முரட்டுப் பாதையில் கண்மூடித் தனமான பலாத்கார முறையை பின்பற்றும் ஒரு நிர்வாகத்தின் கீழ் நசுக்குண்டு சாகவேண்டி யதுதான். அதினின்றும் மீள வகையறிய மாட்டோம். எனவே பரம்பொருளிடத்தில் நம்பிக் கையே மனிதவர்க்கத்தின் நன் மைக்குரியது. அந்தக் கொள்கை ஏனைய நாடுகளைக் காட்டிலும் நமது நாட்டில் ஊன்றியிருப்பதா லேயே இன்னமும் சமாளித்துக் கொள்ளுகிறோம். ஒன்று கடவு ளுக்கு வணங்கவேண்டும்; இல்லை யேல் மனிதனுக்காவது பயந்து அடிவணங்கவேண்டும்.

மனித சக்திக்கும் மேலான தொன்றில்லா விட்டால் பலவா னை ஒருவன் மற்றொருவனைத் தாக்கும்பொழுது அக்கொடுமை யினின்று தாக்கப்பட்டவனைக் காப்பாற்றுபவர் யாராக இருக்க முடியும்? மனிதனுடனேயே உண்டாக்கப்பட்ட "சத்தியம்" "அஹிம்சை" போன்ற சட்டங்க ளில்லையேல் நியாய அநியாயம் தெரிந்து நியாயம் வழங்குவது எங்ஙனம்? எவருடைய பெயரால் மனிதனை மனிதன் நசுக்கும் போராட்டத்தை அடக்க முயலு வோம்? இவ்வளவிற்கும் காரண மாக நிற்கின்றது கடவுளின் சக்தியே. எனவே மக்களுக்கு அறிவும், அன்பும் அவரே. நம் மைப் படைத்தவரும், நமது சமூ கத்தின் முன்னேற்றத்துக்கான காரண கர்த்தரும் அவரே யாகும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே நமது ஆன்மா, அறிவு செய்யும் ஒவ்வொரு நற் செய் கையும், அவரது பொறுப்பில் தான் செய்கின்றோம். நமது முன் னோர்களின் வாயிலாக "மனித னின் கடமை"களை தெளிவு படுத்தியுள்ளார்.

வட மொழியிலுள்ள வேத நூல்கள் தவிர, நமது தாய் பாஷையாகிய நற்றமிழில் "தமிழ் மறை நூல்" எனப்படும் "திருக் குறளை"ப் படித்த பிறகாவது மக்கள் தத்தம் கடமைகளில் செவ்வனே கவனம் செலுத்த லாமன்றோ! மக்களின் ஆன்மா வும் அறிவுமே கடவுள்.

* * *

சத்தியமும், அன்பும்.

மனிதன் உயிர் வாழ்கின்றான். எனவே அவனுக்கு ஓர் வழி யுண்டு. வழி யில்லாமல் வாழ் வில்லை. எனவே ஏதோ ஒருவித வழி ஏற்படுத்திய பிறகே அவன்

சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறன். அவ்வழியில் செல்லுவதே அவனுக்குரிய சட்டமாகும். உலகிலிருக்கின்ற பொருள்கள் எல்லாவற்றிற்கும் வெவ்வேறுவிதமான சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகவே எல்லாம் ஒரே விதமாக அமையவில்லை. எல்லா வுயிர்களுக்கும் மேலான அந்தஸ்துடைய மனிதனுக்கு வகுக்கப்பட்ட சட்ட திட்டங்களும் உயர்வான முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், அவைகளைப் பின்பற்றுவதே அவனது முதல் கடமையாகும்.

கடவுள் அமைத்த விதி "உண்மை"யைக் கடைப்பிடித்து நன்னெறிப் பாதையில் செல்வது தான். இதைச் சரிவர உணராத எந்த மனிதனும் "மனித உரிமை"களை நன்கு அறிந்தவனுக இருக்க முடியாது.

அதை அறிந்து நடப்பதெப்படி? மனிதவர்க்கம் சகஜமாக உடனே கேட்கும் கேள்வியே இது.

ஒரு சிலர், "ஒவ்வொருவனும் தன்னையே கேட்டுக் கொண்டால், அவன் மனதில் கெட்டதற்கும், நல்லதற்குமுள்ள வேறுபாடுகள் தோன்றும். அதுவே பதில்," என்று கூறுவர்.

மற்றும் சிலர், "பொதுவாக மனித சமூகம் எதில் நம்பிக்கை கொள்ளுகின்றதோ, அதுவே உண்மையானது" என்பர். எனவே பலவித அபிப்பிராயங்கள் எழும். ஆனல் இரண்டும் ஒன்று படாத காரணத்தினல் "சரி" என்று ஒத்துக் கொள்வது கஷ்டமே.

சகோதர மக்களின் பொது அபிப்பிராயத்தை அறியும் சக்தியையும், சொந்த மனச் சான்றையும், மனிதனுக்கு இரு இறக்கைகள் போன்று உதவி யிருக்கிருர் கடவுள். ஒன்றை வெட்டிவிட்டு மற்றென்றினல் பறக்க முடியாது. இரண்டும் அவசியமானதுதான்.

இதிலிருந்து மனிதன் தன் சூழ்நிலைக் கொத்தபடியேயிருக்க வேண்டுமென்கிற விதியை ஏற்படுத்தி யிருக்கிருரல்லவா. இரு பக்கத்திலும் கடவுளிருந்து பேசுகிருர். எப்பொழுது தனி மனிதனுடைய மனச் சான்றும், சகோதர மக்களுடையனவும் ஒத்துப் போகின்றதோ, அப்பொழுதான் மனிதன் உண்மையை யறிந்தவனுகிருன்.

சில சமயங்களில், சமூகம் சரியில்லாததாகக் கருதும் கடமைகள் சில தனி மனிதன் இருதயத்தில் அவசியமாகக் கருதப்படலாம். அத்தகைய கடமைகள் சகோதர மக்களுக்குத் தீங்கு செய்யாத பக்ஷத்தில் அதைச்செய்யாமலிருப்பதை விட செய்வதே உசிதம். கெடுதல் செய்யாமலிருப்பதோடு நில்லாமல் சகோதர மக்களுக்கு நன்மையைச் செய்ய முற்பட வேண்டும். அதுவே மனிதனின் கடமைகளில் ஒன்று. கடவுளின் கிரியா சக்தியை பூரணமாக்குகின்றுன் அத்தகைய மனிதன். சுயநலம் பாராட்டாத செய்கையே நன்னெறிகளுள் ஒன்று.

மனிதனுடைய மனச்சாட்சியில் தோன்றும் உணர்ச்சிகள் அவனவன் பெற்றிருக்கும் அறிவு, சூழ்நிலையின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தவாறும் அமைகின்றன. கல்வியறிவில்லாத ஒரு காட்டாளின் மனப் போக்கிற்கும் அறிவாளியொருவனுடைய மனப் போக்கும் ஒன்ருக மதிப்பிட முடியுமா?

சுதந்திர மனிதனுடைய கடமைகளை அடிமையாக இருப்பவன் சிறிதாவது அறிந்து கொண்டிருப்பானா? ஒரு தொழிலாளியைக் கேட்போமானால் உண்மையாக உழைத்தால் கூலி, அது போதுமானாலும், போதாவிட்டாலும் உழைப்பே அவனது கடமையாகக் கருதுகிறானல்லவா? அரசாங்கத்தின் சட்டப் பிரகாரம் அவனுக்கு அவ்வளவு தான் விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறான். அவனிடத்தில் "நீ குறைந்த கூலிக்கு வேலை செய்ய ஒப்புக் கொள்ளுவதால், இதரர்களுக்குத் தீங்கு செய்கிறாய். நியாயமற்ற முறையில் உன் உழைப்பைச் செலவிடுகிறாய். முதலாளிகளுடன் எல்லோரும் ஒன்றாய் முறையிட்டு நியாயமான கூலி பெற்று எல்லோரையும் போல வாழ்வாயெனக் கூறினால் அவன் முதலில் சற்று தயங்கிய பிறகுதான் சொல்லுவது சரியென ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரே இடத்தில் வாழும் இருவருக்கு வெவ்வேறு விதமான மனோ உணர்ச்சிகள் தோன்றுகிறதே! எனவே சரியான வழிகாட்டி யில்லாமையால் மனித சமூகம் "சட்டத்"தை நன்குணர முடியவில்லை.

மனச்சான்று சட்டமிருப்பதை உணருகிறது. அதனால் சுமத்தப்பட்ட கடமைகளை சரியானபடி உணர்த்துவதில்லை. மக்களுக்கு இவ்வுண்மைகளை வெளிப்படுத்தவே ஒவ்வொரு காலத்திலும் பல பெரியார்கள் தோன்றுகின்றனர். தற்சமயம் நமது சமுதாயத்திற்கு மகாத்மா காந்தியடிகள் போன்ற தியாகிகள் தோன்றி மனித வர்க்கத்தின் பண்பாட்டிற்காகப் பெரிதும் உழைக்கின்றார்கள்.

எனவே மக்களை சரியான வழியில் அழைத்துக் கொண்டு செல்ல, உதவுபவர்கள் அறிவுடைய மானிட சமுதாயமே.

ஒவ்வொருவருக்கும் அறிவைக் கொடுத்திருக்கிறார். அதைச் சுற்றி மறைக்கும் அஞ்ஞானத் திரை விலக சமுதாயம் ஒவ்வொருவருடைய அறிவு வளர்ச்சிக்கான கல்வி முறையைக் கொள்ளல் வேண்டும். வறுமையில் போராடும் தனி மனிதன் பலஹீனமானவன். அவன் தகுந்த ஆதரவு இல்லாமல் முன்னேறுவது அசாத்தியம். எனவே சமூகந்தான் அவனுக்கு ஊன்றுகோலாக உதவவேண்டும்.

ஒவ்வொரு காலத்திலும் "மனிதவர்க்கம்" சமூகநிலையைப் பற்றி அடிக்கடி சிந்தித்துக் கொண்டுதான் வருகிறது. மக்கள் மறைந்த பின்னும் அவர்களால் வெளிபடுத்தப் பட்ட உண்மைகள் அவர்களோடு மறைந்து விடுகிறதில்லை. அவர்களுக்குப்பின் தோன்றும் சந்ததிகள் அவைகளைப் பொக்கிஷமாகப் பாவித்து, அதன்படி நடந்து அதன் பலனைப் பெறுகிறார்கள். சென்ற காலங்களைக் காட்டிலும் புதுப்புது விதமான கொள்கைகளும் அபிப்ராயங்களும் நிறைந்த காலத்தில் நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கிறோம். அது போலவே நமது சந்ததியார்களின் வருங்காலத்திலும் எத்தனையோ புது முறைகள் உதிக்கப் போகின்றன. இவ்விதமே மனித வர்க்கத்தின் அறிவு வளர்ச்சி எகிப்திய "பிரமிட்" போல உயர்ந்து கொண்டேயிருக்கும். மானிடத் தன்மையின் அறிவை தனி மனிதனிடத்தில் சிற்சில சமயந்தான் காண்கிறோம. ஆனால் அத

னுடைய முழுவளர்ச்சி மெதுவாகவும், படிப்படியாகவும் தொடர்ச்சியாகப் பூரணமான சமூகத்தில்தான் காணமுடியும். எனவே அறிவின் பூர்ணமான மனிதத் தன்மையாகிற அம்சத்தில்தான் கடவுளின் அழியாத அருள்வாக்கியம் பொதிந்து கிடக்கின்றது. காலங்கள் தோறும் தோன்றுகிற அறிவின் ஒளியில்தான் மானிடவர்க்கத்திற்கு கடவுளின் இனிய தொண்டை நாம் உணருவோம்.

மனிதவர்க்கத்தினூடே கடவுள் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளுகிருர். எனவே எவ்விதம் கடவுள் ஒருவரே என்றறிகிறோமோ, அவ்விதமே அவரது அருள் வாக்கியமாகிய "சட்டமும்" ஒன்றேயாம். ஆனல் நமது கலைவளர்ச்சி ஓங்கும் பொழுதே அணுவணுவாய், உலகத்தின் நாலாவித மக்களுடன் நேசப்பான்மையுடன்பழகி, அவர்களுடன் நன்மை தீமைகளை ஆராய்ந்ததுமே அதை அறிந்து கொள்வது சாத்தியமாகும். எனினும், எந்தக் காலத்தும் எந்த மனிதனும் தனது ஆயுளில் 'கடவுளின்'' பூரணவழியை பூரணமாக தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. "உண்மையை எல்லா சமுதாயமும் ஒன்ருகக் கலந்து பழகி மனிதனின் குறை குணங்களை பரிபக்குவமாக்குகின்ற சக்திகளை அபிவிருத்தி செய்வதற்கான வகைகளை நன்கறிந்து பின் அனுபவத்தில் வரும் பொழுதுதான் தூய்மையானதும், வெகு சுலபத்தில் கிட்டாத மானிட தர்மங்களின் உண்மைகளை உணரமுடியும். இதற்கிடையில் இவைகளை அடைய வேண்டுவதற்கான அறிவு வளர்ச்சி ஏற்படல் வேண்டும். அறிவின் வளர்ச்சிக்கான போதனையில்தான் கடவுளின் எண்ணத்தை யறிகிறோம். கடமைகளின் அவசியமுணர வற்புறுத்தப் படுகிறோம். அதன் பயனுக நமது கடமையாவது காலத்திற்கொத்தபடி கடவுளின் அற நெறி மார்க்கங்களை யுணர்ந்து வழிபட மக்களின் அறிவு வளர்ச்சிக்குரிய தகுதியான போதனு முறைகளால் தெளிவுபடுத்தி, அவர்களை அபிவிருத்தி காணச்செய்து, மனித வர்க்கத்தின் நிலையை உயர்த்த மக்களுடன் ஒற்றுமையுடன் போராட வேண்டியதே நமது முதன்மையான கடமையாம்.

எனவே, நன்னெறியை யுணர, நமது மனச்சாட்சியை மட்டுமேயல்லாது, இதர சகோதர மக்களுடைய பொது அபிப்பிராயத்தையறிய அவர்களது மனச்சாட்சியையும் ஊன்றிக் கவனித்து ஆலோசிக்க வேண்டும். இதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்தபின்னரே நமது முன்னேர்கள் அந்தந்தக் காலத்தில் தோன்றிய தீவினைகள் மக்களை பாதிக்க வொட்டாமலிருக்க சன்மார்க்கங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ள மதங்களை சிருஷ்டி செய்தனர். எந்த மதமும் நன்னெறியையே போதித்தது. ஆனல், காலக்கிரமத்தில் அறியாமையினல் மனிதன் சுயநலங் கொண்ட மனத்தினனுய் தனக்கு சாதகமான முறையில் மதத்தை பயன்படுத்திக் கொண்டான். அதனல் வகுப்புத் துவேஷம், கொலை, களவு முதலான தீமைகள் தோன்றி நாட்டின் மக்கள் ஒன்றி வாழவே இயலாமல் வெறி பிடித்தவராய் தான் தோன்றித் தனமாக நடந்து கொள்ள முற்பட்டு விடுகின்றனர். தற்சமயம்

நம் நாடு அந்த நிலையில்தானிருக்கின்றது. இதை யுணர்ந்தே, அமரத்துவத்தை அடைந்த நமது பிதாவான மகாத்மா காந்தி யடிகள் அஹிம்சை, சத்தியம் இவைகளினால் மக்களை விடுதலை செய்தும், அவர்கள் ஒன்றி வாழ்ந்து வருவதற்கான திட்டங்களையே போதித்தும் வந்தார். அவரால் நாம் அடிமை வாழ்வை வென்றோம். இனியும் அவரது போதனை முறைகளைப் பின்பற்றி சகோதர மக்களுடன் ஒற்றுமையுடனிருந்து, நமது கடமைகளை சரிவர செய்வதே அம் மகானுக்கு உகந்தது.

கடவுள் நமக்கு அறிவை அளித்திருக்கிறார். மனச் சாட்சி அறிவையுணரத் தூண்டுகிறது. அறிவின் ஒளியை பிரகாசிக்கச் செய்வதே மக்கள் கடமை. திக்குத் தெரியாத காட்டில் தவிப்பது போல, நமது ஆத்மா இருளடைந்து அறிவின் மங்கிய ஒளியில் தவிக்கவே நேரிடும். உண்மையையறிய சாத்தியமில்லாத ஆத்மா நசித்துவிடும். தன்னை உணர முடியாதவன் பிறருடைய சகாயத்தில் நீடித்து வாழ்ந்து இன்புற முடியுமா?

உலகின் தந்தையாகிய கடவுளே மனிதவர்க்கத்தின்வழியையும் காட்டுகிறார். அவ் வழியும் காலத்திற்கேற்ற முறையில் வகுக்கப்படுகிறது. இதை நமது முன்னோர்களின் பரமபரையாக வந்தவர்களின் வாயிலாகவும், அவர்களா லியற்றப்பெற்ற அருமறை நூல்களாலும் அறிகிறோம். எனினும் ஒவ்வொரு சமயத்திலும் "உண்மை"யே கடவுள் காட்டிய வழியாக நிற்கின்றது. எனவே, "எப்பொழுது நமது மனமும், இதரர்களுடைய மனமும் வேறுபாட்டுடன் விளங்காமல்லவன் காணப்படுகின்றதோ அப்பொழுதே கடவுளின் வழிகளில் ஒன்றை பின்பற்றுகின்றோமென்கிற உணர்ச்சி ஏற்படுகிறது. அதுவே வண்மையாகிற வழி. கடவுளின் குரல்தான் மக்களின் குரல். மக்களின் குரல்களில்தான் மனித வர்க்கத்தின் நன்மைகள் அடங்கி யிருக்கின்றன. ஆகவே, எங்கு சகோதர மக்களுடன் ஒற்றுமையாக யிருக்கின்றோமோ, அங்குதான் கடவுளின் உண்மை நிலை பரிபூரணமாக இருக்கக் காண்கிறோம். இன்றைய நிலைமையில் நமக்கு அத்தகைய வழியைக் காட்டியவர் அண்ணல் காந்தியேயாம். ஆத்மீக வளர்ச்சிபெற்ற அவரது சத்தியம், அஹிம்சை யென்கிற இருவழிகளே நமக்கு கடவுள் காட்டிய வழிகளாகும். அதர்மத்தையும், அதன் விளைவுகளான தீச்செயல்களையும் அவர் சென்ற வழியில் செல்வதாலேயே வென்று "உண்மை"யாகிய அருள்ஜோதியை இறுதியில் நன் மக்களான மனிதவர்க்கம் காணும்.

முதல் கடமை : சமூக சேவை

மனிதன் பல கடமைகள் செய்தற்குரியவன். அவைகளும் பலதரப்பட்டனவாக யிருக்கும். எனினும், அவனது கடமைகளில் முதன்மையானது சகோதர மக்களின் தராதரத்தை ஆராய்ந்து நன்மை செய்வதே. தன்னைச் சுற்றியுள்ள மக்களாலாக்கப்பெற்ற மனித சமுதாயத்தை நன்குணராத ஒருவன் ஒருநாளும் தன் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுபவனாக கருத முடியாது. பிரஜையாகவும், புத்திரனாகவும், கணவனாகவும், தந்தையாகவும், பலவிதமான கடமைகளிருக்கின்றன. இவை

யெல்லாம், மனிதனென்கிற ஒவ்வொருவனுக்கும் இயற்கை விதித்த கடமைகள்.

மனிதன் சமுதாயத்தினரால் அமைக்கப் பெற்ற ஒழுங்கு முறைகளில் கவனத்துடன் நடந்து கொள்ளுபவன். அச் சமுதாயம் வரையில்லாமல் நாளுக்குநாள் பல துறைகளிலும் வளர்ச்சி பெறுகிறது. ஆதி காலத்தில் வாழ்ந்த மக்களின் நடையுடை பாவனைகளுக்கும், தற்காலத்திய மக்களின் நடையுடை பாவனைகளுக்கும், எவ்வளவு வேற்றுமைகளிருக்கின்றன. அறிவு வளர்ச்சியினால் ஏற்பட்ட பல முன்னேற்றங்களை இன்று நாம் காண்கின்றோம். வருங்காலத்திலும் நாம் நினைக்க முடியாத பலவிதமான நவீன முறைகள் மக்களிடைத் தோன்றக் கூடும். இதுவே மனித வர்க்கம் வாழ்கின்ற வழி. இத்தகைய சூழ் நிலைகளின் வேறுபாடுகளினாலேயே ஒவ்வொரு மனித குணத்தின் வேறுபாடுகளையும் அறிகிறோம். இயற்கை ஒவ்வொருவனையும் நன்மையைச் செய்யவே சிருஷ்டி செய்திருக்கின்றது. வாழ்நாள் முழுவதும் இயற்கையின் நல்ல குணங்களை பரிபக்குவப் படுத்த உழைப்பதே அவசியமாகும். இல்லையேல் மனிதன் வாழ்க்கையில் விதிக்கப்பட்ட சட்டங்களை மீறி, ஆறறிவில்லாத மிருகத்தினும் கேவலமாக நடத்தப்படுவான்.

நம்மை நாமே உண்மை நெறியிலிருந்து பிறழாமல் ஒழுங்கு முறையுடன் நடந்துகொள்ள முற்படுவதோடு நில்லாமல், கடவுளின் மக்களாகிய இதர சகோதர மக்களையும் அவரது அருள் வாக்கின்படி நடக்கச் செய்ய முற்பட வேண்டுமென்பதே நம்மைப் படைத்த ஈசனின் விருப்பம்.

உலகமறிந்த உண்மை யாது? அன்பே கடவுள். அதை மக்கள் உணர வேண்டுமென்பதே அவரது அவா. உண்மையான தொண்டு அன்பிலிருந்தே உதயமாகிறது. மனிதன் தன் நிலையற்ற சொல்பமான வாழ் நாட்களை வீணாக்காமல் சிறிது கால மாவது மக்களிடை அவர்களது க்ஷேமத்திற்காக உழைத்திருப்பானேயானால், அவனை மானிட வர்க்கம் பல தலைமுறைகளுக்குப் பிறகும் நினைத்துப் போற்றி அவனது நல் வழியை கடைப்பிடிப்பதில் ஆர்வம்கொண்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இவ்வளவிற்கும் ஆதாரமாக நிற்பது அவனது அன்பு நிறைந்த கோட்பாடுகளே.

கடவுள் ஒவ்வொருவரையும் இதாருடைய சௌகரியங்களைக் கவனிக்கவே படைத்திருக்கிறாரென்றாலும் தகும். உண்மை அதுவே. மனிதனின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று தன்னறிவை இதரனுடையநலனுக்கு உபயோகிப்பதனால், தன்னறிவை அபிவிருத்தி செய்து கொள்வது மன்றி, சகோதர மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் அடி கோலுகிறான். தன்னையும் பக்குவப் படுத்திக்கொண்டு, மற்றவர்களையும் ஆத்மீக வளர்ச்சியின் வழியில் கொண்டுவிட முற்படுகின்றான். இத்தகைய நற்செய்கைகளினால் கடவுளை அறிகிறான். படைப்பின் ஒவ்வொரு அம்சத்திலும், அன்பின் வடிவமாகிய கடவுளைக் கண்டு இன்புறுகிறான். பல தலை முறைகளுக்கு முன்னால் அறிஞர்களால் அடி கோலப் பட்டு தொடர்ந்து சமூகத்தில்

சிதறியபடி கிடக்கின்ற உண்மைகளை ஒன்று சேர்த்துதன்னறிவை விசாலப்படுத்திக் கொள்வதால் இதுவரை கண்டறியாத மகானாய் நாட்டில் போற்றப்படும் தன்மையை யடைகின்றான். தன்னலமாகிய வேர்ப்புழுவை அழித்து வெளியேறி ஆத்மார்த்தமானசுத்தத்துடன் சமுதாயத்தை செழிப்புடன் வளர்க்கின்றான். இத்தகைய மகானுபாவ னொருவனை நமதுநாடுபெற்றிருந்தது. இன்று அம் மகான் அமர வாழ்வில் மக்களுக்குப் போதித்து வருகிறார் என்றுதான் கூற வேண்டும். சாந்த மூர்த்தி மகாத்மா காந்தியே அவர். உலகம் போற்றும். அம் மாகானுபாவனை நம் தலைவராக அடைந்திருந்த நமது பாக்கியமே பாக்கியம்.

தனி மனிதனொருவன் மட்டும் உயர்ந்த கோட்பாடுகளுடன் தன் கிரியைகளில் சுத்தமாக இருப்பதில் பிரயோசன மில்லை. தனது சூழ்நிலையில் தீமைகள் நிறைந்திருந்தும் அதைக் கவனியாமல், தன்னை மட்டுமே கவனித்துக் கொள்ளுபவன் உண்மையில் கடமையிலிருந்து தவறியவனாகிறான்.

அண்டமே கடவுளின்கோயில். அதில் வசிக்கும் மக்கள் எல்லோரும் அவரது மக்களே. எனவே தனிமையாக நிற்பவனை யாரும் கண்ணெடுத்தும் பாரார். சகோதர மக்களிடை பரவியிருக்கும் தீமைகளை யுணர்ந்த பின்னும் அதைக் களைந்தெறியாமல் ஒதுங்கி யிருப்பவன் தனிமையில் தன் வரையில் நன்னடத்தையி லீடுபட்டவனாயினும், கடமையின் முறைகளைத் தவறியவனென்றே சொல்ல வேண்டும். அவனை தன்னலத்தைக் கருதுபவனென்றே ஒதுக்கலாம்.

சிறந்த கொள்கைகளுக்காக உயிர் நீத்த தியாகிகளைப் பற்றி நினைக்கும்போது நம் மனம் எவ்வளவு துடிக்கின்றது. ஒருவன், அந்நிய நாட்டினனாயினும் உண்மையாகிய சிறந்த கொள்கைகளுக்காக, தன்னுயிரையே சமயம் வரும்பொழுது தியாகம் செய்கிறானென்று வைத்துக் கொள்ளுவோம். அச்செய்தியைக் கேட்டதும் நாம் ஏன் அவனை ஒரு மகாத்மா வென்றோ, தியாகி என்றே போற்றிக் கொண்டாடுகிறோம். நமது சந்ததியாரையும் அவர்களைப் பற்றி ஞாபகப் படுத்திக் கொள்ள முயலுகிறோம். அத்தியாகி நாம் நேருக்குநேர் பார்த்து பழக்கமில்லாத அந்நியனாகிலும், அவனது உயர்ந்த கொள்கைகளல்லவா நம்மை ஆட்டுவிக்கின்றது. ஒரு காரணத்திற்காக, சகல போகபாக்கியங்களையுந் துறந்து உயிரையும் அர்ப்பணம் செய்ய முன்வருகின்ற அந்தத் தியாகிகளை உலகம் போற்றாமல் என் செய்யும். தியாகி இறப்பதன்மூலம் உலகத்தின் நடவடிக்கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுகிறான். ஆனால் அவனது ஒவ்வொரு செய்கையும் உலக முன்னேற்றத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டுவிடுகிறது. எனவே வருங்காலத்து மக்கள் முன்னோர்களின் தியாக புத்தியை அறிந்தவராய் மனித சமூகத்தின் பண்பாட்டை சீரிய முறையில் வளர்க்க அரும்பாடு பட ஹேதுவாகிறது. நல் வாழ்க்கை முறையில் செலவிடப்பட்ட ஒவ்வொன்றும் பலன் தருமென்பதில் ஐயமில்லை—மனித ஜாதியின் பண்பை வளர்ப்பதும் அவைகளேயாம்.

பொதுவாக சமூகம் எப்படி அமைக்கப்படுகின்றதோ, அவ்

விதமே தனியொருவனுடைய வாழ்க்கைத் தரமும் மதிப்பிடப் படுகிறது. சமுதாயம் தழைத் தோங்கி வளர்ந்தாலேயே மனித னும் இகபர வாழ்வின் தன்மை களையும் அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். தனிமனித ஞகத் தன்னை சமூகத்திலிருந்து பிரித்துக்கொள்ள வேண்டு மென்று நினைப்பது தவறு. அறி யாமையின் தோற்றம். சமூகத் தின் மத்தியில் அதனுடைய நன்மைக்காக வாழ்கின்ருேம். சரியில்லாத சூழ்நிலையின் மத்தி யில் சில ஆத்மாக்கள் மட்டும் பரிசுத்தமாக வாழ்ந்து வருவது முடியாதது. எவ்வளவு திட காத்திரனுயிருந்த போதிலும் ஒரு வனைச் சுற்றி அசுத்தம் நிரம்பி யிருந்தால் அவன் என்றுமே சாச்வதமாக நோயின்றி வாழ் வது அசாத்தியம். எனவே சுற்றியுள்ள அசுத்தத்தைப் போக்குவதாலேயே, தன்னைக் காப்பாற்றிக் கொள்வதோடில் லாமல் இதரர்களையும் பரிசுத்த மாக வாழ்விக்கச் செய்கிருன். எனவே மனித வர்க்கத்தினால் நிறைந்த சமுதாயமும் தனியொரு வனும் தனியாகப் பிரிந்து வாழக் கூடுமென்பது நினைக்கத் தகாதது.

உலகத்தின் எந்த பாகத்தி லிருந்த போதிலும் எவனொரு வன், தன்னலத்தைக் கருதாமல், உண்மைக்கும், நியாயத்திற்கும் போராடுகிருனே, அவன் நமது சகோதரன். எல்லோருடைய இறுதி லட்சியங்கள் ஒன்றே. ஆனல் அதையடையப் பல வழி களைக் கையாள்கின்றனர். அடிப் படையில் எல்லோருடைய கருத்துக்களும், மக்கள் உயர்வு, தாழ்வென்கிற வேற்றுமையின்றி சரிசமமாக ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்பதேயாம். அதையே சமத்துவம், சகோதரத் துவமென்று கூறுகிருேம்.

உலகத் தியாகிகளின் எண்ணங் களும், செய்கைகளும் ஒன்று தான். மானிட சமுதாயம் பெரிது. அது சமாளிக்க முடி யாதது யென்பது தவறு. நமது பலவீனத்தையே அது குறிக்கும். மனிதனின் லட்சியங்களையே மதிப்பிடுகிருேமே தவிர அவனது செல்வாக்கை நினைப்பதில்லை.

"நாம் செய்யபோகின்ற காரி யம் மனித சமுதாயத்திற்கு நன்மை ஏற்படச் செய்யுமா, செய்யாதா?" என்பதே நமது மனதில் தோன்ற வேண்டிய முதல் கேள்வி.

நன்மை யேற்படும் பட்சத்தில் எப் பாடுபட்டாலும் நம்பிக்கை யுடன் உறுதியாகப் போராட வேண்டியதே மனிதனின் முதல் கடமை. லட்சியத்தின் வெற் றியை அவன் ஆயுளில் காண முடியா விடினும் அவனது உயர்ந்த லட்சியம் என்றென்றும் போற்றற் குரியனவாகத் திகழும் யென்பதில் சந்தேக மில்லை.

அமர வாழ்வை யடைந்த, மகாத்மா காந்தியடிகளின் உயர்ந்த லட்சிய சித்தியை நாம் இன்று கண்கூடாகப் பார்த்த பிறகாவது, உண்மையை யுண ராம லிருக்க முடியுமா? சமூகத் தின் நலனுக்குழைத்து உயிர் நீத்த தியாகி யல்லவா! உலகத் தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளி லுள்ள பாமர மக்களும் அவரது பிரிவைச் சகியாது கதறி கண்ணீர் விடுகின்றனர். அந்தோ! அவரது செய்கையே யல்லவா அதற்குக் காரணமாக நின்றது. இனி இப்பேர்ப்பட்ட ஒருவரை நாம் காண்பதரிது. எனினும் அவரது அழியாத

பெரும் ஜோதியின் ஒளியை நாடிச் செல்ல முயல்வதே மக்கள் கடமை. சமுதாயம் ஓங்கி வளரச் செய்யும் முயற்சி வீணாகாமலிருக்க, அவரது வழியில் செல்லுவோம். அஹிம்சையும், சத்தியமுமே அவரது லட்சியப்பாதை.

தேச சேவை

சமூகத்தை சகோதரப்பான்மையுடன் நடத்துகின்ற மனிதன் தன்னை சரியான பிரஜையாக்கிக் கொள்ள வேண்டியதும் ஒன்று.

"ஒரு பெரிய வட்டத்திற்குள் அமைந்த இரு வட்டங்கள் குடும்பமும், தேசமும். அவை யிரண்டும் ஏணிப்படிகளின் உச்சியை யடைய ஏற்படுத்தப்பட்ட இரு படிக்கட்டுகள் போன்றவை" யென ஒரு ஆங்கிலப் பேராசிரியர் எழுதுகிறார். எனவே தேசம், குடும்பம், இவை யிரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதது யென ஓர் இதாலிய பேரறிஞர் கூறுகிறார்.

மனிதன், என்று அன்பின் அணைப்பில் மனித வர்க்கத்தை ஒன்று சேர்க்காமலும், அத்தகைய ஐக்கிய மனப்பான்மையில் நம்பிக்கையை இழந்தும், தன் அண்டையிலிருப்பவன் அவதியுறும்போது அதைத் தவிர்க்க வழி தேடாமல், அதைப் பார்த்து சும்மாயிருப்பதும், சுயநலங் கொண்டவனாயும் நடந்து கொள்ளும்போது, அவன் கடவுளால் அமைக்கப்பெற்ற மனித வாழ்க்கையின் நியதியை மீறியவனாய் வருங்காலத்தில் தீவினைகளை தானே வரவழைத்துக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ளுகிறான்.

தனிமனிதனொருவன் இன்னல்களைச் சிறியவுதவியால் தீர்த்து கண்யமாய் நடந்து கொண்டோமென்று திருப்தியயடைவது சரியல்ல. இத்தகைய தர்ம குணத்தினால் வருங்காலத்தில் நம்பிக்கை யேற்படுவது முடியாது. மனிதவர்க்க முழுமையையுமே சங்கத்தின் மூலமாக சகோதர மனப்பான்மையுடன் ஒரே பொதுவான சமூக முன்னேற்றமடைவதற்கான லட்சியத்துடன் பாடுபடுவதே அவசியமாகிறது. ஆனால் பாஷைகளின் வேற்றுமையும், நடையுடை பாவனைகளின் வித்தியாசத்தினாலும் முதன்முதலில் சிரமமாகவேயிருக்கும். எனினும் மனித சாம்ராஜ்யத்தை தகுதியான முறையில் நிர்மாணம் செய்ய எல்லோரும் ஒன்றுபட்டால்தான் நிறைவேறு மென்பதில் சந்தேகமில்லை.

எக்காரியத்தைத் தொடங்கும் போதும் மனிதனின் அந்தராத்மா அவனையுமறியாமலேயே பயபக்தியுடன் கடவுளை நோக்கி, "கடவுளே, என்னைக் காப்பாற்றுவாய், இக் காரியத்தை வெற்றியுறச் செய்யவேணு" மென்பதாகக் கூறிக்கொள்கிறது.

மனித வர்க்கத்தைத் ஒரே மாதிரியாக சிருஷ்டிக்கவில்லை. பற்பல விதமாக வகுப்புவாரியாகப் பிரித்தும், அவரவர்களுக்கு தகுந்தபடியே பூமிகளைப் பிரித்தும், அறிவு, ஆற்றல்கள் யாவும் வெகு திறமையுடன் சிருஷ்டி செய்திருக்கின்றார். சிருஷ்டி விநோதத்தை நம்மால் பரிசீலித்து முடிவு காணமுடியுமா?

கடவுளின் ஒழுங்கான சிருஷ்டியின் முறைமைகள், மனிதனின் பேராசைபோன்ற துர் எண்ணங்களால் தூண்டப்பெற்ற முறைமை தவறிய நிர்வாகத்தினாலும், மனிதன் பிறந்த பூமிகளின் வரைகளைத் தகர்த்து மிருகத் தன

மாக நடந்து கொள்ளுவதினுலும் சீர்குலைந்து விடுகிறது.

மக்களின் ஒழுங்கீன நிர்வாகமே இயற்கையா யமைந்த தேசத்தின் எல்லைகளை சிதறடிக்கின்றது. எல்லைகளின் விஷயமாக எழும் பிரச்னை பல. இப்படியே பற்பலவிதமாக ஒருவருக்கொருவர் விரோதம் பலப்பட்டு இறுதியில் மக்களின் நாசத்திற்கு மூல காரணமான பெரும் யுத்தங்களையே ஆரம்பிக்கப்படுவதையும் காண்கிறோம்.

பாரம்பரிய முறையில் வந்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பேராசையும், சுயநல மிக்கதான சுய ஜாதி மதாபிமானமும் மக்களை நிலை தவறச் செய்கிறது. இத்தகைய சீர் கெட்ட நிர்வாகத்தின் பயனாய் கடவுளால் அமைக்கப் பெற்ற இயற்கை வளங்கள் நிரம்பிய நாடுகள் பொலிவிழந்து அமைதியற்று போராட்டங்களிலீடுபடுவதால் தத்தம் அழிவையே தேடிக் கொள்ளுகின்றன.

இதை யுணர்ந்த மக்களே நாட்டின் நலனைக் கருதி உலக முழுமையையுமே சகோதர முறையிலீடுபடச் செய்து மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக சீர்கெட்ட அரசியல் ஸ்தாபனங்களையெதிர்க்க ஒன்று திரண்டு போராட்டத்தை நடத்த முற்படுகின்றனர்.

மனித வர்க்கம் சிதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு தத்தம் தேசு முறைகளுக்கொத்த நடை யுடை பாவனைகளுடன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனர். எனினும், அடிப்படையாக மனிதவர்க்கம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவமென்கிற உயர்ந்த லட்சியங்களுடனேயே பிறந்திருக்கின்றனர். உலக முழுமைக்கும் சிறந்த ஒரே லட்சியங்கள் தாம். அகம்பாவ குணத்தின் பயனுகவே அதை யுணர முடிவதில்லை. மகாத்மா காந்தியடிகள் போன்ற பெரியார்களின் அறிவுரைகளினுலேயே மனிதன் தன்னறியாமையை விலக்க முயல்கிருன்.

"நமது நாடு" என்பதொன்று இல்லாவிடில் நமக்குப் பெயரோ, கீர்த்தியோ, உரிமையோ, உலகத்தின் மக்களுடன் சகோதர தொடர்போ எதுவுமிருக்க முடியாது. அதிலும் பிறர் கீழ் அடிமை கொண்ட நாட்டின் மக்களும் சுகமாக வாழ்வதென்பது கனவிலும் நினைக்க முடியாதது. சுயநல வேட்கை மிகுந்த அந்நிய ஆதிக்கம் நம்மை கடைத்தேறச் செய்வதில் எவ்வளவு அக்கரையுள்ளது என்பதை இதுகாறும் அடிமைத் தளைகளில் தவித்து, கத்தியின்றி, ரத்தமின்றி அஹிம்சா முறையில் சத்திய மூர்த்தியாகிய அமரர் மகாத்மா காந்தியடிகளால் விடுவிக்கப் பெற்ற நம்நிலையை சற்று ஆழ்ந்து சிந்தித்தால் போதுமானதன்றோ. மக்களின் நிலை உயர வேண்டுமாயின் அது சுதந்திரமுள்ள நாடாக யிருக்க வேண்டுமென்பதை அறிந்தோமல்லவா. அதன் நல் வாழ்வும் தாழ்வும் அந்நாட்டு மக்களின் போக்கை அநுசரித்தே அமையும்.

முதன் முதலில் நாடு சுதந்திரமடைய வேண்டும். பிறகே அதன் மக்களின் சுக வாழ்வைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

சுதந்திரமடைந்த நாடு தனக்குத்தானே மக்களின் ஐக்கிய முன்னணியில் தம் பொருளாதார நிலைமைகளைச் சீர் படுத்திக்கொள்ளும். தேசிய சர்க்கார் பொருளாதார பிரச்னைக்கு முக்கியமான "மூலதனத்தையும், உற்பத்தி

யையும்" கவனித்துக் கொள்வ தாலேயே நாட்டின் நிலைமைமுன் னேறச் செய்யும்.

எனவே நாட்டின் முன்னேற் றத்திற்கு மக்கள் அளிக்கும் பொக்கிஷம் "உழைப்பு. நமது கடமை உழைப்பதே" உழைப்பையளித்த பிறகே நாம் உரிமை கோரலாம். எனவே மக்கள் "நமது நாடு" என்று போற்றி தமது பிறந்த தேசத்தை நேசிப்பதின் அறிகுறி தேச நிர் மாண திட்டங்களில் பூரணமாக ஒத்துழைத்தலேயாம்.

நமது நாடு, நமது வீடு. அதில் வசிக்கும் பல்வேறு மக்களும் அன்பினாலேயே ஒருவருக்கொரு வர் பிணைக்கப் பட்டிருக்கிறோம். காந்தி மகானும் "அன்பின்" வடிவத்தில்தான் உலகம் முழு வதையும் கண்டார். "அன்பே" அவர் கண்ட தெய்வம். "சத்தி யமே" அவர் அனுஷ்டித்த கொள்கை. எந்தக் காலத்திலும் எவரும் சாதிக்க முடியாதவை களை தனது பற்றற்ற உயர்ந்த கொள்கைகளினால் சாதித்தார்.

நமது பூமியில் விதைக்கின்ற உழைப்பின் பலனை பூவுலகு முழு வதுமே மக்களுக்கு உபயோகப் படுத்தும்படியாக இருக்க வேண் டும். உண்மையாக நமது தேசத் திற்கு உழைப்பது, மனிதவர்க் கத்திற்கே உழைக்கின்றோம். பொதுஜன நலனுக்கு பயன் படும் முறையில் "தேசசேவை" யாகிற சக்தி நமக்கு உதவுகிறது. இச் சக்தியை யிழந்தால் நாம் நமது நாட்டிற்கும், மனித வர்க்கத்திற்கும் பிரயோசன மற்றவர்க ளாவோம்.

மனிதவர்க்கத்தை ஒரு பெருஞ் சேனைக் கொப்பிடலாம். ஒரு பெருஞ்சேனையில் எத்தனையோ அணிவகுப்புகள் இருக்கின்றன. அதுபோலவேதான் மனிதவர்க்க மும். ஒவ்வொருவரும் அவ ரவர் திறமை, அறிவுக்கேற்றபடி யான வேலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை யேற்றிருக்கின்ற னர். எல்லோருடைய திறமை யின் பலன் தான் "வெற்றி" யாகிற புகழ். எனவே தனிமுறை யில் நில்லாமல், "நாம்" என்கிற ஐக்கிய உணர்ச்சியுடன் நமது சகோதர மக்களின் அன்பு, ஆதர வினால் முன்னேற முயல வேண் டும்.

நமது நாடு பிரிக்கப்படாமல் ஒன்றாய் திகழ வேண்டும். எவ் விதம் ஒரு குடும்பத்தில், ஒருவர் வெளியே சென்று விட்டதாலோ மற்ற ஏதாவது அலுவல்களி னாலோ பிரிவு ஏற்பட்டால், அக் குடும்பத்திலுள்ள மற்றவர் களுக்கு அப்பிரிவினை எவ்வளவு வருத்தத்தைக் கொடுக்குமோ, அவ்விதமே நமது தேசம் துண்டு துண்டாகப் பிரிக்கப்படின் நாட்டின் மக்கள் சந்தோஷமாக வாழ்வது முடியாது. பல பாகங் களாகப் பிரிப்பதைக் காட்டிலும் ஒரே தலைமையின் கீழ் ஒற்றுமை யாக வாழ்வதே சிறந்தது. உல கத்தின் மற்றைய பாகத்திலும் தலை நிமிர்ந்து பெருமையுடன் சீரிய முறையில் வாழும் "நமது நாடு" என்று சொல்லிக் கொள் ளவும் தகுந்தது.

அரசியல் வகுப்பதும் ஒரு சங் கம். எனவே தேசம் மக்களின் உரிமைகளை வகுக்கின்றது. எந்தத் தேசம் மக்களின் உரிமைகளைப் பறிக்க முற்படு கின்றதோ அது உண்மையில் மனித வர்க்கம் போற்றும் நாடல்ல. மிருகங்கள் வாழும் காடேயென்றாலும் தகும். எல் லோராலும் போற்றப்படும் உயர்ந்த கொள்கைகளோ, லட்

சியங்களோ இல்லாத ஒரு தேசத்தை ஒரு தேசமென்றோ, அதில் வாழும் மக்களை மனிதக் கூட்டத்தைச் சார்ந்தவர்களென்றோ கூற முடியாது. எனவே நமது தாயகத்தினிடத்தில் நாம் கொண்ட அன்பைத் தோற்றுவிக்க, அதிலிருக்கின்ற சூழல்களை யெல்லாம் தள்ளி, பெரியோர்களால் வகுக்கப்பட்ட உயர்ந்த லட்சியங்களை கடைப்பிடித்து அவர்கள் வழியில் செல்வதே மக்கள் "தேச சேவை" யென்கிற மகத்தான இயக்கத்தில் வெற்றி காண முடியும்.

அடிமைநாட்டின் மக்கள் தாம் பிறந்த பூமியை விடுவிக்கத் தமது உயிரையும் தியாகம் செய்யத் துணிய வேண்டும். ஒரு நாட்டின் பெருமையும், சிறுமையும் அதனில் வாழும் மக்களைப் பொறுத்தே யிருக்கின்றது. நமது அரும் பெருந் தியாகி மகாத்மா காந்தியினால் தான் மேல் நாடு "இந்தியா"வை அறிந்தது. காந்தி யிருப்பிடத்திலிருந்து வந்ததாகக் கூறினால்தான் "இந்தியர்" எனப் பெருமையுடனும், அமோக வரவேற்புகளாலும் விசாரிக்கப்படுவர். தேச விடுதலைக்கு தமது உண்மை உழைப்பின் மூலமாக வெற்றி கண்ட சுயநலத் தியாகியாகிய காந்தியே இந்தியா, இந்தியாவே காந்தி யென்கிற புகழுரைகளால் போற்றப் படுகின்றவராயுமிருக்கின்றவரின் நல் வழிகளைக் கடைப்பிடித்து ஐக்கியப் பான்மையுடன் முன்னேற்றத்திற்கு பாடுபடுதலே மக்களின் இன்றியமையாத கடமைகளில் ஒன்று. மனித வர்க்கத்தின் நலனுக் குழைப்பதே தேசத்தைப் பலப்படுத்தும். கல்வி, பொருளாதாரம் முதலிய வழிகளில் அவர்கள் நட்டவிதை நாடு செழித்து வளர உதவும். நாடு அமர நாடாக விளங்கவும் செய்யும்—எவன் தனது தாய் நாட்டை பொன்னுடாகச் செய்ய விரும்புகிறானோ, அவன் சாதி சமய வேறுபாடுகளினால் அமைதியை இழக்காமல் "காந்திய" வழியைப் பின்பற்றினால்தான் காந்தியடிகள் கனவாகிய ராமராஜ்யம் ஸ்தாபிக்கப் பெற்று அவரது கனவும் நினைவாகுமென்பதில் ஐயமில்லை. நடைமுறையில் அக் கொள்கைகளைப் பின் பற்றுவதே மனிதனின் முதன்மையான குடும்பசேவைக்கடமைகளில் ஒன்று.

தேசத்தின் இருதயம் குடும்பம். மனிதனின் சுக துக்கங்களிலீடுபட்டு, அவனுக்கு அனுகூலமானமுறையில் அவன் பளுவைக் குறைக்க அரும் பாடு படுகின்றனர் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர், மனைவி, மக்கள் இதர உறவினர்களும்கூட.

குடும்பத்தின் சக்தி பெண். அவள் சகல விதத்திலும் மனிதனுக்கு உதவியாக நிற்கிறாள். அன்பு, ஆதரவு இவ் விரண்டே அவளுடைய ஆயுதங்கள். அவைகளின்உதவியால்தன் உழைப்பை யளிக்கிறாள். எனவே அவளே தெய்வமாகவே கொண்டாடப் படத் தகுந்தவளென பெரியோர்களின் அறிவுரைகள் கூறுகின்றன. எவ்விதமான கஷ்டங்களையும் தாங்குகிற சகிப்புத் தன்மை யென்கிற அருங் குணம் அவளுடன் பிறப்பாக அமைந்திருப்பதாலேயே மக்களின் கஷ்டங்களை ஆய்ந்து அதைத் தீர்க்கவே முற்படுகிறாள். சுயநலமற்ற அவளது சேவை ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவித ஸ்தானத்தில் இன்றியமையாதது.

உலகைக் காக்கின்றவள் சக்தியே! மக்களை உருவாக்குவதில் தாய்மையின் சக்தி பூரணமாக பெண்களிடத்திலேயே அமைந்திருப்பதால்தான் அறிவுள்ளவர்களால் அவர்கள் வாழ்வில் பிரதான அம்சமாகக் கருதப்படுகின்றனர்.

குழந்தைப் பருவத்தில் அன்பு என்பதைத் தாயின் புனிதமான அன்பின் அடையாளமாகிய முத்தத்தினல்தான் குழந்தை உணர ஆரம்பிக்கின்றது. யௌவனத்தில் வாழ்க்கைத் துணைவியினுடைய அன்பினல் வருங் காலத்தின் மீதுநம்பிக்கையும், உறுதியும் தோன்றுகிறது. வருங்காலத்தின் போக்கைப் படிப்படியாக உணரவும் சாத்தியமாகிறது இல்லாளினல்.

நமக்கும் வருங்காலத் தலைமுறைகளுக்கும் ஒரு இணைப்பை உண்டாக்குகிறது குழந்தை. அதன் மூலமாகவே குடும்பமும் வளர்ந்து வாழ்கின்றது.

கடவுளால் படைக்கப்பட்டது குடும்பம். அதை யழிக்க முயல்வது மனிதனின் அகம்பாவத்தையே குறிக்கும். எனினும் அழிப்பது அவனல் ஆகாது. தேசத்தைப் போன்று குடும்பமும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

மனித வர்க்கத்தை வளர்க்கும் தொட்டில் குடும்பம். அதை ஒழுங்கு முறையில் முன்னேறச் செய்து உயர்ந்த லட்சியங்களை காலங்கள் தோறும் அழியாமல் பாதுகாக்க முயலுகிறது.

மனித வர்க்கத்திற்கு தேசத்தினிடம் கொண்டுள்ள தொடர்பு போலவே, குடும்பமும் தேசத்தினிடம் தொடர்பு கொள்ள வேண்டும்—தேசம் மனித வர்க்கத்தின் அறிவை வளர்க்கப் பாடுபடுகிறது. அதுபோலவே குடும்பமும் சரியான பிரஜைகளைத் தயாரிக்க பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. எனவே தேசமும் குடும்பமும் ஒரே லட்சியத்தைக் குறித்துச்செல்லும் இரு பாதைகள்.

"அன்பை" தவருன பாதையில், அதாவது சுயநலமாகிய தீக்குணங்களில், செல்லவொட்டாமல், உண்மையான காரணகாரியத்திற்கே உபயோகிக்க வேண்டும்.

மக்களுக்குத் தைரியமூட்டும் வகையில், நமது தேசத்திற்காக போராடவும், பதவி, அதிகார மோகத்தை ஒழித்து சமூகத்திற்கு நலனைச் செய்ய உண்மையும், நேர்மையுமான வழிகளில் செலலவுமே போதிக்கவேண்டும். அப்பொழுதே நாட்டின் மக்கள் உயர்ந்த இயல்புடனும் சிறந்த பண்பாட்டுடனும் விளக்குவர்.

பெண்மையைச் சரி சமமான முறையில நடத்த, மனிதன் முற்படவேண்டும். வெறும் பேச்சில் "ஸ்திரீ சுதந்திரத்தை"க் கூறுபவன் ஒருநாளும் அதை சொந்த முறையில் உபயோகிக்கத்துணியாமல் இன்னும் பல அடக்கு முறைகளால் ஸ்திரீ வர்க்கத்தை பெரிதும் அறியாமை இருளில் கிடத்திவிட்டு, வெளியே பிரமாதமாக பிரசாரம் செய்வதை நாம் காண்கிறேம். ஆனல் இன்று சாந்திய சகாப்த ஆரம்பத்தில்தான் பெண் வர்க்கம் தனது சுய நிலைக்குச் சற்று தைரியமாக தலை நிமிரத் தொடங்கி யிருக்கின்றது.

ஆண்களால் பெண்களுக்குப் பல விதமான கஷ்டங்கள் விளைந்திருக்கின்றன. எனினும் பொறுமையின் பிறப்பிடமாகிய பெண் காலக்கிரமத்தில் தன்

லையை மனிதன் உணர நேருமென்றே காத்திருந்தாள். அவளுடைய எண்ணமும் ஈடேறுங் காலம் நெருங்கிக் கொண்டு தானிருக்கிறது.

மனித வர்க்கத்திற்குப் பயன் படும் முறையில் ஒரே மாதிரியாக படைக்கப்பட்டவர் ஆண், பெண்ணிருவரும். அவர்களுக்குள் வேற்றுமை யில்லை. உடலும், உயிரும் போன்றவர். ஒருவரின்றி ஒருவர் வாழ்வது தகாது. ஒரே ஸ்தாயியில் அமைக்கப்பட்ட இரு ஸ்வரங்கள் வேற்றுமையைக் காணமுடியுமா? அதுபோலவே இயற்கை அவர்களை சிருஷ்டி செய்து இருக்கிறது.

அறிவு, ஆற்றல்களில் வெவ்வேறு விதமாக யிருக்கலாம். மனித சமூகத்தை ஒன்று சேர்ப்பதில் ஆர்வங் கொண்ட இருவரும் தத்தம் திறமைக் கேற்ப பிரசாரம் நடத்தலாம். ஆனல் அவர்களுடைய கடமையின் லட்சியம் ஒன்றே யல்லவா. உடலும் உயிருமாகிய ஆண், பெண்ணிருவரும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான புனிதத் தொண்டிலீடு படவே தோன்றி யிருக்கின்றனர். ஆகையால் பெண்ணை சுக ஆக்கங்களில் மட்டும் தன் வாழ்க்கைத் துணைவி என்று மட்டுமில்லாமல், சமூகத்திற்கு நாம் பாடுபடும் ஒவ்வொரு உணர்ச்சியிலும், எண்ணத்திலும் செய்கையிலும் பங்கெடுத்துக் கொள்ள உதவவேண்டும். தேசிய வாழ்க்கையிலும் அவளை சமமாகக் கருதவேண்டும்.

"மனித ஆன்மாவின் இரு இறக்கைகள் போன்று பறந்து நாம் கொண்ட லட்சியம் ஈடேற ஆண்பெண் இருபாலரும் உழைக்கவேண்டு" மென ஒரு பேராசிரியர் கூறுகிறார்.

நமக்குப் பிறந்த குழந்தைகளை உண்மையான முறையில் நேசிக்க வேண்டும். தகுதி யில்லாத முறையில் அவர்களுக்குச் செல்லம் கொடுத்து அவர்களுடைய குணத்தைக் கெடுப்பதுபோன்றதான நமது அன்பு அவர்களை அழிப்பதாகவே யிருக்கும். கடவுளின் எதிரில் மனித வர்க்கத்தினர்க்கு சரியான முறையில் பயன்பட அவர்களை நற்குண வழிகளைக் கடைப்பிடிக்கச் செய்யும் பொறுப்பு பெற்றோர்களிடமே இருக்கிறது. வாழ்க்கையின் தத்துவங்களையும், அபிலாஷைகளையும் நன்குணரச் செய்ய வேண்டும்—சிறு வயது முதற்கொண்டே அச்சம், மடமை, போன்ற இழி குணங்களை ஒழித்தும், நேர்மை, தைரியம் போன்ற உயர் குணங்களைப் பின்பற்றவும் செய்வது பெற்றோரின் முதற் கடமை. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பதற் கேற்ப இளம் உள்ளத்தில் எது ஊன்றி விடுகிறதோ, அது நல்லதாயினும் கெட்டதாயினும் அதுவே பிற்காலத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்கிறதென்பது அனுபவ உண்மை. அதற்கு நற்சான்று காந்தியடிகளின் சரித்திரமேயாம். மனிதன் பிறர் உழைப்பில் தான் உல்லாசமாக வாழப் பிறக்கவில்லை என்பதையுணரச் செய்ய வேண்டும். தனக்கு வேண்டிய தேவைகளை தானே உழைத்துப் பெறவேண்டுமென்கிற போதனைசிறுவர்களின் மனதில் ஊன்ற வேண்டும். நமது நாட்டிற்கு இது தேவை என்பதை யுணராமலும், சுய நலமான கேளிக்கைகளில் மனதை

விட்டு தன்னலமாகவே ஒழுங்கு முறை தவறுபவர்களையே பெரும்பாலும் காண்கின்றோமெனின், அவர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. பெற்றோர் அல்லது அவர்களை வளர்த்தவர்களைதான் சாரும். சிற்சில சமயங்களில் திருடனுக்கு சத்புத்திரனும், சத்தானவனுக்கு திருடனான மகனும் பிறக்கின்றனர். அது விதிவிலக்கு. பெரும்பாலும் மக்கள் குணங்கள் வளர்ப்பு முறையிலும் சூழ் நிலையில் பழகுந் தன்மையிலுமே உருவாகின்றன. ஆதலால் பெற்றோர் சர்வ ஜாக்கிரதையுடன் மக்களின் உயர்ந்த பண்புகளை வளர்க்க பாடுபடுவது அவசியம்.

"நாம் பயிரை நல்ல முறையில் எருப்போட்டு வளர்த்தால், பயிர் செழுமையாக நன்றாக விளைந்து எல்லோருக்கும் உதவுகிறது. தண்ணீர் கூட வார்க்காமல் விட்டோமானால் கருகி அழிந்து யாவர்க்கும் பயன் படாமல் போகிறது" அது போலவேதான் மாந்தர் இயல்பும்.

தேசப் பற்றை குழந்தைகளிடம் வளர்க்க, நமது தேசம் முன்னிருந்த நிலைமையையும், இப்பொழுது இருக்கும் நிலைமையையும் அவர்களுக்கு சமயம் வரும்பொழுது பேச்சு வாக்கில் சொல்லி அவர்கள் இளம் மனதில் பதியச் செய்ய வேண்டும். தாய் அறிவுள்ளவளானால், குழந்தைகளுக்கு தன் ஒழிந்த நேரங்களில் விளையாட்டாகவும், பொழுது போக்காகவும்நாட்டின் வீரதீரர்களைப்பற்றி கதைகள் சொன்னால் அவர்கள் விஷயத்தை சீக்கிரமே பிடித்துக் கொள்ளுவார்கள். அவர்கள் பிடிவாதம், முதலிய குணங்களை நிதானமாகவும், பொறுமையாகவும் போக்கடிக்க வேண்டும். அதுவல்லாமல் வீணில் அவர்களை பயமுறுத்தல், முதலிய செய்கைகளால் கோழையுள்ளத்தினராய் தவறு செய்வதிலேயே விழுந்து விடுகிறார்கள். தியாகிகள் பட்ட கஷ்டங்களைச் சொல்லும் போதும் அவர்கள் எவ்விதம் அழியாத தன்னம்பிக்கையினாலும், அன்பினாலும், தம் காரியத்தை நிறைவேற்றினர்என்றும் ஆசையால் எவ்விதமான கஷ்டங்களை அடைந்தபோதிலும் தைரியமாகவும், நேர்மையாகவும், உண்மையைக் கைக்கொண்டு தன்னையே சகோதர மக்களின் நலனுக்கு அர்ப்பணம் செய்யவும் தயாராக இருக்க வேண்டுமென்றும் தோன்றும்படி செய்ய வேண்டும். குழந்தைப் பருவத்தில் தாயிடமே அதிக நேரமிருப்பதால் அறிவுள்ள தாய் தன் மகனைச் சரியான வழியில் வளர்ப்பாள். இல்லையேல் மூட மகனையே உலகத்திற்கு அளிப்பாள். எனவே பெண்ணின் அறிவு வளர்ந்தோங்கவும், அவர்களை இருளில் பதுங்கச் செய்யாமல் முன்னே அறிவின் தீபங்களாகச் செய்வது மனிதனின் கடமை. அதைத் தவறினால் நாட்டின் நல்ல பிரஜையை யளிப்பதிலும் தவறிவிடுகிறான்—அதிகார ஆசை எந்த மனிதனுக்கும் இருப்பது தவறு—அதாவது தன்னைபோன்ற இன்னொருவனை அடக்கி யாள்வது என்பதுதான் பெற்றோர், கூடப் பிறந்தோர், மனைவி, குழந்தைகள் குடும்பமாகிற மரத்தின் வெவ்வேறு கிளைகள்—அன்பின் பிணைப்பில் குடும்பத்தில் ஐக்கியம் நிறுவ வேண்டும். குடும்பத்தில் சமரஸமான பாவமிருந்தாலேயே தேசத்திற்கும் மக்களின் க்ஷேமத்திற்கும் குடும்பத்துடன் ஒத்துழைக்க இயலும்—குடும்பத்தின் பல்வேறு மக்களையும்

"அன்பு" ஒன்றினுலேயே ஆள முடியும்—தவிர, அதிகாரமும் அடக்கு முறையும் ஒரு நாளும் அவனுக்கு சாந்தியை அளிக்காது. குடும்பத்தில் சாந்திபெற "அன்பி"ன் சேவையே பிரதானம். அதை யளித்தால்தான் மனிதன் வாழ்க்கையின் இன்பத்தைச் சலிப்பின்றியனுபவிக்க சாத்தியமாகும்.

ஆன்மீக வளர்ச்சியுடன்கூடிய அறிவு போதனைகளினுல் மட்டுமே மனிதன் ஸத்தியம், அஹிம்சை, அன்பு, முதலியவைகளின் மூலமாகத் தனது கடமைகளை வெவ்வேறுவிதமான பாதைகளில் நிறைவேற்ற சக்தியைப் பெறுவான். பாலத்காரமின்றி அஹிம்சா முறையினுலேயேவகாதிபத்தியத்தின் தளைகளிலிருந்த நமது தாய் நாடு இந்தியா அமரர் மகாத்மா காந்தியடிகளினுல் விடுதலை பெறவில்லையா? அவரே நமது தெய்வம். அவரது அன்பின் அழியா வழியில் சென்று நாட்டின் நிர்மாணத் திட்டங்களைச்சரிவரநிறைவேற்றி அவர் மனிதவர்க்கத்தின் பண்பாட்டிற்கு விதைத்த விதையை செழித்து ஓங்கி வளரச் செய்து உலகமெங்கும் மக்கள் தத்தம் கடமைகளை இதன் மூலமாக உணர்ந்தவராய் மிருகத்தனமான செயல்களில் ஈடுபடாமல் "தர்ம வழி"யில் பின்பற்ற தூண்டுவத்த நமது கடமை. இனியும் "உலகத்திற்கு" இந்தியா ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டுமென்பதே இந்திய மக்களின் தலைசிறந்த கடமைகளில் முக்கியமானதாகும்.

விழிப்புணர்ச்சி வேண்டும்

நன்மையான வேலைகளுக்குக் கணவன்மாரை எந்த அளவிற்குத் திருப்பலாம் என்பதை பலே விமார்கள் இன்னும் அறிந்துகொள்ள வில்லை. தங்களை அறியாமலே அந்தச் செல்வாக்கைப் பெண்கள் செலுத்துகிறுர்கள் என்பது உண்மைதான். ஆனல், அது போதாது. அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். விழிப்புணர்ச்சி வாழ்க்கைத் துணைவர்களைத் திருத்துவதற்குரிய வழியைக் காட்டும்.

—'காந்தியடிகள்'

எதிர் பாராதது!

"கல்பனா"

அவளை நான் முதலில் பார்க்கவில்லை.

ஆனால் எதிரே கிடந்த நூலுருண்டையைப் பார்த்தேன்! பக்கத்திலே இரண்டு ஊசிகள். அவைகளுக்குத் துணையாக ஒரு பை இருந்தது. ஆனால் உடையவளைக் காணோம். கதவோரத்தில் நின்றவளாய்த் தானிருக்குமோ என்று நினைத்தேன். அவள் யாரோ ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தாள். என் ஊகம் சரிதான். யாருடனோ பேசிக் கொண்டுதானிருந்தாள். வண்டி புறப்படும் மணி அடித்தது. பேசியவரை அனுப்பி விட்டுப் பரபரவென்று எதிரே வந்து உட்கார்ந்தாள். நான் எதிரில் சோர்ந்து உட்கார்ந்திருப்பதை அவள் கவனித்தாளோ இல்லையோ! அவள் கைகள் ஊசியையும் நூலையும் எடுத்தன. விழிகள் ஒரு நெம்பர்க் காகிதத்தில் பதிந்தன. நீலமும் சிவப்புமாக நூல் விரல்களிடையே நெளிந்தன.

அந்த விரல்களுக்குத்தான் என்ன துடிப்பு! உள்ளத் துடிப்பையும், உணர்ச்சி வேகத்தையும் அந்த விரல்கள் தெளிவாகக் காட்டின!

நொடிக்கு நொடி என் வியப்பு வளர்ந்தது. இந்தப் பெண்களுக்குத்தான் இம்மாதிரி நுண் கலைகளில் எவ்வளவு தேர்ச்சி உண்டாகி விடுகிறது! அது ஒரு ஸ்வெட்டரா யிருக்கலாம். குழந்தைக்கோ பெரியவருக்கோ தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்ததெல்லாம் அந்த விரல்களின் சுறு சுறுப்புத்தான். மின்வெட்டுப் போன்ற அவைகளின் துடி துடிப்புத்தான் என்னைப் பிரமிக்கச் செய்தது.

என் பிரமை கலந்த பார்வையை அவள் கவனித்திருக்க வேண்டும்.

சட்டென்று அவள் முகத்தில் மருட்சி கலந்த மாறுதல். ஏன்; இவன் இப்படிப் பார்க்கிறான் என்ற எண்ணமும் அவளுக்கு உண்டாகி யிருக்கலாம். இருந்தாலும் அவள் என்னைப் பார்த்ததாக காட்டிக் கொள்ள வில்லை.

என் மனம் துணுக்குற்றது. நான் அவள் முகத்தை அதுகாறும் உற்றுப் பார்க்கவில்லை. அப்போதுதான் பார்த்தேன்.

நான் கதாசிரியன். ஆகவே அவள் உருவத்தை வர்ணித்தால் வளரும். வர்ணிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அழகான, கவர்ச்சியான முகம், இவ்வளவே போதும்.

உள்ளம் துடித்தது பேச்சுக் கொடுக்க. உணர்ச்சியை வசப்படுத்த மனச்சாட்சி முனைந்தது. எப்படியாவது பேசத்தான் வேண்டும்! என்ன பேசுவது? எதற்காகப் பேச்சுக் கொடுக்கிறான் இவன்? என்று அவள் அருவருத்தால்— அலாதி அச்சம், சந்தேகம்

சென்ற இதழில் அவள் சொன்னாள். இந்த இதழில் 'அவர்' சொல்லுகிறார். அவர் மனைவியும், மனச்சாட்சியும் அவரைப் படுத்தும் பாட்டைக்கண்டு நமக்குஐயோ! பாவம்! என்றுசொல்லத் தோன்றுகிறது, அவர் மனைவியும் அடுத்தாற்போல் சொல்லட்டும்!

அலட்டிவிட்டது. மயக்கம், திகைப்புக்கு அடிகோலிவிட்டது. என்றாலும் எப்படியோ பரஸ்பர அறிமுகம் துரிதமாயிருந்தது.

அவள் பெயரைச் சொன்னாள். திடுக்கிட்டேன். உடல் மயிர்க் கூச்செறிந்தது. உள்ளம் பூரிப்பில் திளைத்தது. உண்மைதான். அவளைவிட அந்தப் பெயர் என்னை வசீகரித்துவிட்டது. அவள் பெயரால் 'அவளே' என்னை வசீகரித்துவிட்டாள். கவர்ச்சி பெயரிலும் உருவிலும் திளைத்துவிட்டது.

இதன் காரணமாக அவளிடம் திடீர் அக்கரையும் உண்டாகி விட்டது. என்னுடைய இந்த அக்கரையை அவளும் ஏற்றுக் கொண்டாள். அதே சமயம் அவளைச் சோதனை செய்யும் உள்ளம் விழைந்தது தவறுதான். ஆனால் அவளுடைய மனம் அறிய என்மனம் துடித்தது. நெடு நாளாக நான் எதிர்பார்த்த பெயர் கொண்டவள் அவள்.

அடுத்த ஸ்டேஷனில் இறங்கு கிறேன் என்று உண்மையைச் சொன்னேன். சோதிக்கவும் பயன்பட்டது. அவள் கண்கள் வியப்பால், திகைப்பால் மலர்ந்தன!

'இதற்குள்ளாகவா?'

அவளுடைய இந்தக் கேள்வி உணர்ச்சி நிலையில் ஒரு இன்ப மின்னல்.

'ஏன் இறங்க வேண்டும்? கூடவே அவள் போகும் வரை நானும் தொடர்ந்தால்—

சேச்சே! முட்டாள் மனிதா! ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக்கூடாதா? என்று மனச்சாட்சி இடித்ததும் தெளிந்து கொண்டேன்.

'இறங்கினால் என்ன? சீக்கிரமே சந்திப்போம்' ஒப்புக்குத் தான் இந்தப் பதில். உள்ளத்தில் அவள் மீண்டும் கேட்கப் போவ தென்ன என்ற விழைவு.

உங்களைத் திரும்பப் பார்ப்ப தெப்போது? அமிருத வர்ஷம் என்று கவிஞர்கள் கற்பனை செய்வார்கள். ஆனால் உண்மையும் இருக்கிறது அதில். ரயில் கர்ண கடூரமாக ஊதியது.

'சீக்கிரமே பார்க்கிறேன்.'

'சீக்கிரம் என்றால்—காலம் குறிப்பிட முடியாதா? உணர்ச்சி வேகத்துடன் வந்த அவளுடைய இந்தக் கேள்வியில் அலாதி ஏக்கங் கலந்த சோகம்! 'பிரிவு' இருவரையும் கலகலக்கச் செய்து விட்டது.

மீண்டும் உளறினேன்.

'இப்போது பிரிந்து விட்டால் என்ன? மனம் இணைந்த பிறகு? என்று தணிவாகப் பேசினேன். அவளுக்கு இதன் உள்தத்துவம் தெரியுமா? 'மனம் இணைந்தால், பிரிவினைக்கு இடமேது' என்று அவள் சிந்தித்திருக்க வேண்டும். அவளுடைய மவுனம் என்னுடைய மனதுக்குச் சங்கடம். நான் இறங்க வேண்டிய இடம் நெருங்கிக் கொண்டிருந்தது. 'நம்முடைய நட்பு தெய்வீக மானது.' ஏக காலத்தில் இருவரும் வாய் திறந்து இப்படிச் சொல்லிக் கொண்டோம்.

எங்கள் மனம் இணைந்ததற்கு இந்த நினைவு ஒரு அத்தாட்சி.

வண்டி நின்றதும் இறங்கினேன். உள்ளம் பிரிய வேண்டுமே என்று தவித்தது. அவள் காலையிலிருந்து பட்டினி! ரயிலில் வரும்போது தெரியாதா? ஏனோ இறங்கின பிறகுதான் தெரிந்தது. உணர்ச்சி வேகத்தில்

அறிவாளியும் மடையனுகி விடு கிருன். பசியின் சின்னம் அவள் முகத்தில் படர்ந்திருந்தது.

பழக்காரன் வந்தான். அவளுக்கு அந்தப் பழங்களை வாங்கிக் கொடுத்தால் என்ன?

'வேண்டாம் சார். காலையில் சாப்பிட்டுவிட்டுத் தானே வந்தேன்.'

'சார்' என்ற அழைப்பு என்னை மீண்டும் ஒரு சங்கடத்தில் நகர்த்தியது. இருந்தாலும் புன்னகையைப் பலவந்தமாக வரவழைத்துக் கொண்டேன்.

அவள் மறுக்கவில்லை, மறுத்தால் என் மனம் வருந்தும் என்பது அவளுக்குத் தெரியும். ஆமாம். அவள்தான் என்னைத் தெரிந்துகொண்டு விட்டாளே.

ரயில் புறப்பட இன்னும் அரை மணி நேரமாகும்.

அவளுடன் என்னென்னவோ பேச நினைத்தேன். அவளும் என் மாதிரிதான். ஆனால் இருவரும் மவுன நிலையில் திகைத்து விழித்தோம். எத்தனையோ விஷயங்களை எங்கள் மனம் நினைத்தும், வெளியிட இயலாது மயங்கினேம். ஏனோ? எப்படியாவது மனம் விட்டு எதாவது சொல்ல மாட்டாளா? இப்படித்தான் அவளும் நினைத்திருப்பாள்.

'கடிதம் எழுது' என்று அன்புக் கட்டளை போடத் துணிந்தேன்.

'நிச்சயமாக,' என்ற பதில் சட்டென்று வந்தது.

இன்ப உணர்ச்சி, ஏக்கத்துடன் கூடிய எக்காளம். மன வெளியிலே அவளுடைய உருவச் சித்திரம். தத்தளித்துக் குழம்பி நின்றேன்.

ரயில் உயிர் பெற்றது. என்னிடம் பொருமைகொண்டு விட்டது! எனவே அவளைச் சுமந்து நகர்ந்தது. ஆனல் அவள் உள்ளம் என்னிடமிருந்து நகரவில்லை. இதயத்தில் பதிந்த உருவம் நகரவில்லை. இருளைக் கிழித்து வந்த மின்னல்போல, எதிரில் இருந்து அவள் சென்றுலும், இதயத்தி லிருந்து நகரவில்லை. ஒளிப் பிழம்பாகி நிலைத்தது.

'நாளை கடிதம் போடுவாள்' என்று நான் எண்ணியபடி எக்காளமிட்ட இன்ப போதையுடன் நடந்தேன்.

முகத்தைத் துடைத்தபோது மயிர்கள் குத்திட்டு நின்றன. என்னுடைய இந்த விசித்திர முக பாவனை அவளுக்கு எப்படி இருந்திருக்கும்? நினைத்துச் சிரித்தேன். வருந்தினேன். ஆனல் என் முகத்தைக் காட்டிலும் அகத்தை சீக்கிரமாகவே அறிந்து கொண்டிருப்பாள்.

இந்த நம்பிக்கையால் பெருமிதமுற்று நடந்தேன். எதிரே இருந்த சலூனில் முக க்ஷவரம் செய்து கொணடேன். காலையிலேயே செய்துகொண்டு ரயில் ஏறியிருந்தால்—சேச்சே' இந்தப் புறத் தோற்றத்தில் மயங்கி விடுவாளா? அல்லது அப்படி அவள் மயங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதே தவறு. அவளைத் தாழ்மைப்படுத்துவதாகும்.

முக அழகைச் செய்து கொண்டதும், தலையை வாரிக்கொண்டு அலங்கார புருஷனுக நடந்தேன். இப்போது அவளைச் சந்தித்தால்—

'போடா முட்டாள்! அவள் ஏதோ சாதாரண முறையில் பேசியிருப்பாள். ரயில் நட்பு ரயிலுடன் போக வேண்டியது தானே?'

'நிச்சயமாகவா? அப்படியானல் அவள் நட்பு—'

'அவள் நட்பில் என்ன பிரமாதமாகக் கண்டுவிட்டாய் நீ? உன்னைப் போல அவளுக்கும் பேச ஒரு ஆள் வேண்டியிருந்தது. களங்கமில்லாமல் சம்பாஷிக்க வேண்டுமென்று விரும்பியிருப்பாள்.'

'அப்படியானால் அவள் என்னிடம் களங்கம் ஏதாவது கண்டாளா?'

'இல்லை. உன்னுடன் சம்பாஷிக்க அவள் விரும்பினதென்னவோ வாஸ்தவம்.'

சம்பாஷணைக்கு விருப்பம், கவர்ச்சியின் கருத்தல்லவா?

'அநாவசியமான சொல்லடுக்கு வேண்டாம். அவள் உன்னுடன் சம்பாஷிக்க விரும்பினாள். அவ்வளவுதான்.'

'ஏன் என்றுதான் கேட்கிறேன்.'

'ஏன்? பொழுது போகவேண்டும்.'

'வேறொன்றுக்குமில்லையா?'

'இல்லையென்றால்—இருந்தாலும் நிச்சயம் சொல்லமுடியாது.'

'பொழுது போகத்தான் ஊசியும் நூலும் இருந்தனவே?'

'அதில் சலிப்பேற்பட்டிருக்கலாம்.

'நான் அப்படி எண்ணவில்லை.'

ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட விஷயம்பற்றி உன்னுடன் பேச வேண்டியது ஏற்பட்டிருக்கலாம்.

'வாஸ்தவம். அந்த விஷயம் தீர்மானமாகிவிட்டது. ஆனால் அவள் என்னைப் போலவே, என்னிடம் மனம்—'

'அவசரப் படுகிறாய். ஆண் மனம் அவசரத்தால் நிலை பிறழ்ந்து விடுகிறது.'

'ஓஹோ! பெண்மனம் சந்தேகத்தால் நிலை குலைந்துவிடுமோ?'

'அவள் மனம் ஏற்கனவே நிலை குலைந்துதான் இருக்கிறது.'

'தோல்வியடைந்தவள் என்று அவள் சொன்னதனாலா?'

'ஆமாம்.'

'நான், அந்தத் தோல்வியை வெற்றியாக்க முடியாதா.'

'இதை அவளிடம் அல்லவா கேட்க வேண்டும்.!

'என்னுடைய உதவியை அவள் ஏற்றுக்கொள்ளுவாளா!'

'அவள் தான் இதற்கும் பதில் சொல்லவேண்டும். அவள் என்னுடைய உதவியை வேண்டுகிறாள் என்றே நான் நம்புகிறேன்.'

'உன் நம்பிக்கைக்கு அவள் காட்டிய ஆதாரம்.—'

'என்னைப் பிரியும் போது அவள் கொண்ட உணர்ச்சி நிலைதான் இதற்கு ஆதாரம்.'

'சபாஷ்! மன உணர்ச்சியையே கண்டு பிடித்தவன் போல் பேசுகிறாயே!'

'நிறுத்து. நீ மேலும் மேலும் இடித்துக் காட்ட வேண்டாம்.'

'நிறுத்தி விடுகிறேன். ஆனால் நாளை அவளை நீ சந்திக்கும்போது என் உதவியை நாடுவாய். நினைவிருக்கட்டும்' என்று மனச்சாட்சி விலகி நின்றது.

உண்மைதான். மனச்சாட்சியின் உதவியின்றி நான் எப்படிச் செல்ல முடியும்? இப்படியாகத்தானே மனச்சாட்சியுடன் போராடிக் கொண்டே நடந்தேன்.

எதிரே நின்ற வீடு, வாசல், மரம், மட்டைகள் எல்லாம் என்னை வியப்புடன் பார்த்தன. இன்பப் போதையில், பிரிவினை ஏக்கத்தில் தள்ளாடி நடப்பவனை பைத்தியப் பட்டம் கட்ட

எத்தனை நேரமாகும்? அவைகளுக்கு உயிர் இருந்தால்!

வீட்டு வாயிலிலே குழந்தை வரவேற்றது! மழலைச் சொல்லுடன் கைகளை நீட்டி அழைத்தது. சலிப்புடன் இருந்தாலும் குழந்தையின் மழலை என் மயக்கத்தைத் தெளிவித்தது.

'வாருங்கள்!' உள்ளே யிருந்து களிப்புடன் வந்தது அழைப்பு. கொண்டவள் அழைத்தாள் குழந்தையைப் போல. எதிர் பாராத வரவு! தனிமையை அனுபவித்த அவள் முகத்திலே திடீர் மலர்ச்சி. நாணமும் பெருமிதமும் கலந்து முகம் சிவந்தது.

என்னுடைய கலங்கிய மனதிலே ஒரு நெகிழ்ச்சி. சட்டையைக் கழட்டினேன். கையில் வாங்கினாள். அங்கவஸ்திரத்தைக் குழந்தை மாலையாக்கிக் கொண்டது.

இலையில் உட்கார்ந்தேன். குழந்தை பக்கத்தில் வந்து உட்கார்ந்தது. சின்னஞ் சிறு வாயைத் திறந்து காட்டியது. முத்து விரல்களால் இலையைத் துளாவியது.

'என்ன, அப்பாவோடு சாப்பாட்டுப் போட்டியா? என்று என் மனைவி கேட்டாள்.

குழந்தைக்கு அந்தக் கேள்வி லட்சியமில்லை. நான் கேள்வி போட வேண்டாமா? ஜாடை தெரிந்த பிறகும் மவுனமாயிருந்தால்—

'நேற்றைக் கெல்லாம் அலைச்சல். இன்றைக்கும் அலைச்சல்.'

'ஆமாம். உங்கள் வாழ்க்கையே அலைச்சல்தான். உடம்பைக் கவனித்துக் கொள்ளாமல்!

'என்? உடம்பைக் கவனித்துக் கொள்ளக் கூடாதா—?

பின்னே, என்ன? நான் சொல்வதற்கு எதிர் மாறாகத் தானே எதையும் செய்வீர்.

'ஓஹோ! இப்போது உடம்பு மட்டும் அல்ல என் உள்ளமும் சரியில்லை.'

'அது தான் தெரிந்த விஷயம் ஆயிற்றே!'

'எது தெரிந்த விஷயம்?'

'மனம் சரியில்லை என்று சொல்லும் பழக்கம்—'

'என்?'

'பேனா பிடித்தவர்களே இப்படித்தான்.'

'ஓஹோ! ரொம்ப அனுபவிச்ச மாதிரி சொல்லுகிறாயே—

'உங்கள் மனைவிதானே?'

'சந்தேகமில்லை. ஆனால் வேறு ஒரு சந்தேகம் உண்டாயிருக்கிறது'

'உங்களுக்கு இதுவும் சஹஜம்!'

'சஹஜம் என்றால்—'

'நீங்கள் வக்கீல் உத்தியோகம் பார்க்க வேண்டுமானால் கோர்ட்டுக்குப் போகவேண்டும்.'

'இதுதான் கோர்ட். நீதான் ஜட்ஜ்.'

'சாப்பாடு ஆகட்டும் முதலில்.'

'உத்திரவு'—ஜட்ஜின் உத்திரவுப்படி சாப்பாடு முடிந்தது. குழந்தை எங்களுடைய சம்பாஷணையைப்பற்றி கொஞ்சமேனும் லட்சியம் செய்ய வேண்டாமா? ஊஹூம்!

சிரம பரிகாரம், சிந்தனைக்கு இடம் தந்தது. 'பகல் பிரயாணம் குஷியாயிருந்ததா?' என்று கேட்டபடி அவள் வந்து சேர்ந்தாள்.

'குஷியாகவா? வெயில், பசி எல்லாம் குஷிக்குத் துணையாயிருந்தது.'

'உடம்புக்கு வெயில், வயிற்றிலே பசி. கண்கள் வாய் எல்லாம்—துணைதேடவில்லையா?'

'துணை தேடியதா என்று கேட்கிறாய்?'

'கேட்கவேணுமா? அடுத்த கதைக்கு வழி கிடைத்திருக்குமே! நடைமுறை அனுபவத்திலே!'

'பேஷ். கதைக்குக் கிடைத்தது உண்மைதான். ஆனால் உண்மை வேறு வகையில்—'

'இருந்தது என்று சொல்லப் போகிறீர்களா? தெரியுமே.'

'என்ன தெரியும்?'

'அவளைக் கண்டதும், உங்கள் கண்களைப்போல் மனம் கவர்ச்சிக்கப்பட்டது!'

'ஐயையோ! யாரைக் கண்டேன் என்று நான் உளறினேன் உன்னிடம்?'

'உளறல் இல்லை. உண்மை என்றீர்களே!'

'அட சஷ்டமே! ஒன்றுமே சொல்லவில்லையே! ஜோஸ்யம் கற்றுக் கொள்ளுகிறாயா?'

'ஜோஸ்யமா? நீங்கள்தான் கைரேகைப் பார்க்கக் கற்றுக் கொடுக்கிறேன் என்று ரொம்ப நாளாய் ஏமாற்றுகிறீர்களே!

'இப்பொழுதுந்தான் ஏமாற்றுகிறேன்?'

'யாரை, அவளையா?'

'இல்லை, உன்னைத்தான்.'

'உங்களால் முடியாது.'

'முடியாதென்றால்—

'முடியாதென்று அர்த்தம்!'

'அவள் யார் என்று தெரியுமா உனக்கு? என்று கேட்டுவிட்டுத் தெரியாத்தனமாய் அவளிடம் மாட்டிக்கொண்டேன்.

'தெரியுமே. உங்கள் கதைகளில் வரும் ஒரு கதாநாயகியாயிருப்பாள். அதே பெயருடையவளாய் இருப்பாள். அழகான யுவதியாய், படித்தவளாய்—இருப்பாள்.'

'போதுமே வர்ணனை- அப்பாவியாயிருந்தாயே நீ!'

'உங்களிடம் பழகினபிறகுமா? உங்கள் கதைகள் கற்றுத் தந்த பாடம்!

'சரிதான். அவளைப் பார்த்தது முதல் எனக்கு என்னமோ போல் இருக்கிறது. உண்மையிலே—'

'ஏன் வெட்கப்படணும்? அவளிடம் மனம் சென்றுவிட்டது என்று சொல்லுங்களேன்.'

'மனம் என்ன ரப்பரா?'

'பிரமாதம். ரப்பராவது பயன்படும். மனம் பயன்படாது!'

'ஐயையோ! இவ்வளவு பேசத் தெரிந்திருக்கிறதே உனக்கு.'

'பழக்கம்தான். அவளை நீங்கள் திரும்ப சந்திப்பதெப்போது என்று கேட்டீர்கள்! எப்பொழுது சந்திப்பதாக உத்தேசம்?'

'சந்திப்பதா? நான் அவளை சந்திக்கலாகாதென்று நீ தடுக்க வேண்டாமா?'

'எதற்காகத் தடுக்கவேணும்?'

அடபைத்தியமே? உன் கணவன் வேறு ஒருத்தியிடம் கவர்ச்சி கொள்வதைத் தடுக்க வேண்டாமா?'

'கவர்ச்சியைத் தடுப்பானேன்?'

'தவறு இல்லையா? கொண்டவள் நீ இருக்க அவளால் நான் கவர்ச்சிக்கப்படலாமா?

'என்னையா கேட்கிறீர்கள்? கவர்ச்சி உங்கள் கற்பனைக்கு மலர்ச்சி தரும். மனதுக்கு மகிழ்ச்சி தரும்; அவளை வைத்து ஒரு கற்பனைச் சித்திரம் சிருஷ்

டிக்க முயற்சிப்பீர்கள். இதில் தவறென்ன அபூர்வமான பொருளால் கவர்ச்சிக்கப் பட்டாலென்ன? இயற்கைதானே?

'அட பைத்தியக்காரி, நான் மனதை அவளிடம் ஈடுபடுத்துவது பெருந்தவறு இல்லையா?'

'காட்சி சாலைப் பொருளில் கவர்ச்சி கொள்வது தவறு என்று நான் சொல்லமுடியுமா?'

'அப்படியானல் என் மனம் கண்டபடி திரியலாமா?'

'திரியட்டுமே, அனுபவத்துக்கு அலைச்சல் அவசியமில்லையா?'

'இதென்ன விந்தைப் பேச்சு?'

'பின்னே என்ன? அவளை நீங்கள் திரும்ப சந்திக்கலாம். அல்லது கடிதம் எழுதலாம். உங்கள் மனம் அவளிடம் ஈடுபட்டு விட்டதாக எழுதலாம். அவள் மணமாகாதவளாயிருந்தால்?'

மணமாகாதவள் தான்

'அப்படியானல் அவள் மனதிலே யாராவது ஏற்கனவே வரிக்கப்பட்டிருக்கலாம். அவள் அதை மறைத்தாலும் மறைக்கலாம், அல்லது உங்களிடம்'

'அவள் மனதைக் கவர்ந்தவர் வேறு யாரும் இல்லாவிட்டால்...'

'நீங்கள், மணமானவர். உங்களைச் சகோதரனுக எண்ணி எழுதுகிறேன் என்று அவள் எழுதலாம்.' அல்லது—

'நான் அவளைச் சகோதரியாக நினைக்காமல் இருந்தால்,'

'நினைக்க விரும்பாமல் என்று சொல்லுங்கள்...'

'சரி அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!' எப்படி வைத்துக் கொண்டால் என்ன?

'அவளிடம் நீங்கள் மனக் கவர்ச்சி கொண்டதாகக் காட்டிக்கொண்டால், அவள் உபதேசிப்பாள்.'

'உபதேசிப்பாளா?'

'ஆமாம். பெண் பாவம் பொல்லாதது. உங்கள் மனைவிக்கு நீங்கள் துரோகம் செய்யக் கூடாது என்று உபதேசிப்பாள். நீங்கள் தவறு செய்து விட்டதாக எண்ணிப் பிழை திருத்தம் செய்ய முன்வருவாள்!'

'நியாயந்தானே?'

'எது நியாயம்? உங்களுக்கு உள்ள அறிவு போதாதென்று அவளிடம் உபதேசம் பெறுவதா?'

'அறிவுள்ளவன் இப்படி நடந்து கொள்ளுவானு என்று அவள் நினைக்கலாம்.'

'அவளுக்காக நான் இரங்குகிறேன்!'

'நீ இரங்குகிருயா? அட கடவுளே, உன் கணவனின் மனதைக் கவர்ந்த அவள்மீது க்ஷாத்திரங்கொள்ளாமல், இரங்குகிருயா?'

'அவள் 'மனதை' என்ன வேண்டுமானலும் செய்யட்டும்' என் கணவனை ஒன்றும் செய்ய முடியாது?'

'என்ன? மனம் இல்லாமல் மனிதன் ஏது? உயிர் இல்லாத உடல் மாதிரிதானே?

'இதுதான் தவறு, ஏற்கனவே உள்ளத்தையும் உடலையும் மனைவியிடம் பரிசம் போட்டுவிட்ட உங்களுக்குத்'தனிஉரிமை' ஏது?'

'அப்படியானல்—நான் ஸ்வாதீனம் அற்றவன?'

'நீங்கள் அல்ல. உங்கள் மனம், உங்களுடைய கதைக்கும், கற்பனைக்கும் கவர்ச்சி காட்டும் மனம் காரியத்துக்கு உதவாது.'

'காரியம் என்றால்?'

'வாழ்க்கை நடைமுறைக்கு!'

'அவளை என்னுடையவளாக எண்ணுகிறேன்.

'எண்ணுங்களேன். நாம் இருவரும் எண்ணலாமே,' 'நம்முடையவள் என்று எண்ணுவதிலும் எனக்கு ஆட்சேபனையில்லை.'

'அவளிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டேன்.'

'போனால் போகிறதே! பறி போனதைப் பற்றிக் கவலை என்ன?'

'கவலையா? அவளுக்காக ஏங்குகிறது என் மனம்!'

'ஏங்கட்டுமே! மனம்தானே. நீங்கள் இல்லையே!'

'இப்படி அவளிடம் தெரிவிக்க நினைத்துவிட்டேன்.'

'உங்கள் வாக்கு அவளுக்கு ஒரு கதை போல் இருக்கும். அதில் உள்ள வரிகள் அவளை சிரிக்கச் செய்யும். அழச் செய்யும். ஆச்சரியத்துக் குள்ளாக்கும். சுவையாக, கவர்ச்சியாகப் படிப்பாள். ஏனென்றால் இம்மாதிரி கடிதங்களை அவள் பார்த்திருக்கவே, முடியாது.'

'உண்மையும் தெரியும் அல்லவா?'

'அதுதான் தெரியாது. உங்கள் உள்ளத்தில் உள்ளதை அவலால் புரிந்துகொள்ள முடியாது.'

'ஏன் முடியாது?'

'அதென்னமோ? நீங்கள் உண்மையைத்தான் எழுதுவீர்கள். அவள் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், கொண்டவள் மனதைப் புண்ணாக்காதீர் என்று வரைவாள் உமக்கு.'

'உண்மைதானே?'

'பதில் உண்மைதான். ஆனால் உங்கள் மன நிலையைப் புரிந்து கொண்ட உண்மையல்ல.'

'அப்படியென்றால்—'

'உங்கள் மனதிலே மனைவி ஒருத்தியைத் தவிர வேறு யாருக்கும் இடம் இல்லை. அப்படித் தப்பித்தவறி வேறு ஒருத்தி இடம் பெற்றுவிட்டால்—என்று நீங்கள் சந்தேகிக்கும்போது எவள் இடம் பெற சந்தர்ப்பம் கிட்டுகிறதோ அவளை ஒதுக்கி விடப் பார்ப்பீர் என்பதை அவள் புரிந்து கொள்ள முடியாது.'

'பேஷ்! நல்ல கற்பனை! நீயே கதை கட்டி விடுவாய் போலிருக்கிறதே! அப்புறம்—'

'அவளை மனதிலிருந்து ஒதுக்கி விட அவளுடைய மனம் யாரிடம் ஈடுபட்டிருக்கிறதோ வென்று துருவி ஆராய்வீர்.'

'உன் ஆராய்ச்சியை விடவா?'

'ஆமாம். என் மனைவிக்கு இடங் கொடுத்த இதயத்தில் இன்னொருத்திக்கு இடந்தரலாகாது. ஆகவே உன் மன அபிலாஷையை நிறைவேற்றுவதில் நான் பங்கெடுத்துக் கொள்ளுகிறேன். என்று சொல்லுவீர்.'

'பேஷ், பேஷ்! பிரமாத கற்பனை!

'எதிர்பாராத அதிசயமாயிருக்கிறதே!'

'எதிர் பாராம லிருந்தால் தானே அதிசயப் பட முடியும்?'

'வாஸ்தவம், அப்புறம்!'

'அவள் சகோதரனிடம், உங்களிடம் தான்—தன் சுக துக்கங்களை விளக்குவாள். பரிகாரம் தேட இருதரப்பிலும் முயற்சி நடக்கும். பிறகு நீங்கள் என்னிடம் சொல்லுவீர்கள். நானும் உங்களுடன் சேர்ந்து கொள்வேன்!'

'எதற்கு நீயும்?

'உங்கள் தங்கைக்கு உதவி செய்ய—

வாய் மூடி மௌனியாகி உட்கார்ந்திருந்தேன். அவள்

வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். என்னைக் கண்ட மகிழ்ச்சி, என்னையே மடக்கிப் பேசி ஜயித்த மகிழ்ச்சி எல்லாமாகச் சேர்ந்து அவளுடைய அழகைப் பன்மடங்காகப் பெருக்கச் செய்தது! கர்வம் அவள் முகக்களையைப் பெருக்கிற்று......

'அவள்' எனக்குத் தங்கையாம்!......அவளுக்கு இவ்வளவு மகிழ்ச்சி இருக்க வேண்டியது அவசியம்தான். அடுத்த குழந்தைக்குத் தான் தாயாகப் போகிறோம் என்ற உணர்ச்சியே அவளுடைய உள்ளப் பூரிப்புக்குக் காரணம்.

என்னுடைய வாழ்விலே என் மனைவி வகிக்கும் பங்கு மகத்தானது. இருண்டு, துக்கமாயிருக்கும் என் வாழ்க்கைப் பாதையில் கொஞ்சங்கூட தயக்கமின்றி, கலக்கமின்றி, தைரியமாகத்தான் அவள் துணைவருகிறாள். வாழ்க்கைத் துணைநலம் கிடைத்த வகையில் நான் மிகவும் பெருமைப் படுவதற்கேற்றவளாயிருப்பவள். மறுநாள் ஊருக்குப் புறப்பட்டேன்.

'போய் வாருங்கள். உங்கள் மனம் எப்படி வேண்டுமானாலும் ஓடட்டும். உடம்பை ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்ளுங்கள். சுவற்றை வைத்துத் தானே சித்திரம் எழுதவேண்டும்' என்று உபதேசித்தாள் அவள்!

ஊர் வந்து சேர்ந்தேன்.

கடிதமும் தொடர்ந்து வந்தது. மனைவியிடமிருந்தல்ல. எதிர்பாராத வகையில் என் மனதைக் கவர்ந்தவளிட மிருந்து.

'அன்புள்ள சகோதரனே,' என்று அழைத்து விஷயம் ஆரம்பமாயிருந்தது. சுவாரஸ்யமற்று, திக்பிரமையுடன் படித்தேன். சிறு உதவி வேண்டி எழுதியிருந்த கடிதம். நான் எதிர்பார்த்த விவரம் அதில் இல்லை. ஆழ்ந்த யோசனையுடன் அதைப் பார்த்தபடி நெடுநேரம் போக்கினேன். பதில் எழுதினேன் சுவாரஸ்யமின்றி. அடுத்த கடிதம் அன்புள்ள 'சகோதரனுக்குத் தான்' வந்தது.

சரி. இனி மனதில் மறைத்துக் கலங்கக் கூடாதென்று எண்ணினேன். இருந்தாலும் அவளைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்ட பிறகுதானே ஒரு முடிவுக்கு வர முடியும்? எனவே சங்கேதரீதியிலேயே கடிதம் எழுதினேன். அவளுடைய கடிதம் எப்படிச் சபபென்றிருந்ததோ அதே மாதிரிதான் என் கடிதமும் இருந்தது. எனக்கு மட்டும அல்ல, அவளுக்கும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனல் நான் எதிர்பார்த்த முறையில் பதில் இல்லவேயில்லை. 'நீ எதிர்பார்க்கும் தோரணையில் இனி பதில் வரவும் வராது. வீணாக மனசைக்குழப்பிக்கொள்ளாதே' என்று மனச்சாட்சி எச்சரிக்கை செய்தது! (தொடரும்)

*

பொங்கலுக்குப் பின்

திருப்புகழ் மணி

தமிழ் உலகம் எங்கும் 'பொங்கலோ பொங்கல்' என்று மங்களம் பொங்கிவிட்டது. மனம் என்னும் சட்டியில் அன்பெனும் பால் நிறைத்து நெஞ்சு எனும் தானியத்தை உள்ளிட்டு பக்தி எனும் தீமேல் வைத்தார்கள். இந்தத் தீ, வாழும் தீயாயினும், சூட்டின ஆற்றல் மிகவும் அதிகம் கொண்டது. நெருப்பையும் எரிக்க வல்லது. நினைத்ததை அளிக்க வல்லது. நிறையப் புகழ் என்பார்கள் சித்தர்கள். அதைப் பாடப் பாட பால் கொதித்தது. நெஞ்சாய் நின்ற தானியம் நெகிழ்ந்து அமுதமாய் உருகலாச்சுது. கொதித்த பால் பொங்கலாயிற்று. பாலின் சேர்க்கையால் தானியமும் வெந்து பொங்கலாய்த் திருந்தியவாறு போல தமிழர் உள்ளம் கனிந்து, உருகிய நெஞ்சமாய் உலகுக்கெல்லாம் பொங்கிய தங்கள் இதய அன்பை வாரி வாரிக் கொடுக்கின்றார்கள்.

உலக வாசிகளே! நீங்களும் அவ்வாறே செய்மின்! கையில் பிடித்த கத்தியையும் மனதில் கொண்ட குரோதத்தையும் இந்நன்னாளில் நழுவ விடுவீர். மக்களை ராவணன்போல் அழுவைத்தது போதாதா? அழுகைக் குரல் கேட்டு ஆனந்திக்கும் கொடுமைக்கு இருப்பிடமாகவா இந்த உரிய மானிடப் பிறவி நமக்கு ஆண்டவன் ஈந்தது. சிரிப்பும், சங்கீதமும், நகையும், நாட்டியமும், புகழும், பூஜையுமாய் நாட்டை நிறைப்பதற்கல்லவோ நாதன் நமக்கு ஆற்றலைப் படைத்ததும். அமுதளிக்கும் பொங்கலை பொங்குங்கள். உளமும் பொங்க உலகெலாம் அன்பாய் பொங்க கலைகளும் கவிதையும் மாந்தர் அறிவில் பொங்க கூடுமே பாருளீர்! அங்கே பாருமே! ஆனந்தம் ஒன்றே! மானிடமும் ஒன்றே! தெய்வமும் ஒன்றே! மானிடமும் தெய்வமும் கூடிய இடமன்றோ பொங்கல் பொங்குமிடம். பொங்கலும் அதுவே யன்றோ. மங்காத பொங்கல் எவ்வளவோ கிடக்கின்றதே. தேவாரத் திருப்புகழ், பிரபந்த இசைப்பாக்கள், சித்தர்கள் ஆதி வாக்கியங்கள் எனக் கருதப்படும் பாத்திரங்களிலே கவனித்து நோக்குங்கள். மங்காத பால் சுவை. திகட்டாத சர்க்கரைப் பொங்கல். எவ்வளவு எடுத்து எடுத்து உண்டாலும் குறையாத அக்ஷய பாத்திரம். மானிடா! வருந்தாதே! அன்பளித்து சேவை செய்து உன் சுதந்திரத்தைக் கொண்டாடு. இன் சொல் தவறாது இன்னிசை விடாது தன் பெருமை யறியாத தாண்டவ மூர்த்திபோல் கொண்டாடு. உலகின் மேம்பாடு தமிழன் பண்பாடு என்று உணர். கதிர்காமச் செல்வனும் பழனியில் ஆண்டியும் நாம் கொண்ட பொக்கிஷம். குழந்தைகாள் சிரியுங்கள். பாலர்காள் ஆடுங்கள். மக்களே பாடுங்கள்! ஏன்? தமிழ் மறு மலர்ச்சி உலக மறு மலர்ச்சி. தேவ மறு மலர்ச்சி.

✲

சுந்தரிக்குப் பேச முடிந்தால் என்ன சொல்லும்? கன்றின் உடலில் வைக்கோலைத் திணித்து ஏமாற்றும் இடையர்கள் செய்யுங் கொடுமையைத் தாள முடியாது தவிக்கும் எத்தனையோ 'சுந்தரிகள்' இன்றும் நமக்கு உபகாரம் செய்யாமல் இல்லை!

சுந்தரியின் கதை

பெண்மணி

காலையிலிருந்து, ஓடி யுழன்ற கதிரவன்; மேற்குத் திசையில், மெல்லப் போய்க்கொண்டிருந்தான். மாலைப் பெண் மஞ்சள் பூசிக் குளித்து, மதியின் வரவை, எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். மல்லிகையும், முல்லையும், அவன் முகம் நோக்கி புன்னகை பூத்தன.

வெள்ளி மலை யுச்சி மஞ்சள் வெய்யிலினால் தங்கம் போல் ஒளி வீசியது. சுற்றிலுமுள்ள பசும் புற்றரையில், ஆனிரைகள் மேய்ந்துகொண்டிருந்தன. குன்றினடிவாரத்தில் நின்று, கோவிந்தன் குழலூதிக்கொண்டிருந்தான். அவ்விசையைக் கேட்ட ஆனிரைகள், அவனைச் சூழ்ந்து நின்றன.

குழலூதியபடியே முன் சென்றான் கோவிந்தன். அவனைத் தொடர்ந்து சென்றன பசுக்கள்.

இரண்டு மைல்கள் சென்றதும் சிறு கிராமமொன்று காணப்பட்டது. அங்கு, சுமார் ஐம்பது வீடுகளிருந்தன. கொட்டில்களில் கன்றுகள் கட்டப்பட்டிருந்தன. அவைகள் பசியுடனழைக்கும் குரல்கள் தாய்ப் பசுக்களின் செவிகளில் புகுந்தன. மடிகளில் பால் சுரந்தொழுக 'ஹம்மா' வென்றலறியபடியே, அப் பசுக்கள் கன்றுகளிடம், துள்ளி யோடின.

கன்றுகள் தாயைக் காணத் துடிப்பதுபோல், நாம், கடவுளைக் காணத் துடிக்க வேண்டும். அப்பொழுதுதான் கன்றின் குரலைக் கேட்டு, ஓடிவரும் பசுப் போல், அன்பன் குரலைக் கேட்டு வருவான் ஆண்டவன். இதை யுணர்த்தவே,

'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல வெனக்கென்றிரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே' என்றார் தாயுமானவர்.

நம்மிடம் விலங்குகள் கற்றுக் கொள்ளவேண்டிய குணங்கள் ஒன்றுமில்லை. விலங்குகளிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய குணங்கள்நிறையவிருக்கின்றன. நமக்கு உதவி செய்யவும், நீதி புகட்டவுமே, அவைகளைப் படைத்திருக்கிறார் ஆண்டவன். அத்தகைய உபகாரிகளுக்கு, நாமிழைக்கும் கொடுமைகள் அளவற்றவை.

பால் சுரந்தூட்டி நம்மை வாழ வைப்பவை, ஆவினங்கள் தாமென்பதை நாம் அடியோடு மறந்துவிட்டோம். தம் கன்றுக்கென, கடவுளால் அளிக்கப்பட்ட பாலையும், களவின்றி கொடுக்கும் பசுக்களுக்கு நாம் செய்வதென்ன? அவன் அன்புக் குறைவிடமான கன்றினுடலில் வைக்கோலைத் திணித்து ஏமாற்றும் இடையரைக் கண்டும், நாம் சும்மாவிருக்கலாமா? அவர்களிடம் பால் வாங்காமல் விடுவது தான், அதற்குச் செய்யும் பரி

காரம். பிழைக்க வழி யில்லையே, என்ற எண்ணத்தினலாவது, அவர்கள் கன்றுகளுக்குப் பால் விடலாம்.

அது மாத்திரமா? உழவுத் தொழிலிலும், நம்முடன் ஒத் துழைப்பன மாடுகள்தான். அந்தோ! அவைகள் நம்மிடம் படும் அடியும உதையும் கொஞ்சமா?

நம்முடலில் சக்தியற்றுலுட் கார்ந்து சாப்பிட வில்லையா? மாடுகள் சக்தியற்று விட்டால் மாத்திரம் அடிமாடாக வேண் டுமா? என்ன பணவாசை? அவைகளுக்குப் போடும் வைக் கோலினலா நம் ஆஸ்தியழிந்து விடும்? அனைத்துயிரையும் படைத்தவர் ஆண்டவனல் லவோ? அவா இக்கொடுமை களைப் பொறுப்பாரா? நான்கு மக்களுள், ஒரு மகன் துன்புறு வதை அன்னை சகிப்பாளா? அம்மாடுகளுக்கு வாயிருக்குமா கில், நம்மை யரக்கரென்றுதான் அழைக்கும். வாயில்லா விடினும் உணர்ச்சியுண்டு. உணர்ச்சியை வெளிப்படுத்தலின் மூலமாகவே, அவை யொன்றுக் கொன்று பேசிக்கொள்ளுகின்றன. இதை யறிவிப்பதுதான் இச்சிறுகதை.

மேற் கூறிய கோவிந்தன் தாண்டவக் கோனரின் ஒரே மகன். அவன் கள்ளங்கபட மற்ற தன்மை அக் கிராமவாசி களின் மனதைக் கவர்ந்தது. பதி னன்கு வயதுச் சிறுவனன அவன், அக்கிராமத்து மாடுகளை மேய்த்து வந்தான். அவன் தந்தையிடமும் ஏராளமான மாடுகளுண்டு,

மாடுகளே, அவனுக்கு மகிழ்ச்சி தரும் நண்பர்கள். அவைகளை மேய்ப்பதே இன்பந் தரும் விளையாட்டு. தினந்தோறும் புல் செழித்த இடங்களைத் தேடி அங்குதான் ஆனிரைகளை மேய விடுவான். ஆறுகளையறிந்து, நீரருந்துவிப்பான். அழுக்கில்லா மல், தேய்த்துக் குளிப்பாட்டு வான். மாடுகளும் அவனைக் கண்டால், எக்காளமிட்டுக் கொண்டு ஓடி வரும். ஆவினங் கள் குடிகள் போலும், அவன் அரசன் போலும் வாழ்ந்து வந்தான்.

தாண்டவக் கோனரிடம் இலட்சுமி, என்ற பசு வொன் றிருந்தது. அதன் இரண்டாவது, கன்று சுந்தரி. சுந்தரி பெயருக் கேற்ப அழகு வாய்ந்தது. அதற்கு நான்கு வயதாயிருக் கும் பொழுது, கோவிந்தனின் மாமன், சென்னையிலிருந்து வந் திருந்தான் அவனுக்குச் சுந்த ரியைத் தன்னுடன் அழைத்துப் போக வேண்டுமென்ற ஆசை. தந்தைக்கும் தனயனுக்கும், அனுப்ப விருப்பமில்லை. தாய் மனங் கோணும விருப்பதற்காக அனுப்பினர்கள்.

2

குப்பன் பட்டணத்தில், பால் விற்று ஜீவனம் செய்பவன். அவனிடம், நான்கு பசுக்களிருந் தன, அவைகளின் கன்றுகள், தாய்ப்பாலின் சுவையை யறிந்த தில்லை. பிறந்த ஒரு மாதம்தான் கன்றுகள் உயிருடனிருக்கும். பிறகு அவைகளின் வைக்கோ லடைத்த உடல்களைத்தான் காணலாம். இருக்கும் கன்று களும், நடக்கச் சக்தியற்று, எலும்பும் தோலுமாயிருக்கும். இக்கோலங்களைத் தாண்டவக் கோனர் பார்த்ததில்லை. இருந் தால், தன் அருமைச் சுந்தரியை அனுப்பியிருப்பாரா?

சுந்தரியும், மற்றமாடுகளுடன் கொட்டிலில் குடியிருந்தது.

இரண்டு நாட்கள் வரையில் அதற்கு இரையெடுக்கவும் பிடிக்கவில்லை. கண்ணீர் ஆறாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. அன்பென்பதை யறியாத முரட்டுக் குப்பனைக் காணும்பொழுதே, குலை நடுக்க மெடுத்தது. சுந்தரியின், குணத்தையும், அழகையும் பார்த்த மற்றப் பசுக்கள் அதனிடம் அன்பு கொண்டன. சுந்தரி கண்ணீர் பெருக்குவதைப் பார்த்து, அவைகளுக்குச் சகிக்கவில்லை.

கோமதி யென்னும் பசு, சுந்தரியை நோக்கி, "ஏனம்மா! இரை யெடுக்காமலழுது கொண்டிருக்கிறாய்?" என்றது. சுந்தரி அழுதுகொண்டே! "அந்தோ! அழகான கிராமத்தையும், அன்பான தலைவனையும் விட்டு இம்முரட்டு மனிதனிடம் அகப்பட்டுக் கொண்டேனே. அதை நினைக்கும்பொழுதே, எனக்கு அழுகை பொங்கி வருகிறதே."

கமலாவென்னும் மற்றொரு பசு "அதற்கென்ன செய்வதம்மா! நானும், அழகான கிராமத்தில்தான் பிறந்தேன். இப்பொழுது இந்த அரக்கனிடம், அகப்பட்டுக் கொண்டு படும்பாடு கொஞ்சமா? ஊம், பசும்புல்லைக் கண்ணால் கண்டு, எத்தனையோ நாட்களாயின."

"பச்சைப் பசேலென்ற புற்கள், தெளிந்த நீரோடைகள். எங்களிஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் திரியலாம். எல்லாவற்றையும் விட்டு, இங்கு சிறைச்சாலையைப் போன்ற இடத்திலன்றோ அடைந்திருக்க வேண்டியிருக்கிறது" என்றது சுந்தரி.

"போயும் போயும் இவனிடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே, அதைச் சொல்லு. பாலையும் கறந்து கொண்டு, படாதபாடு படுத்துகிறானே, நன்றி கெட்டவன்" என்றது கோமதி.

"நான் என்ன செய்வேன், நீங்கள் சொல்வதைக் கேட்கும் பொழுதே, குலை நடுங்குகிறதே. இன்னும் என்னென்ன துன்பத்திற்காளாக வேண்டுமோ தெரியவில்லையே" என்று தேம்பியது சுந்தரி.

"என்னடி! உங்களுக்குக் கொஞ்சமும் புத்தியில்லையா? அவள் இப்பொழுதுதான் வந்திருக்கிறாள். சின்னவளாயுமிருக்கிறாள். இல்லாததை யெல்லாம் சொல்லி ஏனவளை அச்சுறுத்துகிறீர்கள்?" என்றது மூன்றாவது பசுவாகிய சீதா.

"இல்லாததை யொன்றும் சொல்லவில்லை. நடப்பதைத் தானே சொன்னேன்" என்றது கோமதி.

"இப்பொழுது அவளுக்கொன்றும், அதிகக் கஷ்டமில்லை. தலைச்சன் கன்று போடும்வரையில், அருமையாய்த்தான் இருப்பாள். கன்று போட்டால்தான் கஷ்டம்"

"கன்று போடாமலேயே இருக்கப் போகிறாளா? இன்னும் சில நாட்கள் வரையிலாவது கவலை யில்லாமலிருக்கட்டுமே, நீ ஏன், இப்பொழுதே, அவளைக் கலக்குகிறீர்கள் என்றுதான் சொன்னேன்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். எனக்கு, ஒன்றுமே புரியவில்லை. இப்பொழுதில்லாத துன்பம் கன்று போட்டாலுண்டாவானேன். இப்பொழுதாவது, என்னால், இடையனுக்குப் பயனில்லை. கன்று போட்ட பிறகு, இலாபந்தானே? என்றது சுந்தரி.

"அப்படி யில்லையம்மா; நம் தீனிகளைக் கொஞ்சமும் குறைக்க மாட்டான். ஏனெனில் பால் குறைந்து விடுமோவென்று பயம். ஆனால், கன்றுகளைத்தான், பால் விடாமல் கொன்று விடுவான். இறந்த கன்றினுடலில், வைக்கோலைத் திணித்து நமக்குக் காட்டி, பாலுடன் இரத்தத்தையும் சேர்த்துக் கறப்பான். கன்று, இறந்த துக்கத்தினால், பால் கொடுக்க மறுத்தாலோ, அடியும் குத்தும்தான் கூலி. நாங்கள் ஒவ்வொருவரும், பல கன்றுகளை ஈன்றவர்தான். ஒன்றாவது உயிருடனிருக்கிறதா பார்," என்றது கோமதி.

இச்சமயம், பால்காரக் குப்பன் பால் கறக்க வந்தான்.

3

மெல்ல, மெல்ல ஒருமாதமாயிற்று. சுந்தரிக்கும் அந்த விடம், பழகிவிட்டது. மற்ற பசுக்களின் அன்பு, அதன் துன்பத்தை மறக்கச்செய்தது. புது மாட்டுப் பெண்ணும், புதுமாடும், சில நாட்கள் வரையில் மரியாதையாய், நடத்தப் படுவார்களல்லவா?

ஒருநாள் மாடுகளுக்குத் தீனி போடுவதற்காக, குப்பன் வந்த பொழுது, அவன் தம்பி முத்தய்யனும் கூடவந்தான். குப்பன், அவனைப்பார்த்து, "முத்தய்யா! இந்த வெள்ளை மாடு புதிசு, அக்கா வூட்லேந்து, ஒரு மாசத்துக்கு முந்திதான், ஓட்டியாந்தேன். அங்கே மானுவரியா, பச்செபுல்லே, மேஞ்சுட்டு நன்னு கொழு கொழுன்னு இருந்துச்சு. இங்கே வந்தப்புறம், நாளுக்கு நாள் எளச்சிண்டு வரது. பச்செபுல்லெ பாக்காத எக்கமா இருந்தாலும் இருக்கும்னு நெனக்கறேன். என்னமோ மொதல் கன்னு போடறவரைக்கும், நன்னு பாத்துக்கினு அப்பொறம், இருக்கவே, இருக்குது. நாளேலேருந்து, வெளெயாட்டு மைதானத்துக்கு, காலார கொஞ்சம், ஓட்டிண்டு போயிட்டுவா" என்றான்.

மறுநாட்காலை. மாட்டுத் தொழுவத்திற்கு, முத்தையா வந்தான். சுந்தரியை, அவிழ்த்து விட்டான். சிறையிலிருந்தது போல் கட்டுப்பட்டிருந்த சுந்தரி, அவிழ்த்து விட்டவுடன், இளங்கன்று பயமறியாது என்பது போல் ஒரே தாவாய்த் துள்ளிக் கொண்டு ஓடியது. முத்தய்யனுக்கு அதைப் பிடிப்பதற்குள் போது மென்றாய் விட்டது.

சுமார் ஒரு மைல் தூரம் நடந்ததும் விளையாட்டு மைதானம் காணப்பட்டது. ஓரங்களில் அங்குமிங்குமாகப் புற்கள் முளைத்திருந்தன. அவ்விடத்தில் சுந்தரியை மேயவிட்டு, அங்கு மாணவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றான் முத்தய்யன்.

சற்று தூரத்தில் காளைமாடொன்று மேய்ந்து கொண்டிருந்தது. பச்சைப் புல்லும், உலாவ வசதியும் கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சி யடைந்திருந்த சுந்தரிக்கு, பேசுவதற்கு நண்பனும் கிடைத்தால் கேட்க வேண்டுமா? அளவற்ற ஆனந்தத்துடன், ஹூம்மாவென்றது.

இவ்வொலியைக் கேட்ட காளை மாடு திரும்பிப் பார்த்தது. சுந்தரியைக் கண்டது. வெகு நாட்களாய்த் துணையின்றி தனியாய் மேய்ந்து கொண்டிருந்த காளை மாடு, சுந்தரியைக் கண்டதும் களிப்படைந்தது. மெல்ல

மெல்ல சுந்தரியருகில் வந்தது. 'யாரம்மா நீ, புதிதாயிருக்கிறயே? என்று கேட்டது.

'ஆமாம், இந்த ஊருக்குப் புதிதுதான். குப்பன் என்னும் பால்காரன் வீட்டுக்கு வந்திருக்கிறேன் என்றது சுந்தரி. 'யாரு, குப்பனு? எங்க ஓட்டலுக்குக் கூட அவன்தான் பால் வார்க்கிறன்'

'ஓட்டலா! அப்படியென்றல் என்ன?

'இது தெரியாதா? உணவுப் பொருள்களை விலைக்கு விற்குமிடம்.

'அப்படியா? எனக்குத் தெரியாது. நான் இருந்தது கிராமம். அங்கு நீ சொல்லிய ஓட்டலென்பதே கிடையாது. உனக்கு அங்கு என்ன வேலே?

'ஓட்டலுக்கு சாமான்கள் ஏற்றும் வண்டியை இழுக்கிறேன்.

'ஐயோ! பாவம்! எலும்புந் தோலுமா யிளைத்திருக்கிறயே; எப்படித்தான் வண்டி யிழுக்கிறயோ!

'என்ன செய்வது? நீங்கள் சாப்பிட்டுவிட்டுச் சும்மாயிருப்பது போல் நாங்களிருக்க முடியுமா? ஒரு நாள் வேலே செய்யாவிட்டாலும், உதைதான் கிடைக்கும்.

'நீ சொல்வது போல் நாங்கள் சுகப்படுவதெல்லாம் கிராமத்தில் தான். இந்தப் பட்டணத்தில், அதுவும் பால்காரர்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டால், எங்கள்பாடும் திண்டாட்டம் தான். என்னவிருந்தாலும் இருந்த விடத்திலுணவு, எங்களைப்போல் வேலேயும் அடியுமில்லே."

இதற்குள் அங்குள்ள மாதா கோவிலில் மணி ஆறு அடிக்கவே, முத்தய்யன் வந்து சுந்தரியை ஓட்டிக் கொண்டு போனன்.

4

அன்று முதல் சுந்தரியும், காளைமாடும் உற்ற நண்பராய் விட்டனர். வழக்கம் போல் புற்களை மேய்வதும், இடையிடையில் பேசுவதுமாக அவ்விரண்டும் காலம் கழித்தன. மாதங்கள் ஆறுயின. சுந்தரியின் வயிறு நாளுக்கு நாள் பருத்துக் கொண்டே வந்தது. சில மாதங்கள் கடந்ததும், சுந்தரி ஒரு அழகிய கன்றை யீன்றது.

பத்து நாட்களாயின. பால் கறப்பதற்காகப் பல வீடுகளுக்கு சுந்தரி ஓட்டிச் செல்லப்பட்டது. கன்று சிறிதாகையால், அதைக் கையால் தூக்கிச் சென்றன் குப்பன். கொஞ்ச நாட்கள் வரையில் கன்றுக்கு வாய்ப் பாலாவது கிடைத்து வந்தது. பிறகு கன்றை மடியினருகில் கொண்டு வருவதுகூட நின்று விட்டது. பசுவின் முன்னங்கால்களில் கட்டிப் பால் கறந்து வந்தான் குப்பன். அச்சமயம், பாலைக் குடிப்பதற்காக அக்கன்று படும்பாடு பார்க்கப் பரிதாபமாயிருக்கும். நாளுக்கு நாள் கன்றின் உடல் இளைத்து வந்தது. சுந்தரியின் வயிறெரிந்தது. வழியில்லாமல் பால் கொடுத்து வந்தது.

ஒரு நாள் சுந்தரியின் சினம் அளவிற்கு மிஞ்சியது. இன்று குப்பனுக்குச் சொட்டுப் பால் கூட கொடுக்கக்கூடாது. அவன் கறக்க வந்தால், அடக்கி வைத்துக் கொண்டு, அப்பால் சென்ற பிறகு கன்றுக்குக்

197647

கொடுக்கவேண்டும். என்று நினைத்தது. அப்படியே செய்தது. அன்று குப்பனிடம் பட்ட அடிக்குக் கணக்கேயில்லை.

"திருட்டு மாடு. பாலெ, மடியிலெ அடக்கி வச்சிக்கினு, கறக்க மாட்டேங்குது. நல்லா ஓட்டப்போடணும் என்று நினைத்து" தீனி போடாமல் சென்றுவிட்டான். தினம் கன்றைக் கொட்டிலில் கட்டுபவன், அன்று பால் கறக்கவில்லை யென்ற கோபத்தினால் கன்றை சுந்தரியின் கண்ணில் கூட காண்பிக்கவில்லை. என்ன செய்வது? வாய் திறந்து சொல்ல வழியுண்டா? கண்ணீர் பெருக்கிக்கொண்டே நின்றது. மறு நாள் வைக்கோல் திணித்த உடல் சுந்தரியிடம் கொண்டு வரப்பட்டது. அருமைச் சேயின் நிலைமையைக் கண்ட தாயின் வயிறு பற்றி யெரிந்தது. குப்பனைக் கொம்பினால் குத்தி யெறிந்து விடலாமா என்று ஆத்திரம் பொங்கியது. அவன் அருகில் வந்ததும், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, கொம்பினால் முட்டிக் கீழே தள்ளியது.

5

சுந்தரியைப் பிரிந்த கோவிந்தன் அடைந்த துன்பத்திற்களவே யில்லை.

'அம்மா! நம்ம சுந்தரி எவ்வளவு அளவான பசு. அதெ மாமனோடெ கூட்டி யனுப்பிச் சுட்டெயே. பட்டணத்துப் பால் காரங்கள்ளாம் பசுவே சரியா பாத்துக்க மாட்டாங்களாமே. நம்ம சுந்தரி என்ன கஷ்டப் படரதோ பாவம்' என்றான்.

'அட, கருமிப் பயலே, எண்ணத்தெப் பாரு. ஒத்தருக்கு ஒண்ணு கொடுக்க மனசு வரதில்லே, அப்பனுக்கும் புள்ளெக்கும். நாளைக்கு மாமன் பொண்ணே கட்டிக்கப் போறியே. பட்டணத்துலே வளர்ந்த பொண்ணு நாட்டுப் புறத்திலே வந்தா கஷ்டப்படும்னு அவுங்கோ அனுப்பா காட்டி என்ன சேவெ? என்று சீறினள்.

என்னசெய்வான்கோவிந்தன்? சுந்தரியை எப்பொழுது காண்போம், என்ற ஏக்கமே பெரிதாய் விட்டது. நாட்கள் பல சென்றன.

கோவிந்தன் ஒரு நாள் மாடுகளை ஓட்டிக்கொண்டு மலைச்சாரலுக்குச் சென்றான். அவனுடன் அடுத்த வீட்டுப் பொன்னனும் சென்றிருந்தான். பச்சைப் பசேலென்று வளர்ந்திருந்த புற்களைக் கண்டவுடன் மாடுகள் துள்ளியோடி மேய ஆரம்பித்தன. கோவிந்தனுக்கு ஒன்றிலும் மனம் செல்லவில்லை. சுந்தரியை என்று காண்போமோ வென்ற ஏக்கமே பெரிதா யிருந்தது. எங்காவது சற்று தூரம் சென்றிருந்தால் மனம் சற்று சாந்தியடையுமோ வென்று நினைத்தான்.

"பொன்னு! மாடுங்களே பாத்துக்கோ. மனசு ஒண்ணும் சரியாயில்லை. நான் பக்கத்து வேலங்காடு வரெக்கும் போயிட்டு வரென்.

'ஆத்தா, அப்பனுக்கு ஒரே புள்ளே. கண்ணுலே வச்சி எமெலெ காப்பாத்தராங்கோ, ஒனக்கென்னடா கவலை வந்துடிச்சு?

'என்னமோப்பா, எனக்கு மாடுங்கோன்னு உசிருதான். அதுங்களுக்கு கஷ்டம்னு என் மனசுலெ பொறுக்க முடியாத வேதனை பண்றது.

'இப்போ என்ன வந்துடிச்சு மாடுங்களுக்கு ?

'சுந்தரீன்னு, ஒரு வெள்ளைப் பசு இருந்திச் சோல்லியோ; அதே மாமனோடெ அனுப்பிச் சுட்டாங்க. அந்த அய்யா பால் வித்து பொளைக்கிறவங்க. பட்டணத்து பால்காரருங்கள்ளாம் கன்னுக்குப் பால் வுடமாட்டாங்களாம. செத்துப்போன கன்னு ஓடம்புலெ வெக்கோலை அடெச்சுப் பசுவுக்குக் காட்டிப் பால் கறப்பாங்களாம். அதே நெனைக்க என் சுந்தரி எப்படி யிருக்கு தோன்னு கவலையா யிருக்குது.

'போடா போ! புது மனுசண்டா நீ! மாட்டெ நெனைச்சுக்கிட்டு மாஞ்சி போருனும். சிரிக்கப் போராங்க ஆராவது !

'யார் வேணா சிரிக்கட்டும். எங்கெயானு போய்க் கொஞ்ச நேரம் இருந்தாத்தான் என் மனசு நிம்மதியாகும். நான் போயிட்டு வரேன்.

'பொழுது சாயரத்துக்குள்ளே வந்திடுவெ யோல்லியோ ?

'அது வரெக்கும் என்ன பண்ணப் போரேன். இதோ ஒரு மணி நேரத்திலே வந்துவிட மாட்டேன்!

6

சுந்தரிக்கோ, தன் கன்றைக் கொன்ற குப்பனைப் பார்க்கும் போது வயிறெரிந்தது. கோவிந்தனை நினைக்கும்போது கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. குப்பனும் சுந்தரியின் பாலைக் கறக்க, எவ்வளவோ தந்திரம் செய்து பார்த்தான். சுந்தரியோ, அருகில் ஆள் வரும்பொழுது கட்டிலடங்காமல், துள்ளிக் குதிக்கும். ஒருநாள் வேறொரு பால்காரன், தான் அடக்குவதாகச் சொல்லி வந்தான். அவனை உதைத்துக் காயப்படுத்தியது. குப்பனுக்கு வந்த கோபத்திற்கு அளவே யில்லை. அடித்துப் பழி தீர்த்துக்கொள்ள நினைத்தான். ஆனால் அது நெருங்கவிட்டால் தானே. சுந்தரிக்கோ எப்படியாவது அந்த இடத்தை விட்டு ஓடிப் போய்விட வேண்டுமென்று தோன்றியது. அதற்காகத் தன்னால் ஆன தந்திரமெல்லாம் செய்து பார்த்தது.

குப்பனுக்கு வந்த கோபத்தில் சுந்தரியைச் சரியாகக் கட்டாமல் விட்டுவிட்டான். இதுதான் சமயமென்று அவிழ்த்துக் கொண்டு ஓடியது சுந்தரி. ஒரு மைல் தூரம் வரையில், விடாமல் ஓடி, ஒருமைதானத்தில் களைத்துப் படுத்துக்கொண்டது. பொழுது விடிந்ததும் எழுந்து, கால்கள் ஓய்வடையும் வரையில் நடந்து சென்றது. புல்கண்டவிடத்தில் மேய்வதும், நீர்கண்டவிடத்தில் குடிப்பதும், நிழல் கண்டவிடத்தில் படுப்பதுமாகத் தன்போக்கில் சென்றுகொண்டிருந்தது.

பொன்னனிடம் விடைபெற்றுச்சென்ற கோவிந்தன், தன் மனம்போனபடி சென்றான். பகல் முழுதும் நடந்தான். பசியோ காதடைத்தது. கண்ணிருண்டது. நீர்வேட்கையினால் நாவறண்டது. கண்ணுக்கெட்டியதூரம் வரையில் தண்ணீர் காணப்படவில்லை. மாலைச் சூரியன் மலைவாயில் விழுந்தான். கோவிந்தன் கால் தள்ளாடவே, இனி ஓடியும் நடக்கமுடியாதென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். களைப்பினால் மயங்கிக் கீழே படுத்தான். மறுநாள் பொழுதுவிடிந்தது. கதிரவன், தன் கிரணங்களாகிய கைகளினால் கோவிந்தனைத் தட்டியெழுப்

பினான். அவனோ தன்உணர்ச்சி யற்ற நிலையிலிருந்தான்.

காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்த சுந்தரி, கோவிந்தன் படுத்திருந்த மரத்திற்கருகில் புல் மேய்ந்துக்கொண்டிருந்தது. தற்செயலாய் கோவிந்தனைக் காண நேர்ந்ததும், மகிழ்ச்சியுடன் துள்ளிவந்து, அவனைத் தன் நாக்கால் நக்கியது. அவனோ கண்ணையும் திறக்கவில்லை. சற்றுத் திறந்திருந்த அவன் வாயில் அன்பினால் சுரந்த பாலைப் பெருக்கியது அமுதம்போன்ற பால் துளிகள் உலர்ந்திருந்த கோவிந்தனது தொண்டையை நனைத்தன. கோவிந்தன் மெல்லக் கண்ணைத் திறந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். கண்முன் நிற்கும் சுந்தரியைக் கண்டான். கவலை நீங்கியவனாய், அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டான். தன் வீட்டிற்குச் சென்று தந்தைக்கு சுந்தரியைக் காண்பிக்க வேண்டுமென்று தோன்றியது கோவிந்தனுக்கு. தன்னைக் காணாமல் பெற்றோர் கவலையுறுவார்களே என்ற எண்ணம் இப்பொழுதுதான் தோன்றியது. சுந்தரியையும் ஓட்டிக்கொண்டு தன் வீட்டிற்கு விரைந்து சென்றான்.

வழக்கம்போல் மாலையில் மகன் வராததைக்கண்ட கோவிந்தன் தாய், பொன்னனைக் காரணம் கேட்டாள்.

'அரைமணியிலெ திரும்பி வந்துட்ரேன்னு அடுத்த காட்டுக்குப் போனான். இன்னேரம் வரெக்கும் பாத்தேன். ஒரு வேளை அப்படியே வீட்டுக்கு வந்துட்டானுக்குமென்னு நெனச்சுண்டு வந்துட்டேன் என்றான்.'

அருமை மகனைக் காட்டில் துஷ்ட விலங்குகள் தின்றுவிட்டனவோ? பாம்பு கடித்ததோவென்று பயந்தழுது கொண்டிருந்தாள் தாய்.

'அம்மா! சுந்தரியைப் பாத்தியா? கூட்டியாந்துட்டேன்' என்ற குரலைக்கேட்டுத் திரும்பினாள். 'என் கண்ணே! உயிருடன் வந்துவிட்டாயா? என்று மகனைக் கட்டிக் கொண்டாள் தாய்.

திருமணத்தின் கருத்து

திருமணத்தினால் ஏற்படுகிற பிணைப்பு உற்ற நண்பர்கள் என்ற முறையிலும், சம அந்தஸ்து உடையவர்கள் என்ற முறையிலும் ஆகும். கணவன் எஜமானனால் மனைவி எஜமானியாகிறாள். எண்ணம், செயல், சொல் ஆகிய அனைத்திலுமே உங்களிடையே பரிபூரண ஒற்றுமை நிலவட்டும். ஈருயிரும் ஒருயிராக விளங்கட்டும்.

—' காந்தியடிகள் '

குறவஞ்சி

வித்துவான் ஏ. கே. பாலாம்பிகை

[குறிப்பு: எக்குடிப் பிறப்பினும், யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருக வென்றழைத்தது நந்தமிழ்நாடு. குலத்தையும், பணத்தையும் பாராமல் கற்றோரையே விரும்பி யாதரித்தனர் அரசர்கள். பணத்தையும், கல்வியையும் பிணைக்காத காலம். ஆதலால், இழிகுலத்தாராகக் கருதப்படும் குறவர், வள்ளுவர் முதலியோரும் கல்வியை விரும்பிக்கற்று, சிறந்த புலமை பெற்றனர். எழுதப் படிக்கத் தெரியாவிடினும், பேச்சே சிறந்த பண்புபெற்று கவிமயமா யிருக்கும், ஆண்களேயன்றி அக்குலப் பெண்களின் பாக்களும் சங்க நூல்களில் இடம்பெற்றிருக்கின்றன. அவரவர் தந்தொழிலைச் செய்து கொண்டு அத்தொழிலையே புலமையால் சிறப்பித்தனர். குறத்தி யொருவள் குறிசொல்வதாக அமைந்துள்ளதே குறவஞ்சி யென்னும் நூல். இதில் அவள் புலமையை அறியலாம்.]

குற்றால மலைக்கருகிலோர் பெருங்காடு. வானளாவிய மரங்கள் வெய்யோன் கிரணங்களை நுழைய விடாமல் பச்சைப் பந்தல் போட்டிருந்தன. அருவியினொலியும், காட்டாறுகளின் சலசல வென்றோசையும் கலந்தொலித்துக்கொண் டிருந்தன. காட்டுமலர்களின் நறுமணம் காலைக் காற்றுடன் கலந்தடித்துக் கொண்டிருந்தது. குரங்குகள் குட்டிகளை வயிற்றிலிறுக்கிக் கொண்டு கிளைக்குக்கிளை தாவிக் கொண்டிருந்தன.

அக்காட்டினிடையில் வளைந்த பாதை யொன்று சென்றது. அவ்வழியாக நடுத்தர வயதுடைய மாதொருவள் சென்று கொண்டிருந்தாள். இடுப்பில் கூடை, கையிலொரு சிறுகோல் வலதுபுறமாக அள்ளிச்சொருகிய கூந்தல், நெற்றியை மறைக்கும் வட்டக் குங்குமம், கலகல வென்றொலிக்கும் கருவளைகள், பாசி மணியும், குன்றிமணியும் கலந்த மாலை, இவைகளுடன் தோன்றிய இவளைக்கண்டோர், குறி சொல்லும் குறத்தியென சொல்லாமலேயே யறிந்து கொண்டனர். அடிக்கடி கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டும், ஏதோ முணமுணத்துக் கொண்டிருந்தாள். இச்சமயம், தோளிலுறங்கிக் கொண்டிருந்த ஒருவயதுக் குழந்தை யொன்று விழித்துக்கொண்டு கீழே யிறங்க வேண்டுமென்று தொந்திரவு செய்தது.

'அட, இருடா, பாவிமகனே, அந்த மொரட்டு அப்பனுக்குப் பொறந்த புள்ளெ நீ எப்படி இருப்பே, சும்மா இருக்க மாட்டே? என்று தன் கைப்பிரம்பாலோங்கினள். குழந்தை பயந்து ஓவெனக் கதறவாரம்பித்தது.

பின்னால் வந்துகொண்டிருந்த கிழவியொருவள் இதைப் பார்த்து.

'அடி சண்டாளி, ஒங்கோ வத்லதெ, இந்தப் பச்செக்குழந்தெ மேலேதானு காட்டனும்! இந்தாடா கண்ணெ! என்று தன் கையிலிருந்த அப்ப மொன்றை எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு குழந்தை அழுகை ஓய்ந்தது.

குறத்தி திரும்பிப் பார்த்து, ஆ! ஆயா நீயா? யாரோன்னு பயந்துட்டேன். காலங் காத்தாலெ எங்கே கிளம்பிட்டே?

'அதையேங் கேக்கரே, நேத்தி எம்மவனுக்கும் எனக்கும் பெரிய பெரிய சண்டை. நேத்தி வந்த சிறுக்கி என்ன மதிக்க மாட்டேன்னு, அந்த வூட்டுலெ எப்படி இறக்கிறது சொல்லு. கடவுள் கொடுத்த கையும், காலும் உறுதியாயிருக்கச்சே, ஏன் கஷ்டப்படனும். ஏதோ கையிலிருந்ததைப் போட்டு சாமான் வாங்கி பத்து அப்பஞ் சுட்டு எடுத்துகிட்டேன். இதெப் பக்கத்தூருலெ கொண்டுவித்தா என் வயிறு பொளெக்காதா என்ன?

'ஆமாம், ஆயா! ஒத்தரு கையையே எதிர்பாத்திண்டிருந்தா மதிப்பு கொறவுதான். நம்மகையை வுழச்சி சாப்பிடணும், யாராயிருந்தாலும், சும்மா சோறு போடமாட்டாங்க.

'ஒனக்கென்னம்மா மவராசி, சின்னஞ்சிறு பெண், ராசாவாட்டமா புருசன், என்னெ சொல்லு!

'ஐயோ! எங்கொறயே கேட்டா கல்லுகூட அழுமே. எல்லாத்தையும் மூடிமூடி வெச்சிகிட்டு இருந்தா பாக்கறவங்களுக்கு ஒண்ணூந்தெரியலெ. இந்த அயகான புருசனெகட்டிக்கிண்டு பத்து வருசமாச்சு. ஒரு மூக்குத் திருகாணிக்கூட வழியில்லெ. எங்கம்மா வூட்டுலே போட்ட நகையெல்லாம வித்துத் துண்ணுபிடுச்சு. ஒரு வேலையுஞ் செய்யறதில்லெ. சும்மா குந்திக்கிணு, வம்பளக்கறது மில்லாமே, என்னெ வாயில் வந்தபடி திட்டறது. 'எத்தனை நாள்தான் பொறுப்பது? போடா! போ, கடவுள் புண்ணியத்துலெ எங்குறி இருக்கு, அதெக்கொண்டு எங்கொழந்தையும் நானும் பொளச்சிக்கிறேண்ணு வந்துட்டேன்.

'இந்த ஆண்களெல்லாம் இப்படித்தான். தங்களென்னமோ பெரிசா நெனச்சிண்டு நம்மெ அதிகாரம்பண்றது. இதோ நான் போறவழி வந்துடுத்து, போயிட்டுவரேன். கெட்டிக்காரத்தனமா பொளச்சிக்கோ' என்று சொல்லிப் போய்விட்டாள்.

* * *

குறத்தி சுமார் அரைமைல் தூரம் நடந்து சென்றாள். அங்கு அழகிய கிராமமொன்று காணப்பட்டது. "குறி சொல்றதம்மே" குறி சொல்றது' என்று கூவிக் கொண்டே ஒருவீதி வழியாகச் சென்றாள். இவன் குரலைக் கேட்ட பெண்கள் பலர்வந்து சூழ்ந்து கொண்டனர். குறி கேட்டுத் தம்மாலியன்ற பரிசுகளைக் கொடுத்துச் சென்றனர்.

அவ்வீதியின் கோடியிலிருந்த ஒரு பெரியமாடி வீட்டின் வாயிலில் சில பெண்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிலொருவள் மற்றொருவளைப் பார்த்து, 'அடி! வசந்தவல்லி,

இதோ குறத்திவரா பாரு குறி கேக்கலாம் வரெயா? என்றாள்.

வசந்தவல்லி துள்ளியெழுந்து 'குறத்தியா கூப்பிடடீ கூப்பிடடீ' என்றாள். இதற்குள் குறத்தியும் அருகில்வர அவளை அனைவரும் சூழ்ந்து கொண்டனர்.

'வசந்தவல்லி அவளை நோக்கி ஏண்டி குறத்தீ, உனக்குக் குறி சொல்லத் தெரியுமாடீ? என்றாள்.

'ஏதோ சாமி புண்ணியத்துலெ சுமாரா சொல்லுவேன்.

'அடீ! நீ எந்த ஊர்; எங்கிருந்து வருகிறாய்?

'அதோ, தெரியுது பார் குத்தாலமலே, அங்கே தான் எங்க வூடு இருக்குது'

'ஓஹோ! நீ, குற்றாலக் குறத்தியா? இயற்கை யன்னை தாண்டவமாடுகிறாள். எவ்வளவு அழகான இடம்; கொடுத்து வைத்தவள்டீ நீ. நீங்கள் அழகாகப் பாடுவீர்களே. உங்கள் மலையைப் பற்றிப் பாடு கேட்கலாம்.

'ஏதோ தெரிஞ்சமட்டில் பாடுகிறேனம்மணி, பிழை யிருந்தாலும் பொறுத்துக்கணும்.

1. தேனருவித் திரை யெழும்பி
   வானின் வழி யொழுகும்
   செங்கதிரோன் பரிக்காலுந்
   தேர்க்காலும் வழுகும்
2. கூனலிளம்பிறை முடித்த
   வேணி யலங்காரர்
   குற்றாலத் திரிகூட மலை
   யெங்கள் மலையே!
3. வயிரமுடன் மாணிக்கம்
   விளையு மலையம்மே
   வானிரவி முழைகடோறு
   நுழையு மலை யம்மே
4. செல்லினங்கள் முழவு கொட்ட
   மயிலினங்க ளாடும்
   திரிகூட மலை யெங்கள்
   செல்வ மலை யம்மே!

பாட்டை நிறுத்தி வணங்குகிறாள்

'அடீ! பாட்டு வெகு அழகாக இருக்கிறது, உன் குரலில்தான் என்ன இனிமை. சரி போதும். எனக்குக் குறி சொல் பார்ப்போம்'

'அம்மா! குறி சொல்றதுன்னா, சும்மா சொல்லிட முடியுமா? அதுக்கு வேண்டிய தெல்லாம் செய்ய வேண்டாமா?

'என்ன செய்ய வேண்டும், சொல் அப்படியே, செய்கிறேன்.

'கிழக்குத் திசையில் சாணத்தால் மெழுகிக் கோலம் போடணும். அதன் நடுவில் மணையொன்றுபோட்டு மஞ்செபுள்ளையாரு புடிச்சி வைக்கணும் தேங்காய், வெத்திலெ பாக்கு, கொஞ்சம் அறுகம் புல்லு சாம்பிராணி, கற்பூரம் இதெல்லாம் கொண்டு வைக்கணும, ஒரு படி நிறைய அரிசி வேண்டும்'

வசந்த வல்லியும், அவள் தோழிகளும் குறத்தி சொல்லிய படியே, அனைத்தையும் கொண்டு வைத்தனர்.

குறத்தி பிள்ளையாரைப் பூஜித்துத் தன் குல தெய்வத்தைத் துதித்தாள். பிறகு அரிசியைக் கீழே கொட்டி வட்டமாகப் பரப்பி, அதில் குறுக்கும், நெடுக்குமாகச் சில கோடுகளைப் போட்டாள். பிறகு தன் சிறு கோலைக் கையிலெடுத்துக் கொண்டு, அதற்கு சாம்பிராணி கற்பூரம் முதலியவற்றைக் காட்டினாள். வசந்த வல்லியை நோக்கி 'அம்மே, உன் கையைக் காட்டு பார்க்கலாம்' என்றாள்.

வசந்த வல்லி கையைக் காட்ட தோழிகளனைவரும், சுற்றி யுட்கார்ந்தனர். குறத்தி தன் சிறு கோலால், கைக் கோடுகளைச் சுட்டி 'அம்மே கேளு' என்று இசையுடன் பாட வாரம்பித்தாள்.

அம்மா நீ மகராசி' பாண்டிய மகாராசா
உன் கையைப் புடிக்கப்போறாரு
மாளும நிலத்திலறம்
வளர்க்குமுந்தன் கையே
பல்லக்கி லேறிவரும்
பாண்டிய மகாராஜன்
பாதுகாக்கப் பிடிக்குமுந்தன்
பாக்கியக் கை யம்மே

வசந்த வல்லி நாணமுடன் கையை யிழுத்துக்கொண்டு, 'போடி குறத்தி, உன்னை இதெல்லாமா நான் கேட்டேன். எனக்குக் குறி பார்த்தது போதும், நீ எழுந்து போ.'

'அம்மா கோவிச்சுக்கக் கூடாது. கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே யுதித்தாலும், என் குறி பொய்க்காது. இன்னைக்கி மாலையே பாண்டிய ராசா கலியாணம் பேச ஆளனுப்பப் போறாரு. எட்டாவது நாள் கலியாணம். நீங்க ராணியானபிற்பாடு நான் சும்மா விடுவேனா? எனக்குச் சரியானபடி கொடுக்கணும். அதுவரெக்கும் இங்கேயே இருந்து வாங்கிக்கிட்டுதான் போவேன்' என்றாள்.

வசந்த வல்லி நகைத்துக் கொண்டே 'நான் ராணியானால் உனக்குக் கேட்டதெல்லாந் தருகிறேன்' என்று கூறி சில தானியங்களையும் நாணயங்களையும் கொடுத்தனுப்பினாள்.

* * * *

குறத்தி சொல்லிய படியே, எட்டாவது நாள் பாண்டியனுக்கும் வசந்த வல்லிக்கும் திருமணம் நடந்தது. அதை யறிந்து குறத்தி யங்கு சென்றாள். வசந்த வல்லியின் மகிழ்ச்சிக்கு எல்லையே யில்லை. குறத்தி மனம் சலிப் படையு மட்டும் ஆடைகளும், ஆபரணங்களும் வாரிக் கொடுத்தாள். அறு சுவையுடன் கூடிய உணவளித்தாள். குறத்தியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. குதித்துக் கொண்டே ஓடி வந்தாள். தன் குழந்தையை நோக்கி 'என் மவராசா! எல்லாம் உன்னதிஷ்டந்தான்' என்று முத்தமிட்டாள். தன் கணவனுக்கு அலவகளைக் காட்ட வெண்ணி வேகமாய் வந்தாள். குற்றால மலைச்சாரலிலிருந்தது அவள் குடிசை. அதின் வாயிலில் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான் அவள் கணவனாகிய சிங்கன்.

வெய்யிலிலே சென்ற பின் நிழலருமை தெரிவது போல, சிங்கனுக்கு மனைவி சென்ற பிறகுதான் அவளருமை தெரிந்தது. வீடு கவனிப்பாரின்றி பாழாய்க் கிடந்தது. தவழ்ந்து விளையாடும் குழந்தையும், களைத்து வந்தபொழுது, நகை முகத்துடன் நல்வரவு கூறும் இல்லாளும் சென்ற பிறகு அவன் வாழ்க்கையே துன்பமயமாய் விட்டது.

வேளைக்குச் சரியான உணவளிப்பாரின்றி உடம்பு பாதியாய் விட்டது. பலவிடங்களிலும் தேடியும் சிங்கி சென்றவிடம் தெரியாததால் மனம் சோர்ந்து உட்கார்ந்திருந்த அவன் முன்னால் கல கலவென்ற வளையலொலியைக் கேட்டு நிமிர்ந்தான். சிங்கியையும் குழந்தையையும் கண்டு திடுக்கிட்டான். ஆனால் அவளணிந்திருந்த கோலம் அவனைத் திகைக்கச் செய்தது. இதென்ன? சிங்கியா நீ? உன் உருவமே மாறிப் போயிருக்கிறதே! உன்னை எங்கெங்கெல்லாமோ வலை போட்டுத் தேடினேனே. சொல்லாமல் எங்கு போயிருந்தாய்? என்றான்.

அவன் கேள்வியும், சிங்கியின் பதிலுமான பாட்டு கீழே காணப்படுகிறது.

1. இத்தனை நாளாக
என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய்
நீ சிங்கி?

2. கொத்தார் குழலார்க்கு
வித்தாரமாகக் குறி சொல்ல
போனேனடா சிங்கா

3. பார்க்கிலதிசயந் தோணுது
சொல்லப் பயமா
யிருக்குதடி சிங்கி

4. ஆர்க்கும் பயமில்லை
தோணின காரியம் அஞ்சாமல்
சொல்லடா சிங்கா

5. காலுக்கு மேலே
பெரிய விரியன் கடித்துக்
கிடப்பானேன் சிங்கி

6. சேலத்து நாட்டிலே
குறிசொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா

7. நீண்டு குறுகிய நாங்
கூழுப்போல நெளிந்த
நெளி வென்னடி சிங்கி

8. பாண்டியனூர் மகள்
வேண்டுங் குறிக்காகப்
பாடகமிட்டதடா சிங்கா

9. கண்டு விரலிலே
குண்டலப் பூச்சி சுருண்டு
கிடப்பானேன் சிங்கி

10. கண்டிய தேசத்தில்
பண்டு நான் பெற்ற
காலாழி பீலியடா சிங்கா

11. மெல்லிய பூந்தொடை
வாழைக் குருத்தை
விரித்து மடித்ததார் சிங்கி

12. நெல்வேலியார் தந்த
சல்லாச் சேலை நெறி
பிடித்துடுத்தினேன் சிங்கா

13. மார்பிற்கு மேலே
புடைத்த சிலந்தியிற்
கொப்புளங் கொள்வானேன் சிங்கி

14. பாருக்குள்ளேற்ற மாங்காயலான்
தந்த பாரமுத்தாரமடா சிங்கா!



தர்மகர்த்தர்க்களாவோம்

எதிர்காலச் சந்ததியார்களின் ஒழுக்க நடைக்கு நம்மைத் தர்மகர்த்தாக்களாகக் கருதிக் கொண்டு ஆண் பெண் தொடர்பு விஷயங்களைச் செம்மையான முறையிலும் தெளிந்த அறிவோடும் கவனிப்போமேயானல் உலகில் காணப்படும் துன்பங்களில் பெரும்பாலானவை மறைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

'காந்தியடிகள்'

தர்மம் என்ற ஆடையை உடுத்திப் பாபத்தை அழகுபடுத்திக் காட்டிவிட்டால் மனிதன் அதற்கு எளிதில் அடிமையாகி விடுகிருன்.

'காந்தியடிகள்'



ய. லக்ஷ்மி நாராயணன்

[முன் கதைச் சுருக்கம்: ஆகஸ்டு இயக்கத்தின் போது கோடங்குடி கிராமத்தில் நிர்மாண சேவை செய்ய நாணுஜி வருகிறார். அந்த குடியானவன் அப்புப்படையாச்சியின் நண்பராகி அவனுடைய கஷ்டங்களைத் தீர்க்க முயற்சிக்கிறார். நாணுஜியின் நண்பர்களான சகுந்தலாவும், ராஜகோபாலும் கோடங்குடி வருகிறார்கள். நாணுஜியின் கிராமசேவையை சகுந்தலா விரும்பவில்லை. கோடங்குடி மைனர் அப்புப் படையாச்சியிடம் பகைமை யுணர்ச்சி காட்டுகிறார். காரணம் தெரியாமல் நாணுஜி அவனுக்காகக் கவலைப் படுகிறார். அப்புவின் மருமகன் உலகநாதன் நாணுஜிக்கு நண்பனாகிறான்]

அத்தியாயம் இரண்டு

இரவெல்லாம் தூக்கமில்லாமல் தவித்த எனக்குப் பனியில் நடப்பது கொஞ்சம் சிரமமாகத் தான் இருந்தது. ஆனால் இதோ எதிரே அரையில்கூட துணியில்லாமல் ஒரு கோவணம் மட்டும் கட்டிக் கொண்டு, இந்தக் கடும் பனியையும் லட்சியம் செய்யாமல் தள்ளாத வயதில் தடுமாருது வரும் அப்புப் படையாச்சியைப் பார்க்கும் போது-நகரவாசியான நாம் எல்லாம் இந்தியாவில் உள்ள ஏழு லட்சம் கிராமங்களைப்பற்றி எவ்வளவு தடபுடலாகப் பேசுகிறோம். மேடைகளிலே இந்தக் கிராமங்களைப் பற்றி அலசுகிறோம். பத்திரிகைகளிலே, புத்தகங்களிலே பத்தி பத்தியாக எழுதுகிறோம். கிராமத்துக்குச் செல்லுங்கள் என்று முழங்குகிறோம்; ஆனால் கிரியாம்சையில், உண்மையில் நமக்குக் கிராமங்களைப்பற்றி என்ன தெரியும்? இதோ கோடங்குடி குடியானவர்களின் கிராமப் பிரதிநிதியாகக் காட்சியளிக்கும் அப்புப் படையாச்சி போன்ற ஒருவனைக் கற்பனை செய்வதுகூட இயலாத காரியம்.

பனிக்குப் பயந்து கம்பளிச் சட்டை தேடும் நாகரீக புருஷர்கள், பனிக்குப் பயந்து உள்ளே அடைந்து கிடக்கும் நகர வாசிகள் எல்லாம் இந்த 'அப்புப்படையாச்சி'யினால்தானே உயிர்வாழ

முடிகிறது; இவன் இந்தப் பனியைப் பற்றி லட்சியம் செய்வதிருக்கட்டும். இந்தப் பனியிலே கூட நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி அரும்பாடுபட்டு உழைத்து நமக்கு உயிர் அளிக்கிறுன் என்பதை யாராவது அறிவார்களா? அறிவார்கள். அறிந்திருப்பதனுல்தானே தடபுடலாகப் பேசுகிறுர்கள். 'கட்டத் துணியில்லாது, குடிக்கக் கஞ்சியில்லாது, இருக்க இடமில்லாது, வாழ்க்கை நடத்தவும் வகையில்லாது தவிக்கும் குடியானவன் நிலையைப் பாருங்கள்' என்று கர்ஜிப்பார்கள்.

'பிச்சைக்காரனைப் பார்த்து கதாசிரியன் பிச்சைக்காரன் கதையைச் சிருஷ்டிப்பதால் லாபம் யாருக்கு? பிச்சைக்காரனுக்கல்ல. கதை எழுதுபவனுக்குத்தான். அதேமாதிரிதான் குடியானவனைப் பற்றி அமர்க்களப்படுத்தும் வீரர்கள், லாபம் பெறுவார்களே யன்றி, குடியானவர்கள் அல்ல. செயலளவிலே குடியானவர்களுக்கு யாரும் இதுவரை எதுவும் செய்துவிடவில்லை. ஒருவேளை குடியானவர்கள் சீர் அடைந்துவிட்டால் அப்புறம் அவர்களைப்பற்றிய நிலையைத் தடபுடல் படுத்த வழியில்லாமல், சுயநல லாபம் கிடைக்காமல் போய் விடுமே என்ற எண்ணமும் கொண்டிருக்கலாம் இந்தப் பேர் வழிகள்!

'என்னுங்க, இந்தப் பனிலே எனக்குத்தான் விதியில்லேன்னு வரேன். நீங்களுமா அலையணும்?' என்று வழக்கம்போல அவன் கேட்கவில்லை!

'மருமவப்புள்ளை உங்களைப் பாக்கணுமின்னு வந்தானுங்களே,' என்று சொல்லிக் கொண்டே கலப்பையைத் தோளிலிருந்து இறக்கினுன். நான் வியப்படைந்து 'யாரு உலகநாதனு? எப்போ பார்க்க வரானும்?' என்று பதற்றத்துடன் கேட்டேன். எனக்கு என்னமோ அந்த இளைஞனிடம் அளவுகடந்த கவர்ச்சியும் பிரியமும் ஏற்பட்டு விட்டது. அவனுடைய லக்ஷணமான முகம், பவ்யமான பேச்சு, சுறு சுறுப்பான நடத்தை யெல்லாம்தான் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

'இப்பவே பாக்கறேன்னுங்க. ராத்திரி அவனும் அவளும் என்னேட பெரிய பஞ்சாயத்து பண்ணினுங்க. நான் எதுக்கும் மசியக்கூடாது. நாயத்துக்குக் குடியானவங்க கட்டுப்படணுமே தவிர அக்கிரம்புக்கெல்லாம் வணங்கக் கூடாதுன்னு 'லா பாயிண்டு' பேசினுங்க.'

'அக்கிரம்புன்னு என்ன அப்பு?'

'ஆமாங்க. குடியானவன் கிட்டே திடீர்னு ரூபாய் கேட்டா எஅங்க? வாங்கின கடனை இல்லேன்னு யாரும் சொல்லலே. கொஞ்சங் கொஞ்சமாக் கொடுத்திடரேன்னு சரின்னு மைனரு ஒப்புத்துக்கிட்டா என்னென்று கேக்கருங்க.'

'நியாயந்தானே?'

'ஆமாங்க, நமக்கு நாயமாத் தோணுது! அவுங்களுக்குக் நாயமாத் தோணணுமில்லே? அவருக்குக் குறி யெல்லாம் பணத்திலே இல்லிங்க.'

'பின்னே எதிலே?'

'அதோ எதுக்காலே ஒரு மேடு தெரியுதுல்லே.'

'ஆமாம்,'

'அந்த மேட்டுக்கு இத்தக் கரை பூராவும் தொடர்ந்

தேத்தியா இருக்கற நஞ்சை பூராவும் அவருதுதான். ஆனா நடுவுலே அதோ ஒரு கருவ மரம் இருக்குது பாருங்க!'

'எந்தக் கருவ மரம்? வளைஞ்சு வயல்லே சாயற மாதிரி இருக்கே?'

'ஆமாங்க, அந்த வயலு ரெண்டும் என்னுதுங்க.'

'அப்படியா? அதெவ்வளவு காணி இருக்கும்?'

'ஒரு காணிதானுங்க. அது எம் பாட்டன் பூட்டன் காலத்துலே யாரோ ராசா இனாம் தந்ததுங்களாம். இப்போ மைனருக்கு அந்த "யானை தூங்கி" மேலே கொஞ்ச நாளா ஒரு கண்ணு. அதுக்காவத்தான் பணத்தைக் கேக்கற சாக்கிலே என்னை மெர்ட்டறாருங்க.

'யானை தூங்கின்னு வயலுக்குப் பேரா?

'ஆமாங்க,' அந்த நாள் ராசா ஒருத்தரு யானை மேலே அம்பாரி வந்தாரம். அவரு வந்த யானைக்கு இங்க வந்ததும் ஏதோ மயக்கம் வந்திடிச்சாம். அப்படியேமயங்கி சாஞ்சுடுத்தாம். கொஞ்ச நேரம் தூங்கவும் தூங்கிச்சாம். அதிலேருந்து இதுக்கு யானைத் தூங்கின்னு பேரு வந்ததுங்களாம். எங்க தாத்தா அடிக்கடி சொல்லுவாருங்க'

அப்புப் படையாச்சியின் இந்தப் பதிலும், கதையும் கொஞ்சம் ஆச்சரியமளித்தாலும்

அவன் அந்தக் கதையை எவ்வளவு புனித நினைவாக வைத்திருக்கிறான் என்பதும் புலப்பட்டது. அந்தக் காணி நிலத்தை விட வேறு வளமான நிலங்கள் அந்தப் பிராந்தியத்தில் உண்டு என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆனால் தன்னுடைய நிலம் பரம்பரைப் பெருமையும் பாத்தியதையும் உடையது என்பதில் அவனுக்கு அலாதி கவுரவம். இந்தப் பெருமையையும் உரிமையையும் அவனிடமிருந்து பிரிக்க வேண்டுமானால் அவனுடைய உயிரைத்தான் முதலில் பிரிக்கவேண்டும். இவ் விஷயம் மைனருக்கு மட்டும் அல்ல எல்லோருக்குமே தெரியும். ஆனால் அவனை மிகவும் நெருக்கடியான நிலைமையில் கொண்டு வைத்துவிட்டால் ஒரு வேளை இணங்கிவிடுவான் என்று அவர், அந்த மைனர் நினைத்திருக்க வேண்டும்.

நான் அவனுடன் அதிக நேரம் பேச விரும்பவில்லை. அவனுடைய வேலை என்னால் தடைபடக் கூடாதல்லவா?

திரும்பிக் கிளம்பினபோது, உலகநாதன் வேகமாக வந்து சேர்ந்தான். அவனை நான் நெருங்குவதற்குள் 'கும்புடறேனுங்க' என்று பவ்யத்துடன் வணங்கினான். பதில் வணக்கம் செய்துவிட்டு அவனுடன் சென்றேன்.

'உங்களுக்காக அவுங்க ரெண்டு பேரும் காத்துக்கிட்டிருக்காங்க,' என்று முன்னெச்சரிக்கையுடன் அவன் சொன்னதும் 'யார்' என்று தெரிந்து கொண்டேன். சரி ஏதோ நம்மிடம் தனியாகத் தெரிவிக்க விரும்புகிறான். என்பதையும் தெரிந்து கொண்டேன்.

'என் மாமன் கடன் கொடுக்க மாட்டேன்னு சொல்றாருங்க. வாங்கின கடனைக் கொடுக்க வேண்டியது நம்ம கடமைங்க. குடியானவன் யாரையும் மோசம் பண்ண மாட்டாங்க. ஆனால் அவுரு வாயாலேயே கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்தாப் போதுமின்னதை இந்தக் காதாலே கேட்டேங்க?

'ஆமாம் பண ஆசை யாரை விட்டுத் தொலையுது?

'வாஸ்தவந்தாங்க. நேத்திக்கு கலெக்டரு விருந்துக்கு ரெண்டாயிர ரூபாய் செலவாச்சு. என்னமோ வார்பண்டுன்னு பத்தாயிரம் ரூபாயாம், கொடுத்ததைத் யாராவது வாண்டான்னுங்களா? ஆனா இம்ம ரூபாயும் சம்பாரிச்சித் தந்தவங்க நாங்க தானுங்களே. எங்க கிட்டேருந்து வரவேண்டிய நானூரு ரூபாய்க்கு மட்டும் கொஞ்சம் பொறுக்கக் கூடாதுங்களா?

உலகநாதன் தன்னுடைய மன நிலையை வெகு நிதானமாக வெளியிட்டாலும் அதிலே அலாதி பட படப்பு இருந்ததை நான் கவனிக்காமல் இல்லை. இந்த மாதிரிப் பட படப்புத்தான் பின்னால் துவேஷமாக மாறி விடவும் இடங் கொடுத்து விடுகிறது. கிராமாந்திரங்களிலே இம்மாதிரி துவேஷத் தீ பரவுமானால் கொடுமையான மாறுதல்கள் ஏற்பட ஹேதுவாகும்.

'நீ சொல்வதும் சரிதான் உலகநாதா, மைனர் தம்முடைய நோக்கத்தைச் சரியாகத் தெரிவித்த பிறகு தான் நாம் எதையும் யோசிக்க முடியும். இன்று மாலைப் பள்ளிக்கூடம் நடக்கும் போது நீயும் வா. இவ் விஷயங்களைப் பற்றி பேசலாம். ஆனால்,

உன் மாதிரி இளைஞன் எந்த வித மான ஆத்திர உணர்ச்சிக்கும் இடங் கொடுக்கக் கூடாது. என்ன நடந்தாலும் பொறுமை யும் சஹிப்புத் தன்மையும் இருந் தால் தான் நல்லபலன் பெற முடியும்.

'சரிதாங்க, மாமன் வார்த் தையை மீறி நடக்கறவன் நான் இல்லங்க. ஆனால் நாயத்தை நாலுபேரு மதிக்கணுமில்லே. அதாங்க உங்களுக்கும் விஷயம் தெரிஞ்சிருக்கட்டு மின்னு சொல்லி வச்சேன்,' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

நான், என் இருப்பிடத்துக்குச் சென்றபோது அங்கே சகுந்தலா வும், ராஜகோபாலும் காத்திருந் தார்கள்.

'விடியற்கால சேவை யெல் லாம் முடிந்ததா? என்று சகுந் தலா கேலியாகக் கேட்டுவிட்டு சிரித்தாள். ராஜகோபாலும் அவளைத்தொடர்ந்து 'உங்க ளுடைய மேற்பார்வையின் போது ஒரு புதுஉலகம் தென் பட்டதா நாணுஜி,' என்று கேட் டான். நான் வியப்புடன் 'புது உலகமா? என்று பதில் கேள்வி போட்டதும் அவன் என் னுடைய அறியாமையைப் பற்றிக் கவலைப்படாதவன் போல' இன் னும் சில தினங்களில் இந்தக் கோடங்குடி ஒரு பெரிய 'நக்ஷத் திர நகராக'ப் போகிறது என்று பூடகமாகச் சொன்னன்.

'ஆமாம், நாணுஜி, நீங்கள் கிராம சேவையுடன், அந்த நக்ஷத்திரங்களைச் சீர்ப்படுத்தவும் முன் வரலாம்,' என்று மீண்டும் கேலியாகப் பேசினன் எனக்கோ அவர்கள் இரு வருடைய பூடகப்பேச்சு புரியாத தால் மவுனமானேன்.

"உங்களுக்குத் தெரியாம லிருக்கப் போகிறதா நாணுஜி, இந்தக் கிராமத்தில் இயற்கை யழகு நிறைய இருக்கிறதாம். அதனுல் என்னுடைய தங்கை புருஷன் ஒரு சினிமா ஸ்டூடியோ நிர்மாணிக்கலாம் என்று திட்டம் உருவகமாகும் ரீதியில் பேச்சுக் கள் நடந்தன.

'சினிமாவா? ஸ்டூடியோவா? இங்குமா அந்த அதிசயம்?' என்று நான் பிரமையுடன் கேட்டுவிட்டுத் திகைத்து நின்றேன்.

என்னுடைய திகைப்பைப் பொருட்படுத்தாதவன் போல் ராஜகோபால் 'உங்களுக்குச் சிரமமில்லாதிருந்தால் வாருங் களேன் கொள்ளிடக் கரைவரை போய்வரலாம்,' என்று கூப்பிட் டான். எனக்கா அங்கு செல்ல சிரமம்? எத்தனை முறைவேண்டு மானுலும் போய்வருவேன்!

தவிரவும் ஏதோ சில முக்கிய விஷயங்களைப் பேசத்தான் அவன் அழைக்கிறன் என்பதை யும் தெரிந்து கொண்டேன். நாங்கள் மூவரும் வயல் கரை யோரமாகச் சென்றபோது கொஞ்ச தூரத்தில் இருந்த வயல் வெளியில் யாரோ பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவர்கள் வேறுயாரும் அல்ல. மைனரும், உலகநாதனும்தான்! அவர் நீண்ட அங்க வஸ்திரத்தை அணிந்து கொண்டிருந்தார். தன் னுடைய சரீரத்தைத் தூக்க முடியாதவர் போல நின்றபடி அவனைக் கீழ்ப் பார்வையாகப் பார்த்தார்.

(தொடரும்)

ராஜகுமாரன் கருணாகரன்

காமு

[முன்கதை: ராஜகுமாரன் கருணாகரன் தன் தந்தையின் வியாதியைத் தீர்க்க முயற்சிக்கிறான். அவனுடைய அண்ணன்மார் இருவரும் சஞ்சீவி மருந்தை நாடிச்சென்று தங்கள் முட்டாள் தனத்தால் தோல்வியடைந்தார்கள். கருணாகரன் மட்டும் குள்ளன் உதவியால் மருந்தைக் கண்டு எடுத்துக்கொள்கிறான். மோஹினி என்பவளைப் பிறகு கல்யாணம் செய்துகொள்வதாக வாக்களித்துவிட்டு, அண்ணன்மாருடன் ஊர்திரும்புகிறான். வழியில் அண்ணன்மார் இருவரும் அவனை மோசம்செய்து விடுகிறார்கள். மூத்தவன் மோஹினி மீது ஆசைகொண்டு குகைக்குள் செல்லுகிறான்.]

ஆனால் குள்ளனை அங்கே அவன் நெடு நேரம் வரை காணவில்லை. இதுவும் ஒரு நன்மைக்குத்தான் என்று எண்ணியவனாய் மெதுவாக குகைக்குள் பதுங்கிப் பதுங்கி நுழைந்துவிட்டான்.

எதிரே இருந்த மண்டபத்தில் திடீரென்று ஒளி வீசிற்று. மோஹினி அழகான ஒரு ஊஞ்சலில் ஆனந்தமாக அமர்ந்து ஆடுவது அவனுக்குத் தெரிந்தது. அந்தக் காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது.

'ஆ! அதோ மோஹினி', என்று வாய்விட்டுக் கூவியபடி அவளை நோக்கி ஓடினான். ஆனால் அடுத்த நொடியிலேயே அவன் மண்டையில் ஓங்கி ஒரு அடிவிழுந்தது. ஐயோ! என்று அலறிக்கொண்டே அவன் சுருண்டு விழுந்து விட்டான். மோஹினியும் மண்டபமும் மறைந்து விட்டார்கள். குள்ளன்மட்டும் வந்து குறும்புச் சிரிப்புடன் ராஜகுமாரனைப் பார்த்துவிட்டுத் தரதரவென்று அவனை இழுத்துப் போய் எங்கேயோ ஓரிடத்தில் தூக்கியெறிந்தான்.

குகைவாயிலில் குள்ளனைக் காணாமல் தேடிக்கொண்டிருந்த கருணாகரன் எதிரில் திடீரென்று தோன்றினான் குள்ளன். "ஏன் தம்பி இதற்குள் திரும்பி விட்டாய்?" என்று குள்ளன் இரக்கத்துடன் கேட்டான். நடந்த

விஷயங்களை மறைக்காமல் சொன்னான் கருணாகரன்.

குள்ளன் "தம்பி வருத்தப் படாதே. உன்னுடைய அண்ணன்மார் இருவரும்தான் உன்னை மோசம் செய்துவிட்டார்கள். மூத்தவன் மோஹினியிடம் மோஹித்து இங்கு வந்து மாட்டிக் கொண்டான். இப்போது அவன் இறந்து விட்டான். எவன் காமத்துக்கு அடிமையாகிறானோ அவன் உயிருடன் இருப்பதற்குத் தகுதி அற்றவன். உன்னுடைய இரண்டாவது அண்ணன் சஞ்சீவியை எடுத்துக்கொண்டு உங்கள் ராஜ்யத்துக்கு ஓடி விட்டான். அதைத்தானே கொண்டுவந்ததாகச்சொல்லி உன் தகப்பனாரை ஏமாற்றி ராஜ்யத்தைப் பெற்றுவிட பேராசை கொண்டிருக்கிறான். ஆனால் அவனும் தண்டிக்கப் பட வேண்டும். ஆகவே நீ, மோஹினியுடன் உடனே புறப்படு. அவனுக்கு முன்னால் நீ ராஜ்யத்துக்குப் போய் விடலாம். அங்கே உன் தந்தையிடம் நடந்த சம்பவங்களைச் சொல்லு. அவர் மகிழ்ச்சியடைந்து உனக்கே ராஜ்யத்தைத் தருவார். பிறகு நீ மோஹினியுடன் சுகமாக இருக்கலாம்," என்று குள்ளன் சொன்னான்.

அண்ணன்மாரின் கெட்ட எண்ணமே அவர்களுடைய அழிவுக்குக் காரணம் ஆகிவிட்டது. எனவே இனி என்ன செய்வது? என்று வருந்தியவனாய் மோஹினியிடம் சென்றான் கருணாகரன். அவள் ஆவலுடன் வரவேற்றாள். அவளையும் அழைத்துக் கொண்டு தன் ராஜ்யத்துக்குப் புறப்பட்டான். குள்ளன் அவர்களை வழியனுப்பும் போது பின்வருமாறு சொன்னான்:

"எவன் பொறுமையாகவும், உண்மையாகவும், சுயநலமற்றவனாகவும், நம்பிக்கையாகவும் நடந்து கொள்ளுகிறானோ அவனே எனக்கு இனியவன்" என்று சொல்லி விட்டு மறைந்து விட்டான். கருணாகரன் தன் ராஜ்யத்துக்குத் திரும்பி குள்ளன் வாக்குப்படியே மோஹினியுடன் நெடுநாள் இன்பமாக வாழ்ந்திருந்தான்.

✱

பிரும்மசரியம்

பிரும்மசரியம் என்ற சொல்லுக்கு உரிய வியாக்கியானத்தை இப்போது பார்ப்போம். கடவுளோடு நம்மை இணைக்கும் நடத்தை என்பதே இதன் ஆழமான பொருளாகும்.

—காந்தியடிகள்

காணமற் போன காசு மாலை



[ராதா சகி]

வேலைக்காரப் பொன்னம்மாளைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அவ்வளவு அப்பாவியாக இருந்தாள். ஆனால் அம்மா அவளேதான் காசு மாலையை எடுத்திருக்க வேண்டும் என்று சாதித்தாள்.

அப்பாவுக்கு ரொம்ப இளகின மனசு. அவர் பொன்னம்மாளை நயத்தாலும் பயத்தாலும் பலமுறை கேட்டார். பொன்னம்மாள் கணவன் யுத்த சேவையிலிருந்து வந்து இரண்டு மாதமாகிறது, வெறுங் கையுடன்தான் வந்தான். ஆனால் சிகரெட்டும் சாராயமும் குடிக்கப் பழக்கிக் கொண்டிருந்தான். நல்ல குடியில் பிறந்த பொன்னம்மா அவள் கணவனுக்கு சிகரெட்டிற்குப் பணம் உதவுவதற்காகத்தான் எங்கள் வீட்டில் பத்துரூபாய் சம்பளத்தில் வேலைக்குவந்தாள். அவள் புருஷன் யுத்த சேவையில் ஈடுபட்டிருந்த பொழுது அவள் பயிர்த் தொழில் செய்து வந்த தகப்பனருடன் வசித்து வந்தாள். பெண்ணின்மேலுள்ள அன்பினால் மாப்பிள்ளைக்கு சோறு தான் போடுவார். அவன் சிகரெட்டு செலவுக்காகத் தினசரி எட்டணா எங்கிருந்து அவரால் கொடுக்க முடியுமா? அப்பாவுக்குக்கூட பொன்னம்மா மீது சிறிது சந்தேகம் வந்து விட்டது. தன் கணவனுக்காக உண்ட வீட்டிற்குத் துரோகம் செய்து விட்டாளோ என்று நினைத்தார்.

ஆனால் அதை அவர் வெளியிடவில்லை. சாயங்காலத்திற்குள் காசுமாலை வராவிட்டால் போலீசில் எழுதி வைப்பதாகச் சொல்லி பொன்னம்மாளை அனுப்பி விட்டார். கண்ணீரும் கம்பலையுமாக அவள் போனதைப் பார்த்து எனக்கு அழுகை அழுகையாக வந்தது.

நான் பல துப்பறியும் நாவல்கள் படித்திருக்கிறேன். அவற்றையெல்லாம் நினைவுக்குக்கொண்டுவந்து திருடனைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று முடிவுசெய்தேன். உடனே அம்மாவைக் கேட்டு இன்னொரு டம்ளர் காபிவாங்கிக் குடித்தேன். பிறகு கிச்சா அம்மா, அத்தை எல்லோரையும் விசாரிக்க ஆரம்பித்தேன். நானென்ன போலீஸ்காரனா? பள்ளிக்கூடத்தில் மூன்றாவது பாரத்தில் படிக்கும் ஒரு சிறுபெண் தானே. ஒருவராவது எனக்குச் சரியாக பதில் சொல்லவேயில்லை.

"போடி, தட்டை எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடத்துக்குப் போ" என்று அம்மா அதட்டினாள். எனக்கென்னவோ அன்று பள்ளிக்கூடம் போக இஷ்டமேயில்லை. இருந்தாலும் என் இஷ்டத்தை யார் கேட்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் வகுப்பில் உட்கார்ந்து கொண்டிருந்தேனேயொழிய என் மனமெல்லாம் காசுமாலையைக் கண்டு பிடிப்பதிலேயே மூழ்கியிருந்தது.

இயற்கைப் பொருட்பாடம் நடந்து கொண்டிருந்தது. பட்சிகள் கூடு கட்டுவதைக் குறித்து கனகாம்பரம் டீச்சர் விவரித்துக் கொண்டிருந்தாள். "பட்சிகளுக்கு இயற்கை உணர்வைத் தவிர அறிவு இல்லை. அதனால்தான் அவை பல நூற்றாண்டுகளுக்குமுன் அவற்றின் மூதாதைகள் எப்படி கூடு கட்டினவோ அப்படியே இன்றும் கட்டிகொண்டிருக்கின்றன. ஆனால் மனிதனைப் பாருங்கள். முதல் மனிதன் குகைகளில் வசித்தான். ஆனால் தற்கால மனிதர்கள் அழகிய மாளிகைகளைக் கட்டிககொண்டு வசிக்கிறார்கள்" என்று டீச்சர் லெக்சர் பண்ணிக்கொண்டிருந்தாள். என் வலது பக்கத்தில் குறும்புக்கார சியாமளா உட்கார்ந்திருந்தாள். அவள் சட்டென்று எழுந்தாள். 'டீச்சர், பம்பாயில் ஒரு காக்காய்தன் கூட்டில் பலஆயிரம் ரூபாய் பெறுமான தங்க மூக்குக் கண்ணாடிப் பிரேம்களை வைத்திருந்ததாம். பேப்பரில் வந்திருந்ததே' என்று கேட்டாள். டீச்சர், காகம் பிரேம்களின் விலைக்காகவோ அழகுக்காகவோ அவற்றைக் கொண்டுபோகவில்லை என்றும், அதாவது கூடுகட்டும் பொருள் வேணடுமென்று தேடும் பொழுது மூக்குக் கண்ணாடி பிரேம் தென்படவே அவற்றைக் கொண்டு போயிற்றென்றும் சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த வார்த்தைகள் என் காதில் நுழையவேயில்லை. ஏனெனில் என் மூளை அதிதீவிரமாக நிமிஷத்திற்கு 00 மைல் வேகத்தில் வேலை செய்து கொண்டிருந்தது.

எப்பொழுது மணியடிக்கும் என்று துடித்துக்கொண்டிருந்தேன். மணியடித்ததும் குடல் தெறிக்க வீட்டுக்கு ஓடினேன். தோட்டக்கார முனுசாமி வெண்டைப் பாத்திக்குத் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்தான்.

முனுசாமி, "நீ அந்த நெல்லி மரத்தில் ஏறுவாயா?" என்று கேட்டேன். அவன் என்னை ஒரு தினுசாகப் பார்த்தான். "ஏம்மா, மரத்திலே காயில்லையே" என்றான். அதில்லேடா. அந்தக் காக்காய் கூடுலே ஒரு சாமான் இருக்கு அதை எடுத்திண்டுவரணும்" என்றேன்.

'அம்மா, அது பாவம் அம்மா. பட்சி முட்டைகளை எடுக்கக்கூடாது" என்றான்.

'அட பைத்தியமே, எனக்கு முட்டை வேண்டாம். நீ ஏறிப்பாரு. அங்கே முட்டைகளைத் தவிர இன்னும் ஏதாவது இருந்தாக் கொண்டுவா "என்றேன்.

முனுசாமிக்கு என்மேல் உயிர். உடனே ஏறினான். மரத்தின் மேலிருந்து உரக்கக் கூவினான். "அடியாத்தா, இது என்ன இட்சிணி வேலையாக்கீதே. காசுமாலென்னு?" என்று கத்தினான்.

அவன் போட்ட சத்தத்தைக் கேட்டு அப்பா ஓடிவந்தார். அவன் கையிலிருந்த காசுமாலையைப் பார்த்ததும் அப்பா அசந்து போய்விட்டார்.

"ஏண்டி குட்டி, உனக்கெப்படித் தெரிந்தது" என்றார். நான் விவரமாகச் சொன்னதும் எல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டு புகழ ஆரம்பித்தார்கள். எனக்குரொம்ப வெட்கமாகப் போய்விட்டது. அப்பா காசுமாலையை என் கழுத்திலேயே போட்டுவிட்டார்.

பொன்னம்மா என்னை வாழ்த்தின வாழ்த்துக்கு என் வருங்காலம் முழுவதும் சந்தோஷமாகவே இருக்கும்.

பிறகு எல்லாம் கோர்வையாகத் தெரிந்து விட்டது. எண்ணெய் தேய்த்துக் கொள்ள அம்மா காசுமாலையைக்கழட்டி கூடத்தில் விசுப்பலகைமீது வைத்தாள். அதற்குள் பாட்டி கூப்பிடவே அடுக்குள்ளுக்குப் போய்விட்டாள். மூக்குத்தி தோடுஎல்லாவற்றையும் கழட்டிவிட்டு காசுமாலையை எடுக்க வந்து பார்ப்பதற்குள் காகாசுரன் அதை எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டான்.

அப்பா பொன்னம்மாளிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு அவளுக்கு 50ரூபாய் இனம் கொடுத்தார். அவள் சொன்னாள்:

"சுவாமி நீங்க என்ன செய்வீங்க. எல்லாம் என் பொல்லாத வேளை. என் மானத்தைக்காத்த சின்னம்மா அமோகமா வாழணும்."

குடும்பத்திலீடுபட்ட பெண்களுக்குத் தேவையான விஷயங்கள் எத்தனையோ உண்டு. இந்தச் சம்பாஷணையில் இங்கிதம் என்னும் அருமையான குணம் வேண்டும் என்பதை எவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறார்கள்!

பெண் உலகம்

ருக்மிணி

மீனாக்ஷி:—வாருங்கள், ருக்மிணியம்மாளா? ஏது இவ்வளவு தூரம் இந்தக் கடும் வெயிலில் வந்திருக்கிறீர்கள்?

ருக்மிணி:—அன்று மாதர் சங்கத்துக்கு வந்த பொழுது இங்கிதம் என்பதைப் பற்றி ஆரம்பித்து அது பெண்டிர்க்கு இன்றியமையாதது என்றீர்களே—அதைப் பற்றி சில விஷயங்கள் தங்களிடம் சம்பாஷிக்க விரும்புகிறேன்.

மீ:—தாங்கள் தங்கள் அபிப்ராயத்தைத் தாராளமாய் வெளியிடலாம். நானும் எனக்குத் தோன்றுகிறதைக் கூறுகின்றேன்.

ருக்மிணி:—நாம் தர்க்கிக்குமுன் நீங்கள் கூறும் இங்கிதம் என்னும் சொல்லுக்கு என்ன பொருள்?

மீ:—இங்கிதம் என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் கொள்ளலாம். முதலில் அனைவருக்கும் எளிதில் விளங்கக்கூடிய பொருளாகிய அழகு அல்லது எழில் என்னும் அர்த்தத்தைக் கொள்வோம். ஒருவர் பிறப்பில் அழகுடையவராய் இருக்கலாம். ஆனால் அதைப் பரிமளிக்கச் செய்ய வேண்டாமா? எப்படி எல்லா விதமான சாமான்கள் இருந்தும் நன்றாகச் சமைக்கத் தெரியாதவர் உண்டி ரஸிக்காதோ அவ்விதமே எழிலுடையோர் தன்மையும்.

ருக்மிணி:—அப்பாடா! இது ஒரு பிரமாதமாக்கும்—தற்காலத்தில் ஒருவர் அழகு பெற அலங்கரித்துக் கொள்ள எவ்வளவு செயற்கை முறைகள் இருக்கின்றன. அதைக் கொண்டு பிரகாசிக்க முடியாதா?

மீ:—செயற்கை அழகும் ஒரு அழகா? தாம்பூலம் தரித்தல் மருதாணி இட்டுக் கொள்ளல் முதலிய இயற்கை இங்கிதத்திற்கு முன் தற்கால நாகரிக அலங்காரமான லிப்ஸ்டிக், நகங்களுக்கு வர்ணமிடும் க்யூடெக்ஸ் எங்கே? நாம் இங்கிதம் என்னும் பொழுது அலங்காரம் என்று மட்டும் கொள்ளக்கூடாது. எப்படிப் பலவித ருசிகளைச் சேர்த்து ஒரு அரிய பதார்த்தம் செய்கிறோமோ அப்படியே இங்கிதம் என்பதில் பலவித குணங்கள் கலந்திருக்கின்றன. இது மற்றவைகளைப் போல இன்ன நிறமாயிருக்கும், இன்ன வடிவமுடையது என்று வரையறுத்துக் கூற

முடியாது. இதையே ஆங்கிலத்தில் ஸ்வீட்னெஸ் என்றும் கூறுவர். இவ்வித இங்கிதம் ஒருவருடைய நடை, உடை, பாவனைகளில் மட்டுமின்றி மனோ, வாக்கு காய அனுஷ்டானங்களிலும் விளங்கவேண்டும்.

ருக்மிணி:—அது எப்படி? ஏன் அது மாதர்களுக்கு அவசியம்?

மீ:—ஏன்? அதைப் பெண்களிடத்தில் தான் காணலாம். அது அவர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட விலையிலா மாணிக்கம். ஒரு பெண்ணுக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நாற்குணமும் அவர்க்கு உதவும் இரதம், கஜம், துரகம், காலாட்படை போன்ற நாற்படையாக புராணத்தில் கவி வர்ணித்திருப்பது நினைவில்லையா?

ருக்மிணி:—எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? நீங்கள் கூறுவது புராண காலப்பெண்டிர்க்குச் சரி. தற்கால மாறுபாட்டை அனுசரித்துப் போனால் அது பொருந்துமா?

மீ:—தற்காலமென்ன — முற்காலமென்ன? சாந்தமிருது வசனமும், வருந்துபவரிடத்து ஒரு வித அனுதாபமும் கருணையும் இயற்கையாகவே பெண்டிர்க்கு உரியது. இவ்வியற்கையினின்று மாறாக கடுகடு வென்றிருப்பரை அப்பா, இவளா ராக்ஷஸி! என்று கூறுவதைக் கேட்டதில்லையா?

ருக்மிணி:—நீங்கள் கூறுவது ரொம்ப நன்றா யிருக்கிறது—வீடு பற்றி எரியும் பொழுது சுருட்டுக்கு நெருப்பு கேட்பது போல இருக்கிறதே—எல்லாரிடத்திலும் எல்லா சந்தர்ப்பத்திலும் அன்புடன் இருக்கமுடியுமா? அல்லது திருப்திதான் செய்யமுடியுமா?

மீ:—நான் அப்படிச் சொல்லவில்லை-அது பகவானால்கூட இயலவில்லை என்பது நமக்குப் புராணங்கள் மூலம் விளங்கவில்லையா?

ருக்மிணி:—அது அப்படியிருக்க, எப்படி இங்கிதமாய் இருக்க முடியும்?

மீ:—இனிமையாய் நடப்பதென்றால் சொல்பவர் பேச்செல்லாம் கேட்பதென்பதில்லை. ஒருவர் மனங் கோணாமல் நடப்பது ஒன்று. இங்கிதமாய் நடந்து கொள்வது மற்றொன்று. ஒரு காரியம் ஒருவருக்குப் பிரதிகூலமாய் இருக்கலாம். அச்சமயத்திலும் இங்கிதமாகிய குணம் மலரினுள் மணம் போல அமைந்திருத்தலே சிறந்தது.

ருக்மிணி:—அப்படி என்றால் வாய் வாழைப்பழம் கை கருணைக் கிழங்காக்கும்.

மீ:—இது வெளி வேஷமல்லவா? இயற்கை இங்கிதத்திற்கும் செயற்கைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதமுண்டு.

ருக்மிணி:—அது எப்படி?

மீ:—உண்மை இங்கிதம் மடந்தையர்க்கு ஓர் அணி. எப்படி ஒரு தாயானவள் தன்னலங் கருதாது ஒரு குழந்தையைப் பராமரிக்கிறாளோ அப்படியே இங்கிதமுடையவரும் பிறரிடம் கைம்மாறு எதிர் பார்ப்பதில்லை. இவர்கள் மனித இயல்பிலுள்ள ரஜோதமோ குணங்களை நீக்கி சத்வகுண மூர்த்தியாய் இருப்பவர்கள்.

ருக்மிணி:—நீங்கள் கூறும் தத்துவம் சாதாரணமானவர்களுக்கு முடியாது. அது ஞான முற்றி நன்மை தீமை இரண்டி

லும் கடவுளின் அம்சத்தையும் அவர் சிருஷ்டியில் எழிலையும் பருகும் ஞானிகளுக்கே கூடும். ஒரு குழந்தை ஒரு தப்பு செய்து விட்டால் சாதாரணமாய் ஒருவர்க்கு அதைக்கண்டித்து அடிக்கத் தோன்றுமே தவிர அக்காரியத்தின் பலாபலன்களை கனிவுடன் கூற முடியாது.

மீ:—முதலில் அது அசாத்தியமாய்த்தானிருக்கும். ஆனல் யோசித்துப் பார்க்கையில் காரியம் என்னவோ நடந்து விட்டது. அது தப்பு என்று அந்தக் குழந்தையே உணரும் வகையில் நயமாய்க் கூறி அதைத் திருத்தக் கூடாதா? அன்பினல் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை. சர்க்கரையினின்றும் அதன் சுவையைப் பிரிக்க முடியாதது போல மனிதர்க்கு இங்கிதம். அதிலும் கோவிற் சிகரம் போல் பெண்டிர்க்கு ஓங்கிவிளங்கும் குணமாகும். இது பற்றியே பொறுமை வாஞ்சை ஆதரவு முதலியவற்றுடன் குழந்தைகளை நடத்துவர் பெண்டிர் என்று அநேக பள்ளிகளில சிறு வகுப்பிற்கு ஆடவரைக் காட்டிலும் பெண்டிரைத் தற் காலங்களில் வைக்கிறார்கள். நுண்ணிய அரிய குணங்களைச் சிறு வயதிலேயே வளர்க்க முயல வேண்டும்.

ருக்மிணி:—தற் காலத்தில் பெண்களும் ஆண்களைப் போல சரிசமமாய்த் தொழில் செய்கையில் இக்குணமும் மாறிவிடாதா?

மீ:—அது தான் இல்லை—அவர்கள் எத் துறையில் சென்றாலும் இவ்வியற்கைத் திலகம் அவர்களை நிழல் போலவே தொடர்ந்து வருகிறது. சாந்தம், பொறுமை, கருணை உடையர் மாதர் என கவிகள் வர்ணிக்கின்றனர். உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கும் சினத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அலங்கரிப்பதில் தேர்ச்சியும் ருசியும் பெரும்பாலும் ஸ்திரீகளுக்குத்தான் உண்டு. உண்மை, பிரேமை, அஹிம்சை பந்தமின்மை இவை யாவும் இங்கிதத்தின் மாறு ரூபமே. நவரத்தினங்களைச் சுத்தப் படுத்தி ஒளிரச் செய்வது போல இவற்றையும் முயற்சியால் ஒளி பெறச் செய்யலாம்.

ருக்மிணி:—ஏதோ முகஸ்துதிக்காகச் சொன்னேனென்று எண்ண வேண்டாம். தங்களுடன் இதுவரை வாதித்ததிலிருந்து பெண்டிர்க்கழகு இங்கிதம் என்பது உள்ளங் கை நெல்லிக் கனி போல் விளங்குகிறது. நேரமாய் விட்டது. நான் வருகிறேன்.

*

பெண் ஆணுக்குத் தோழி. ஆணைப்போலவே பெண்ணுக்கும் சமமான அறிவுத்திறன் உண்டு. அவனுடைய ஈடுபாடுகளில், சிறுசிறு அம்சங்களில்கூட கலந்து கொள்ளவும், அவற்றில் பங்குபெறவும் பெண்ணுக்கு அதிகாரமுண்டு. அவனைப்போலவே அவளுக்கும் சமமான சுதந்திரமும், உரிமையுமுண்டு.

—காந்தியடிகள்

இராவணன் தவறு

ரஞ்சனா

காட்சி I

பாத்திரங்கள்:—இராவணன்,
நாரதர்,
அமைச்சர்கள்,
சேவகன் முதலியோர்.
மண்டோதரி.

காட்சி. 1

[தர்பார் மண்டபத்தில் இராவணனும் அமைச்சர்களும்)

இரா:—அமைச்சரே, நமது இராஜ்யத்தில் மக்களுக்கு ஏதேனும் குறைவுண்டா?

முதல் அமை:—மஹா ப்ரபோ! தேவர் முதல் எவராலும் சாகா வரம் பெற்று, தேவேந்திரன் உள்பட சகலமான அரசர்களையும் அடிமையாய்க் கொண்ட மஹா பராக்ரமசாலியான....

நார:—(பிரவேசித்து) அப்பனே, இப்பெரிய புகழ்மாலையை அணிந்தவர் யார்?

இரா:—வாரும், நாரத மகரிஷே, நீர் திரிலோக சஞ்சாரியாயிருந்தும், இந்த அகில புவனத்தையெல்லாம் நடு நடுங்கச் செய்பவன் நான் ஒருவனேதான் என்று அறியாமற் போனது விந்தையே. இன்னும் கேளும்; வாயு தேவன், வருணன், சூரியன், சந்திரன் முதலானவர்கள் எனக்குக் குற்றவேல் செய்யும் அடிமைகள்.

நார:—ஆஹா! அப்படியா? அறிந்து கொண்டேன். நவக்கிரக தேவர்களைத்தான் உனது சிம்ஹாஸனத்திற்குப் படிகளாக்கி யிருக்கிறாயோ?

இரா:—ஆம். ஸ்வாமி, என்னை அந்தச் சனீஸ்வரனாலும் ஒன்றும் செய்ய முடியாதென்பதை இப்பொழுதாவது அறிந்து கொள்ளுங்கள்.

நார:—ஆனாலும் நீ இத் தேவர்களின் முதுகின் மேலேறிச் சிம்ஹாஸனத்தில் உட்காருவது சிறந்த வீரனுக்குத் தகாது. அவர்கள் மார்பின் மேல் நடக்க வேண்டும்.

இரா:—இத் தவறை இப்பொழுதே திவர்த்திக்கிறேன். யாரங்கே? இப் படிகளைத் திருப்பிப் போடு.

சேவ:—சித்தம். பிரபோ! (படிகளைத் திருப்பிப் போடுகிறான்)

நார:—சபாஷ்!

இரா:—(பெருமையாக) முனிவரே, இனி எனக்கு என்ன குறை? என்னைப்போல் பாக்கியசாலி எப்பொழுதாவது இருந்ததுண்டா?

நார:—பொறு. எல்லாம் இருந்தும் உனக்கும் ஒரு நாள் அழிவுண்டு.

இரா:—ஏது? எனக்கா?

நார:—ஆம். நீ உன் பராக்ரமத்தையே நினைத்துக் கொண்டு தேவர், முனிவர் மூலம் சாவு கூடாதென்று வரம் பெறும் சமயம், கேவலம் நரனை மறந்து விட்டாய். ஆகையால்

நீ அயோத்தி மன்னன் தசரத னுக்கும் கோசலைக்கும் பிறக்கும் மகனால் செயற்கையில் இறப்பாய்.

இரா:—ஹோ...ஹோ...ஹோ...ஹோ ...(கேலியாக நகைத்து) நன்று நன்று தவசியே! தசரதனுக்கு இன்னும் விவாகம்கூட நடக்கவில்லையே?

நார:—இன்னும் எட்டு நாட்களில் வெகு விமரிசையாக நடைபெறும். சரி, நான் வந்து நேரமாகிறது. விடை கொடு.

காட்சி II

இடம். அந்தப்புரம்.

பாத்திரங்கள்: இராவணன், மண்டோதரி.

மண்:—நாதா, இன்று தங்கள் சபைக்கு நாரத மகரிஷி வந்திருந்தாராமே? என்ன விசேஷம்?

இரா:—அவருக்கென்ன வேலை! தசரதனுக்கும், கோசலைக்கும் இனிமேல் கலியாணமாகிப் பிறக்கப் போகும் பிள்ளை என்னைக் கொல்லப் போகிறானாம். என் வல்லமையை அறியாமற் பேசுகிறார். அவர் சென்ற உடனேயே நான் தகுத்த வல்லர்களை ஏவி, திருமணத்திற்கு தசரதன் செல்லும சமயம், அவன் படகை நடுக் கங்கையில் கவிழ்த்துவிடவும், கோசலையை இங்கு சிறை பிடித்து வரவும் கட்டளையிட்டு விட்டேன்.

மண்:—எனக்கென்னவோ இவையெல்லாம் நல்லதற்கல்ல என்று தோன்றுகிறது. தங்களைக் கொல்லப் போகும் மனிதனின் பெற்றோருக்கு இன்னும் விவாகங்கூட நடக்கவில்லை. அதற்குள் ஏனிந்த கலக்கம்?

இரா:—(கோபமாக) ஏதேது? நீயும் அந்த நாரதர்போல் என் செய்கையில் குற்றம் காண முற்பட்டு விட்டாய். அவர் என்னவென்றால், நான் நவக்கிரகங்களின் முதுகின் மேல் நடக்கிறேன் என்றார்; நீயோ......

மண்:—தாங்கள் அதற்கு என்ன செய்தீர்கள்?

இரா:—இன்னொருவரா யிருந்திருப்பின், அப்பொழுதே பல்லை உடைத்திருப்பேன். நாரதராயிற்றே என்று அவர் சொன்னவாறு அப்படிகளைத் திருப்பிப் போடச் செய்தேன்.

மண்:—அய்யோ! அந்தச் சனீஸ்வரன் பார்வையில் பட்டால் கெடுதல் என்று சொல்லுவார்களே.

ரா:—என் காலால் மிதிபடும் அவன் என்னை என்ன செய்வான்? எல்லாம் எனக்குத் தெரியும். நீ வாளாவிரு.

காட்சி III

இடம்—இராவணன் அறை.

இரா:—பொழுது புலர்ந்தால், தசரதனும், கோசலையும் தம்பதிகளாய் விடுவார்கள். விடிய இன்னும் இரண்டு நாழிகைகளே இருக்கின்றன. போனவர்கள் ஒருவரையும் காணவில்லையே?

யோசிக்கிறான்

சேவ:—(பிரவேசித்து) பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

இரா:—வந்துவிட்டாயா? காரியம் ஜயம்தானே?

சேவ:—இராவணேஸ்வரனின் கட்டளை எப்பொழுதாவது

மாறுபட்டதுண்டா? தசரதன் ஏறியிருந்த படகு கங்கையில் மூழ்கிவிட்டது. கோசலையை யும், அவள் உறங்கிக் கொண் டிருந்த கட்டிலுடன் கொண்டு வருகிறார்கள்.

இரா:—நல்லது! அவளை அப்ப டியே ஒரு பெட்டியில் பூட்டி நமது முத்திரையிட்டு வருண னிடம் கொடுக்கச் சொல்லு.

சேவ:—சித்தம் பிரபோ! (போகி ருன்)

இரா:—(தற்பெருமையுடன்) வரட்டும் அந்த நாரதர்!

[இராவணன் தர்பார்]

நாரதர்.—(பிரவேசம்) நாராயண ....நாராயண...... எல்லோரும் வந்திருந்தும், நீ இல்லாமற் போனது எனக்கு வருத்தமா யிருந்தது. இராவணு! நீ மட்டும் என் விவாகத்திற்கு வரவில்லை?

இரா:—(திடுக்கிட்டு) நாரதரே! என்ன சொல்லுகிறீர்? யாரு டைய விவாகம்?

நார:—உன் பகைவனின் தாய் தந்தையருடைய'விவாகத்தைத் தான் சொல்லுகிறேன்.

இரா:—யாருக்கு? இதென்ன! நீர்கனவு கண்டீரோ?

நார:—இல்லை இல்லை. சத்திய மாகச் சொல்லுகிறேன்.

இரா:—சரி. நீர் கூறுவது உண்மையாயிருந்தால், நீர் என்ன சொன்னுலும் அதன் படி நடக்கிறேன்.

நார:—இச் சபையி லுள்ளவர் சாக்ஷியாக சத்தியம் செய் வாயா?

இரா:—நான் ஒரு முறை சொல்லி விட்டால் வாக்கு மீற மாட்டேன். கேளும் தாங்கள் கலியாணமாகி விட்டதாகக் கனக்கண்ட கோசலை இதோ இங்கு வருணனிடம் பத்திர மாக யிருக்கிருள். அவளை ஒரு பெட்டியில் வைத்து...

நார:—எங்கே? அந்தப் பெட்டி யைப் பார்க்கலாம்?

இரா:—யாரங்கே? வருண னிடம் பெட்டியை நாம் கேட்டதாகச் சொல். (ஒரு பெரிய தங்கப் பெட்டியைத் தாங்கியவாறு வருணதேவன் வருகை)

வரு:—மஹாப்ரபோ—இதோ தங்கள் முத்திரையிட்டுப் பூட்டியிருக்கிறது.

இரா:—என்ன நாரதரே? இப் பொழுது என்ன சொல்லு கிறீர்?

நார:—ஏனிந்த அவசரம்? பெட்டிக்குள் என்ன இருக் றது என்று பார்ப்போம்.

இரா:—சரி உம்முடைய ஏமாற் றத்திற்கு நான் பொறுப்பாளி அல்ல. (பெட்டியைத் தானே திறந்து, ஸ்தம்பித்து நிற்கிருன். அதனுள்ளிருந்து மணக்கோ லத்தில் தசரதனும், கோசலை யும் வெளிவருகிருர்கள். பயத் துடன் நாலாபக்கமும் பார்க்கி ருர்கள்.)

இரா:—ஹா...இதென்ன! இது யாருடைய சூழ்ச்சி இவர்கள் இங்கேயே செத்துத் தொலை யட்டும் (வாளையுருவுகிருன்.)

நார:—(அவன்கையைப்பிடித்து) பொறு. இவர்களுக்குத் திரு மணம் எவ்வாறு நடந்த தென்றுகூட நீவிசாரிக்க வில்லையே.

இரா:—இதைக் கேட்க வேறு வேண்டுமா? எல்லாம் உம்

முடைய வேலையாகத்தானிருக் கும்.

நார:—நீ கூறுவது தவறு. இராவணா, கேள். விதியை வெல்ல எவராலும் முடியாது. ஒரு பேதைப் பெண்ணை பெட்டியில் அடைத்தும், தசரதன் கப்பலை உடைத்தும் உன் வாழ்க்கையை நிலை நிறுத்திக் கொள்ள மனப்பால் குடித்தாய். ஆனல் விதி உன்னை மடக்கி விட்டது. இப்பெட்டியை வருணன் மகரம் என்னும் திமிங்கிலத்தினிடம் கொடுத்தான். அது பெட்டியை ஒரு தீவின் கரையில் வைத்துவிட்டு இளைப்பாறியது. அங்குதான் மூழ்கிப் போன படகில் இருந்து தப்பிய தசரதன் இருந்தான். அச்சமயம், அவர்களுக்காக குறித்திருந்த முகூர்த்த வேளை நெருங்கியது. இவ்வுலகத்தை காத்து இரக்ஷிக்கும் பரமாத்மாவின் தாய் தந்தையின் விவாகமாதலால், எல்லாத் தேவர்களும் இவ்வேளையை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தார்கள். பிறகு ...கேட்பானேன்? வெகு விமரிசையாய்...

இரா:—போதும். நீர் இவர்களின் திருமணத்தில் பிரசன்னமாய் இருந்ததைப் போல இப்பொழுது இவர்களின் அந்திய காலத்தையும் கண்டு களியும்.

மண்:—வேண்டாம் நாதா! சராசரங்கள் எல்லாம் உமக்கு கீழ்ப்படிந்து இருக்க, வீணுகக் கவலைப்படுவது உம்போன்ற வீரருக்கு அழகா? உம். பகைவன் ஜனனமான பிறகு அவனுடன் நேருக்கு நேர் யுத்தம் செய்வதுதான் தருமம். தவிரவும், ஒரு பாவமும் அறியாத ஒருஇளம் தம்பதிகளின் வாழ்வைக் கெடுக்க வேண்டாம்.

நார:—ஆம் இராவணா! நீயே சற்று முன் நான கூறும் விதம் செய்வதாய் வாக்களித்தாய். உன் ஆட்களையே ஏவி இவர்களை அயோத்திக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்.

இரா:—(முகம் குன்றி) சரி. என் வாயாலேயே நான் கெட்டேன். வருணா! நம் புஷ்பக விமானத்தில் இவர்களை அயோதிக்கு அழைத்துச் செல்.

காப்பியடிக்க வேண்டாம்

மேனாட்டுப் பெண்களை நம்நாட்டுப் பெண்கள் காப்பியடிக்கவேண்டாம். அவர்களின் போக்கு அவர்களது நாட்டுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாக இருக்கலாம். நம்நாட்டு நிலைக்கு அது ஒத்துவராது. எவை இந்த நாட்டின் சூழ்நிலைக்கும் மனநிலைக்கும் ஒத்திருக்கின்றனவோ அந்த முறைகளையே நமது பெண்மணிகள் கடைப்பிடிக்கவேண்டும். நமது வாழ்வில் நல்லவற்றைப் பேணிப் பாதுகாப்பதாயும் தீயவற்றைத் தயக்கமின்றி ஒதுக்கித் தள்ளுவதாகவும் இருக்கவேண்டும்.

—காந்தியடிகள்



அழகுக் குறிப்புகள்

குமாரி சியாம்

அழகுக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவது எப்போது?

என்ன பைத்தியக்காரக் கேள்வி என்று நினைக்கிறீர்கள் அல்லவா? உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுங்கள். நிலைக் கண்ணாடியின் முன் நிமிர்ந்து நின்று உடலழகை ஒரு கணம் உற்றுப் பாருங்கள். முகத்தின் பொலிவை சற்று முன்னெச்சரிக்கையுடனிருந்தால் அதிகப்படுத்திக் கொண்டிருக்க முடியாதா என்று எண்ணிப் பாருங்கள். அதோ பொட்டில் 'தெரிகிறதே! அவலட்சணமான வடு ஒன்று. அழகின் அஸ்திவாரம் இளமையிலேயே நாட்டப்பட்டிருந்தால் அது ஏற்பட்டிருக்குமா? அல்லது அப்படி நேர்ந்திருந்தாலும் அது இப்படி நிரந்தரமாக முகத்தை அவலட்சணப்படுத்த விட்டிருப்பீர்களா? அதோ முகத்தின் வலதுபுறம் கோணுகிறது பார்த்தீர்களா? என்ன அசங்கியமாயிருக்கிறது? இவ்வளவு அருவருப்பாக இருக்குமென்பதை அறிந்திருந்தால் எப்பொழுதே முகத்தை ஒருபுறம் கோணலாக்கி "நாப்புக் காட்டுவதை"த் தடுத்திருப்பீர்கள். உங்கள் தாயார்தானாகட்டும் "பாட்டி மூஞ்சி எப்படி இருக்கு காட்டும்மா, அத்தை எப்படி நடக்கிறா" என்று உங்கள் அழகிய முகத்தை சிடுத்துக் காட்டுவதையும் நிமிர்ந்த உடம்பை வளைத்துக் காட்டுவதையும் கண்டு ஆனந்தப்பட்டிருப்பாளா?

அந்தக் கோரைப் பல் என்னமாய் முகத்தைக் கோரமாக்கி விட்டது. ஐயோ, அப்பவே தெரிந்திருந்தால் அந்தப் பல் விழுந்தவுடன் நாக்கைப் பொந்தில் விட்டுக் குடைந்து குடைந்து இப்படி "திருகு பல்லாய்" என்னும் 'அழகு'ப் பெயர் புனை பெயராக வந்திராதே.

கண்ணாடி முன் நின்று இப்படி ஏங்கும் பெண்களும் உண்டு. ஆனால் பல பெண்களுக்குத் தங்கள் முகத்திலுள்ள கோணல் தெரிவதேயில்லை. தங்களை அதிரூப அமராவதியாகவே நினைத்து மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மணப் பருவம் வந்தபிறகு அவர்களைப் பார்க்க வரும் இளைஞர்கள் பெருத்த வரதட்சணையைக் கூட எண்ணிப் பார்க்காமல், 'ரட்சை' கட்டிக் கொள்ள மந்திரவாதிகளைத் தேடி ஓடுகிறார்கள்.

மேனியழகைக் கவனிக்க மிக மிக இளம் பிராயத்திலிருந்தே அடிகோலி விடவேண்டும். அதனால் இயற்கையழகு கெடாம

லிருப்பதோடு சுகாதாரமும் அபி விருத்தியாகும்.

பதினைந்து வயதுக்குப் பிறகு பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுப்பதாக மாப்பிள்ளைக்குப் பசப்பு வார்த்தை சொல்வதை விட பச்சிளங்குழந்தைக்கே அழகில் விருப்பத்தை உண்டாக்குவது மேலான முறையல்லவா?

அழகுக்கு அஸ்திவாரம் மேல் தோலிலில்லை. நல்ல தேக சுகத்திலும் பரிசுத்தமான பழக்க வழக்கங்களிலும் தான் அது அடங்கியிருக்கிறது. இதை நன்ருக மனதில் பதிய வைத்துக் கொள்ளும் தாய், தன் குழந்தைகளின் அழகைக் கண்டு ஆனந்திப்பதே யன்றி தன் குழந்தைகளை எல்லோரும் போற்றி அன்பு சொரிவதையும் கண்டு மகிழலாம். டாக்டர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம் மிச்சப்படும். ஆடைகளைக் குழந்தைகள் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரிந்து கொண்டு விடுவதால் அழுக்ககற்ற சோப்பும் வண்ணான் கூலியும் புதுத்துணியும் கிரயமும்கூட மிச்சமாகிவிடும்!

எவ்வளவோ குழந்தைகளைக் கனவிலும் கூடப் பார்க்காதவள் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிருள் என்று சில சகோதரிகள் நினைக்கக்கூடும். ஒரு உதாரணம் கொடுக்கிறேன்.

என் கணவரின் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்திருந்தார். என் குழந்தைகளைப் பார்த்து பிரும்மானந்த மடைந்தார். நல்ல குளிர்காலத்திலும் என் குழந்தைகளின் மூக்கு உலர்ந்திருப்பதைக் கண்டார். அவர்களின் ஆடைகள் துளிகூட அழுக்கில்லாமலிருப்பதை வியந்தார். வெல்வெட் போன்ற அவர்கள் சருமைத்த தடவி அந்த ஸ்பர்ச ஆனந்தத்தில் மெய்ம்மறந்தார். நல்ல கெட்டிப்பட்ட அவர்களது சதைகளைப் பிடித்துப் பார்த்து ஆச்சரியமடைந்தார். "உங்கள் வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள எத்தனை ஆட்களிருக்கிருர்கள்" என்ருர்.

"என், நானொருத்தி யிருக்கிறேனே போதாதா?" என்றேன்.

"உண்மையாகவா?" என்ருர்.

"வீடு விளக்கவும், பாத்திரங்கள் துலக்கவும் ஒரு வேலைக்காரி உண்டு. அவளுக்கும் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாள். மற்றபடி வேறு ஆள் கிடையாது" என்றேன்.

"சமையலுக்கு?" என்று கேட்டார்.

"என் குழந்தைகளுக்கு என் கையால் சமைத்துப் போட்டால் தான் எனக்குத் திருப்தி" என்றேன்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி முடிகிறது. என் வீட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு செவிலித்தாய் வைத்திருக்கிறேன். அதற்காக மாதம் மூந்நூறு ரூபாய் செலவழிக்கிறேன். எனினும் நான் வெளியே வரும்போது எதாவது ஒரு குழந்தை என் மேல் பட்டுவிட்டால் நான் உடைகளை மாற்றவேண்டி யிருக்கிறது. அவர்களுக்கு மூக்கு ஒழுகாத நாளே கிடையாது...." ஆவேசத்தோடு பேசிக் கொண்டே போனார்.

வீட்டில் சமையலுக்கு ஆள், குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஆள், பள்ளிக்கூடம் கொண்டுபோக ஆள், பிரைவேட்

...த்தியாயர் இப்படியே அடுக் ...ர் அவர்.

...யப்பினால் என் கண்கள் ...ன.

...ங்கள் மனைவிக்கு உடம்பு ...ல்லையோ?'' என்று கேட் ...ன்.

''என், அவளுக்கு உடம்பு ...ன்றுமில்லையே'' என்றார்.

''அப்படி யென்றால் அவர் என்ன செய்கிறார்'' என்று கேட் டேன்.

''இந்த வேலைக்காரர்களைக் கட்டி மேய்க்கவே அவளுக்கு நேரம் போதவில்லை'' என்றார்.

என்னால் பொறுக்க முடிய வில்லை. சிரித்தே விட்டேன். ...த வேலைக்காரருக்கும் அவர் ... எவ்வளவு யோக்கியமான ...ளாக் இருந்த போதிலும், ...ய்க்குத் தன் குழந்தை மீது உள்ள அன்பும் ஆதரவும் இராது.

எங்கேயாவது ஒரு பூனை தன் குட்டியை மற்றொரு பூனை நக்கி சுத்தம் செய்ய விடுவதைப் பார்த் திருக்கிறீர்களா? ஏன், மிக மிகப் பணக்காரர் வீட்டில் வளரும் பூனைகூடத்தான். அந்தப் பூனை ...யைப் பராமரிக்கப் பத்து ஆட் ...ள் இருக்கலாம். ஆனால் அதன் ...ட்டிகளின் தேவையை அதுவே ...ான் கவனித்துக் கொள்ளும். ...ற்ற எவரையும் அண்டவிடாது. இந்த எளிய, மூல தத்துவம் பல உயர்ந்த மூளைகளில் புகுவதில்லை. அதனால்தான் நம் நாட்டில் வறுமையும் பிணியும் தாண்டவ ...ாடுகின்றன. குழந்தைகளுக்கு ...வர்களின் மழலைப் பருவத்தி ...லேயே அழகின்மீது விருப்பத்தை ...யும் அசுத்தத்தின் மீது வெறுப் ...பையும் உண்டாக்கிவிட வேண் டும். நம் நாட்டில் 'சூனும்' வயிற்றைப் போட்டுக்கொண்டு மூக்கு ஒழுக வாயில் கட்டை விரலைப் போட்டுக்கொண்டு அம் மணக் கட்டையாய் நிற்கும் குழந்தைகளை எந்தத் திருப்பத் திலும் காணலாம். காந்தி மகா னின் இரத்தம் சிந்திய இந்தப் புண்ணிய பூமியின் வருங்கால சந்ததிகளா இப்படி இருக்க வேண்டும்! இந்தக் கோரத்தைத் தாய்மார்கள் எப்படி சகித்துக் கொள்கிறார்கள். தங்கள் முகத் திற்குச் சோப்புத் தேய்த்துப் பௌடர் பூசி மையிட்டு அழகு செய்து கொள்ளும் நேரத்தில் ஒரு பகுதியை இந்தக் கோரத்தை நிவர்த்திக்க உபயோகிக்க வேண் டாமா?

அழகின் அஸ்திவாரம் சருமத்தி லில்லை. மிக மிக ஆழமாக நல்ல சுகாதாரத்திலும் பரிசுத்தமான பழக்கங்களிலும்தான் அடங்கி யுள்ளது.

சிறு குழந்தைகள் ஆணாகிலும் சரி பெண்ணாகிலும் சரி நகங் களைச் சுத்தமாக வைத்துக்கொள் ளவும், மயிரை வாரிக்கொள்ளவும் பற்களை வெண்மையாக வைத் துக் கொள்ளவும் தொட்டிலி லிருந்தே பழக்கப்பட வேண்டும். ''தொட்டிற் பழக்கங்கள் சுடு காடு மட்டுமல்லவா?''

குழந்தைப் பருவத்தில் மயிர் நன்றாக வாரப்பட்டு தலை சுத்த மாக இருந்தால் மயிர்க்கோளங் கள் தூண்டப்பட்டு கேசம் நீண் டும் பளபளப்பாகவும் சுருள் சுருளாகவும் இருக்கும். பொடுகு, பேன், மண்டைக்குத் தல் போன்ற உபத்திரவங்கள் வராது.

மயிரில் எண்ணெய்ப் பசை அதிகமாக இருந்தால் அடிக்கடி சோப்பால் கழுவக்கூடாது.

அதனால் திணகோளங்கள் அதிகமாகத் தூண்டப்படும். மயிரும் எளிதில் உதிரும் தன்மையடையும்.

எல்லாக் குழந்தைகளும் பற்களைத் தேய்க்க விருப்புகின்றன. அவர்களுக்கு மேலும் கீழுமாகத் தேய்க்கப் பழக்கிக் கொடுக்க வேண்டும். கரகரப்பான பொடியால் வலது புறத்திலிருந்து இடமாகத் தேய்ப்பதால் இருகுகள் கிழிந்து போவதுடன் பற்களின் பளபளப்பும் அழிந்துவிடும்.

வேலங்குச்சியை 'பிரஷ்'போல மென்று மேலுங் கீழுமாகத் தேய்ப்பது மிக மிக உசிதமான முறை,

இரவில் படுக்குமுன் ஒருமுறை பற்களை சுத்தம் செய்யும் பழக்கத்தை குழந்தைகளுக்கு ஏற்படுத்தி விட்டால் அவர்கள் ஆயுட்காலம் முழுதும் பற்களின் உபத்திரவமில்லாமலிருக்கும் பாதுகாப்புக்கு அடிகோலியாய் விட்டதெனக் கொள்ளலாம்.

குழந்தைகளின் தின் பண்டங்கள் சீடை முறுக்கு,பொரிவிளங்காய் உருண்டைபோல் பற்களுக்கு நல்லவேலை கொடுக்கக் கூடியவைகளாக இருக்கவேண்டும். அதிக காரமான பண்டங்களை உட்கொள்வதால் முகத்தில் கடுகடுப்பும் சுருக்கங்களும் உண்டாகும். தித்திப்புப் பண்டங்கள் அதிகமானல் பற்கள் சீக்ரகிம் நோய்வாய்ப்படும்.

கூடியவரையில் சத்துவ ஆகாரமாகவும், அறுசுவைகள் சமமாகக் கலந்தும் இருக்க வேண்டும். சிறு பெண்கள் இயற்கையாகவே தங்கள் நகங்களைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்ள விரும்புகிறு[illegible] நகங்களை எஃகிலான ஆயு[illegible]ளால் வெட்டுவதால் அ[illegible] முரடாகவும் சீக்கிரம் [illegible]டையக் கூடியவைகள் ஆகின்றன. அதிக [illegible] சொற''ப்பிஃலாத உப்புக்[illegible] தத்தால் நகங்களை இராக[illegible]டால், நறுக்க வேண்[illegible] பிரமேயமே ஏற்படாது. ந[illegible]களைத் தேய்த்து அலம்பி[illegible] பிறகு சிறிது வேஸ்லைனை 'மஸாஜ்' செய்து ஒரு ஆரஞ்சு அல்லது எலுமிச்சம் குச்சி[illegible] பருத்தியை சுற்றி பின்னுக்[illegible] தள்ளலாம்.

முகததிற்கு அடிக்கடி சோப்புப் போட்டுத் தேய்ப்பதால் சோப்பிலிருக்கும் க்ஷார வஸ்துவால் சருமம் உயிரற்று [illegible]வில் சுருங்க நேரிடும். [illegible] வெதுப்பான ஜலத்தில் ஒரு [illegible]னல் துணியை நனைத்து மு[illegible]தைத் தேய்த்து துடைத்து பிறகு குளிர்ந்த ஜலத்தில் கழுவி ஒ[illegible] முரட்டுத் துவாலையால் துடைத்து விட்டால் முகம் சுத்தமாகவும் பள பளப்பாகவும் இருக்கும். சருமமும் மிருதுவாக இருக்கும்.

நம் நாட்டில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண்களின் முகம் வெகு விரைவில் முதுமை[illegible] குறி காட்டி விடுகிறது. அத[illegible] முக்கிய காரணம் அவர்[illegible] வெயிலில் அதிகமாகச் செல்வ[illegible]தான். தற்காலத்துப் பெண்மணிகள் ஆண்களுக்குச் சரியாகக் கல்வி கற்று பல தொழில்களி[illegible]லும் புகுவதால் அவர்கள் நம[illegible] மேனாட்டுச் சகோதரிகளை[illegible] போல முகத்திற்கு நி[illegible] கொடுக்க ஒரு குடையைக் க[illegible]டாயம் உபயோகிக்க வேண்டு[illegible]

*

Printed and Published by Vai. Govindan at Shakti Press., Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras. Editor: S. VISALAKSHI.

197647



புன்னகை பூத்த முகத்தினள்
பொலியும் அழகுப் பூமடந்தை

நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வ[illegible] களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலே வேண்டியதில்லே. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAM[...]